# குழந்தைகளுக்கு இனிய பாடல்களும் விளக்கங்களும்

(தொட்டிலிலிருந்து தொடக்கக் கல்வி வரை)

ஞானமனோகரி ஸ்ரீஸ்கந்தராஜா

இராமநாதன் பதிப்பகம்
25, மூன்றாவது வீதி,
ஆபிசர்ஸ் காலனி விரிவு,
முகப்பேர், சென்னை - 600 037.

RangaRakes
tamilnavarasam.com



## விநாயகப் பெருமான் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

## குரு ஸ்துதி

குரு பிரம்மா குரு விஷ்ணு
குரு தேவோ மகேஸ்வரஹ
குரு ஷாட்சாத் பரப் பிரம்மா
தஷ்மை ஸ்ரீ குருவே நமஹ.

## சிவன் துதி

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்ல ஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.



## சரஸ்வதி துதி

## சகலகலாவல்லி மாலை

1. வெண் தாமரைக் கன்றி நின்பதந்
தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
சகமேழும் அளித்து
உண்டான் உறங்க வொழித்தான்
பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலா வல்லியே

2. நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றும் ஐம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலா வல்லியே

3. அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட் கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடும்கொலோ
உளம் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தன் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலா வல்லியே

RangaRakes
tamilnavarasam.com

4. தூக்கும் பனுவல் துறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்
வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலா வல்லியே

5. பஞ்சப்பு இதந்தரு செய்ய பொற்
பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே
நெடுந்தாட் கமலத்து
அஞ்சத்துவசம் உயர்ந்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசு ஒத்திருந்தாய்
சகல கலா வல்லியே

6. பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்த
நல்காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலா வல்லியே



7. பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின் கடைக்கண்
நல்காய் உளம் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலா வல்லியே

8. சொல்விற் பனமும் அவதானமும்
கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய்
நளினாசனம் சேர்
செல்விக்கு அரிதென்று ஒருகாலமும்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலா வல்லியே

9. சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலா வல்லியே

RangaRakes
tamilnavarasam.com

10. மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி
உண்டேனும் விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலா வல்லியே

- குமரகுருபர சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

(இப்பாடல் பாடி பரீட்சைகளுக்கு சென்று
எழுதினால் பாடங்களில்
கூடிய மதிப்பெண்ணைப் பெறுவர்)

# தமிழ்மொழி வாழ்த்து

தான தனத்தன தான தனத்தன தான தந்தானே

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

- பாரதியார்

RangaRakes
tamilnavarasam.com

## அன்னையும் தந்தையும் தானே

அன்னையும் தந்தையும் தானே பாரில்
அண்ட சராசரம் கண்கண்ட தெய்வம்
(அன்னை)

தாயினும் கோயிலிங் கேது
ஈன்ற தந்தை சொல் மிக்கதோர் மந்திரமேது
சேயின் கடன் அன்னை தொண்டு
புண்ணிய தீர்த்தமும் மூர்த்திஸ்தலமும் இதில் உண்டு
(அன்னை)

தாயுடன் தந்தையின் பாதம்
என்றும் தலைவணங்காதவன் நாள் தவறாமல்
கோயிலில் சென்று என்ன காண்பான்
நந்தகோபாலன் வேண்டும் வரம் தருவானே
(அன்னை)

பொன்னுடன் ஒண்பொருள் பூமி
பெண்டிர் புத்திரரும் புகழ் இத்தரை வாழ்வு
அன்னை பிதா வின்றி ஏது
மரம் ஆயின் விதையின்றி காய் கனியேது
(அன்னை)

**- தியாகராஜ பாகவதர் பாடியது**

## முகவுரை

இந்தப் பாடல்கள் குழந்தைகள் பிறந்து வளரும் போது பாடப்பட்டன. அநேகமான பாடல்கள் தாயாரால் பாடப்படுவதாகவே கற்பிக்கப்படுகிறது. இந்தத் தாலாட்டுப் பாடலானது, எல்லா இனத்தவர்களும் வெவ்வேறு பாணியில் தம் தம் மொழிகளில் எல்லாத் தேசங்களிலும், எல்லா இடங்களிலும் தமக்குத் தெரிந்த அறிவினை வைத்து குழந்தையைத் தூங்க வைக்கத் தாலாட்டாய்ப் பாடி இருக்கிறார்கள். மற்றைய பாடல்கள், முன்னோர்கள் பாடியதை வழிவழியாகப் பின்னே வந்தவர்கள் பாடிக் குழந்தைகளை மகிழ்வித்து விளையாட்டு காட்டியதை, அவர்கள் பாடல் மூலம் அறியக் கூடியதாய் இருக்கிறது. குழந்தைகளின் தேகப் பயிற்சியினை பாட்டுப் பாடிச் செய்ய வைத்தனர்.

குழந்தைகள் தேகப் பயிற்சி என்று தெரியாமல், மகிழ்ச்சியோடு விளையாட்டு போல் செய்யப் பழைய காலத் தாய்மாரும் அதற்கேற்பப் பாட்டுகள் பாடிக் குழந்தைகளை மகிழ்வித்துத் தாமும் மகிழ்ந்தனர். இந்தப் பாடல்களைப் பாடுகையில் குழந்தைகள்

RangaRakes
tamilnavarasam.com

அசைவது, ஆடுவது, வாய் கூட்டுவது, கை ஆட்டுவதைக் கண்டு மனம் மகிழ்ந்து இருக்கிறார்கள். பழைய காலப் பெரியோர் குழந்தைகள் சாப்பிட்டு சந்தோஷமாய் இருக்க வேணும் என்று விரும்பினர். எனவே பாமர மக்களும் பாடக்கூடிய விதமாய் தாலாட்டுப் பாடல்களும் வேறு சில பாடல்களும் பாடினார்கள். குழந்தைகள் பாடலின் போது என்னென்ன அபிநயங்களைச் செய்ய வேண்டுமோ அதைக் காட்டிக் கொடுத்தனர். குழந்தைகளும் செய்தனர். இது குழந்தைகளின் உடலை வலுவாக்கியது. இரத்த சுற்றோட்டத்தை நன்கு செய்யத் தூண்டியது. தசை நார்களை வலுவாக்கியது. முதுகெலும்பை உறுதியாக்கியது. இந்தப் பாடல்களையும் அதன் விளக்கங்களையும் நாம் சற்று பார்த்திடுவோமா?



**அத்தியாயம் – 1**

# தாலாட்டு மற்றும் பாடல்களும் விளக்கமும்

## தாலாட்டுகையில்

**(1)**

ஆர் ஆர் ஆரிவரோ
கண்ணே உறங்கம்மா
கண்மணியே கண் உறங்க
பொன்னே உறங்கம்மா
பூமகளே கண் உறங்கு
சிவனருளால் வந்து உதித்த
செல்வமே கண் உறங்கு
ஆழ் கடலில் கண்டு எடுத்த
ஆணி முத்தும் நீ தானோ
கண்ணே உறங்கம்மா
கண்மணியே கண் உறங்கு
தங்கத்தால் தொட்டில் கட்டி
வைரத்தால் பூ இழைத்து
தொட்டிலில் போட்டு உன்னை
நிம்மதியாய் உறங்க வைப்பேன்
கண்ணே உறங்கம்மா
கண்மணியே கண் உறங்கு.

RangaRakes tamilnavarasam.com



மற்றொன்று இப்படியும் உள்ளது.

ஆர் ஆர் ஆரிவரோ
கண்மணியே கண் உறங்கு
யார் அடித்து நீ அழுதாய்
அடித்தாரைச் சொல்லி அழு
அப்பா உன்னை அடித்தாரோ
அணைத்து எடுக்கும் கையாலே
மாமன் உன்னை அடித்தாரோ
மாம்பிஞ்சுத் தடியாலே
அத்தை உன்னை அடித்தாரோ



அலரிப் பூ செண்டாலே
ஏன் அழறாய் என் மகளே
கண்ணே உறங்கு அம்மா
கண்மணியே கண் உறங்கு
பாலுக்கு நீ அழுதாயோ
பசியாற குடித்து விடு
ஏன் அழுதாய் என் மகளே
கண்ணே உறங்கம்மா
கண்மணியே கண் உறங்கு
அப்பாவின் தோள் மேலும்
அம்மாவின் மடி மேலும்
கண்ணே உறங்கு அம்மா
கண்மணியே கண் உறங்கு.

இவை இரண்டும் தாலாட்டுப் பாடல்கள். இந்தப் பாடல் குழந்தை பூமியில் பிறந்து சில நாட்களின் பின் தாயாராலோ பேத்தியாராலோ (பாட்டி) பாடப்படுகிறது. பாட்டை கவனமாய் பாருங்கள். ஆர் ஆர் ஆரிவரோ என்றே தொடங்கப்படுகிறது. குழந்தை ஆணாக இருந்தால் கண்ணா, ஐயா என்றோ, பெண்ணாக இருந்தால் கண்ணே அம்மா என்றோ பாடுவார்கள். இந்தப் பாட்டு தொடங்கப்படும் வார்த்தையில் பாரிய அர்த்தம் உள்ளது. தமிழ் மக்கள் பிறவிகளை நம்புபவர்கள். தாயார் பாமரப் பெண்ணாயிருந்தாலும் சரி, படித்த பெண்ணாயிருந்தாலும் சரி, பிறந்த பிள்ளையைத் தாலாட்டுப் பாடித் தூங்க வைக்கும்போது ஆர் ஆராரோ ஆரிவரோ என்று சொல்லியே பாட்டைத் தொடங்குவாள்.

RangaRakes tamilnavarasam.com

அவளுக்கு அதன் அர்த்தமே புரிந்து இருக்குமோ இல்லையோ தெரியாது. ஆனால் அந்தத் தாயானவள் மாபெரும் பாடத்தைத் தன் குழந்தைச் செல்வத்திற்கு சொல்லிக் கொடுக்கிறாள். யார் யாரோ? யார் இவரோ? என்று இரு கேள்விகளையும் குழந்தையைக் கையில் எடுத்துக் கேட்கின்றாள். பக்கத்தில் இருப்பவருக்கும் பதில் தெரியாது. கடவுளுக்குத்தான் தெரிந்து இருக்கும்.

எனவே கையில் எடுத்தவுடன் கடவுளிடம் கேட்டு அதனைத் தன் கண்மணி ஆக்கிக் கொள்கிறாள். குழந்தையிடம் 'நிம்மதியாய் கண் உறங்கு' என்று இனிய குரலில் மென்மையாய்ப் பாடுகிறாள். குழந்தை தாயின் அரவணைப்போடு குரலோசையும் சேர்ந்து கொள்ள நிம்மதியாய் நித்திரை செய்யப்பார்க்கின்றது. முதல் பாட்டில் குழந்தையைத் தாலாட்டும் விதம் பாருங்கள்! உயர்வு நவிர்ச்சி அணியால் போற்றுவதை!! 'பொன்னே உறங்கம்மா, பூமகளே நீ உறங்கு' என்று பாடும் பொழுது, பொன்னை ஒத்தவளே பூவை ஒத்த மகளே என்று கூறுவதை, அடுத்த வரியில் சிவனருளால் வந்த செல்வமே எனக் கூறி சிவனிடம் தன் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறாள். இந்த நன்றி தெரிவிக்கும் பண்பு தமிழரிடம் பாரம்பரியமாய் உள்ள பண்பாகும்.

தைப்பொங்கல் தினத்தன்று விநாயகர் சூரியன் இந்திரனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாய் பொங்கிப் படைத்து விழாக் கொண்டாடுவார்கள். நவராத்திரி விழா



எடுத்து முப்பெரும் தேவிகளுக்கு கல்வி செல்வம் வீரம் தந்ததிற்காய் நன்றி தெரிவிப்பர். அதே போன்று தாலாட்டு பாடும் பொழுதும் சிவனருளால் வந்த செல்வம் என்று கூறி நன்றியைத் தெரிவிக்கிறாள். அதன் பின் அவள் கற்பனை விரிவடைகிறது. ஆழ்கடலில் கண்டு எடுத்த பழமை பொருந்திய முத்தோ என்கிறாள். உனக்கு தங்கத்தால் தொட்டில் கட்டி அதில் வைரப் பூ இழைத்து, உன்னைத் தொட்டிலில் இட்டு உறங்க வைப்பேன் என்று தன் செல்வச் செழுமைகளைக் கூறுகிறாள். இவற்றை ஒரு செல்வச் சீமாட்டி சொல்லி உறங்க வைக்க, இன்னொரு பாசமிகு மங்கை தன் உறவுகளைச் சொல்லி உறங்க வைக்கிறாள். எப்படி என்று பார்ப்போமா?

இந்தத் தாயார் 'ஆர் ஆர் ஆரிவரோ கண்மணியே கண் உறங்கு' என்று பாடிவிட்டு யார் அடித்து நீ அழுறாய். அடித்தாரைச் சொல்லியழு என்று பாடிக் கேட்கிறாள். அப்பா அடித்துவிட்டாரா அணைத்தெடுக்கும் கையாலே என்று கேட்டுப் பின் மாமன் அடித்தாரோ மாப்பிஞ்சுத் தடியாலே என்று கேட்கிறாள். தனது அருமை அண்ணன் உனது மாமன் உன்னை அடித்துவிட்டாரா? அவர் அடித்தது பிஞ்சுத்தடிதான் என்று தன் செல்வத்திற்கு மறைமுகமாய், அது மெல்லிய தடி என்பதால் உனக்கு அது நோகாது. ஆகவே கவலைப்படாதே என்பதை 'மாம்பிஞ்சுத் தடி' என்று கூறுவதில் இருந்தே குழந்தையைப் புரிந்து கொள்ள வைக்கிறாள். அத்தை

RangaRakes tamilnavarasam.com

உனக்கு அலரிப் பூச்செண்டாலே தானே அடித்தா, உனக்கு வருத்தம் தராது. இவர்கள் உன்னைத் திருத்தி நடத்த உரிமை உள்ள உறவுகள் என்பதைப் புரிய வைக்கிறாள்.

பின்பு குழந்தை பசித்து அழுததோ என எண்ணிப் பாடிக் கேட்கிறாள். பசியாற பாலைக்குடி என்று சொல்வதோடு உன் அப்பாவின் தோள் மேலும் அம்மாவின் மடிமேலும் நித்திரை கொள். அப்பாவின் தோள் உனக்கே சொந்தம். அதில் உன்னைச் சுமந்து செல்வார். உன் அம்மாவின் மடி உன்னுடைய இருப்பிடம். அவள் உன்னை ஏந்தி வைத்திருப்பார் என்று தமது கடமை உன்னை கண் எனக் கவனிப்பது என்று கூறாமல் கூறி அந்த சிசுவுக்கு நம்பிக்கையை வளர்க்கிறாள். இந்தப் பாடல் மூலம் தாய் தந்தை கடமை, மாமன் அத்தை கடமை என்று தமிழர் தம் கடமைகளை எவ்வண்ணம் செய்தனர் என்று வகுத்துக் காட்டுகிறார்கள்.

பாமர தாலாட்டுப் பாடல் மனித உணர்வினையே தொட்டுவிடுகிறது. இதை வழி வழி பாடி வந்திருக்கிறார்கள் என்றால், தமிழர் மாட்சிமை தான் என்னே! குழந்தையும் தாலாட்டுப் பாடலில் கண் உறங்கி பாலுண்டு வளர்கிறது. இப்பாடலை இரண்டு வயது மூன்று வயது வரை படிப்பார்கள். குழந்தை பாடலைக் கேட்டவுடன் நித்திரை கொள்வதை வழக்கமாக்கி விடுவதால் தாலாட்டைப் பாடியே தூங்க வைத்து விடுவார்கள்.

RangaRakes



**அத்தியாயம் – 2**

## தாய்முகம் பார்த்துச் சிரிக்கையில்

இப்போ குழந்தைக்கு இரண்டு மாதம் கடந்து விடுகிறது. அதற்கு தாய்முகம் நன்கு தெரியப்பட்ட முகம் ஆகிவிடுகிறது. பால் ஊட்டும் போதும், தூங்க வைக்கும் போதும், அந்த முகத்தினை பார்த்துப் பார்த்து குழந்தை மனதில் பதிய வைத்துவிடும். பின் தாய் முகம் காணும் போதெல்லாம், தன் பொக்கை வாயைத் திறந்து சிரிக்கத் தொடங்கிவிடும். தந்தையும் தன் செல்வக் குழந்தையை அணைத்து மகிழ்வதின் மூலம் குழந்தை தெரிந்து கொண்டு விடுகிறது. அவர்கள் குழந்தையிடம் முகத்தை மேலிருந்து கீழாய் ஆட்டி என்ன வேண்டும் என்று கேட்கையில் சிரிப்புதான் பதில். இந்த சிரிப்பைக் கூடுதலாய்ச் சிந்த வேண்டும் என்றே தாயார் குழந்தையிடம் நலம் விசாரிப்பது போல் பாடுகிறாள்.

tamilnavarasam.com





இங்கு கேக்கிற சங்கோ இது
ஊர்ந்து திரிகின்ற வண்டோ
சோறு இல்லா சோலைக் கிளியோ
பால் குடிக்கிற பஞ்சவர்ணக் கிளியோ

இந்தப் பாட்டைப் பாடித் தன் முகத்தினை மேலிருந்து கீழாய் ஆட்டிக் குழந்தையிடம் கொஞ்சுகிறாள். குழந்தை மகிழ்ச்சியோடு சிரித்து கை கால்களை நீட்டி மடித்து உதைத்து விளையாடுகிறது. உதட்டைக் கூட்டி சிரிக்கிறது. பாட்டு பாடும் நேரங்களில் எல்லாம் இப்படி கை அசைவுகளை, கால் அசைவுகளைச் செய்கிறது. இதனால் பாட்டுச் சத்தம் கேட்டதும் அப்பக்கம் திரும்பிப் பார்த்துவிட்டு செய்வதால் மனதின் எண்ணத்திற்கு ஏற்ப தன் கை கால் அசைவுகளை நெறிப்படுத்தத் தொடங்குகிறது. கை காலை ஆட்டி உதைக்கிறது. சிலர் கேட்கலாம். இதை எல்லாம் குழந்தை மாதங்கள் ஆனால் செய்யும்தானே இதற்கு பாட்டு எதற்கு என்று. எதைச் செய்யினும் ஒரு உந்து சக்தி இருப்பின் அந்த செய்கை திருப்திகரமாய் அமையும் என்பது ஆன்றோர் வாக்கு. தமிழர் பண்பாடே பாட்டில்தான் அடக்கம். பாட்டுப்பாடியே குழந்தைக்கு விளங்கப்படுத்தி அக்குழந்தையைக் கொண்டு விளையாட்டை செய்ய வைத்துப் பார்த்து மகிழ்ந்தனர்.

இரண்டு மூன்று மாதங்களில் குழந்தைக்கு சோறு கொடுப்பதில்லை. பாலைத்தான் கொடுப்பார்கள்.

RangaRakes
tamilnavarasam.com

'இங்கு' என்ற செல்லப் பெயரை பாலுக்குச் சூட்டி "இங்கு கேக்கின்ற சங்கோ இது" என்று கேட்டார்கள். சங்கு என்ற வார்த்தையில் இருந்து இது பழைய காலப் பாடலாய் இருக்கலாம் என்று நம்ப இடம் இருக்கிறது. பழைய காலத்தில் சங்கினை ஓர் உயர்ந்த பொருளாய் மதித்தனர். அதைச் செல்வமாய் தமிழ் மக்கள் கருதினர். இன்றும் சங்கு மதிப்புக் கெடாமல் ஓர் உயர்ந்த நிலையில் உள்ளது என்று நோக்க வேண்டியதொன்று.

சிலப்பதிகாரத்திலும் கண்ணகியைத் திருமணம் செய்த கோவலன் திருமணத்தன்று கண்ணகியின் அழகைப் புகழுகையில் மாசறு பொன்னே, வலம்புரி, முத்தே என்று கூறுவதாய் இளங்கோவடிகள் கூறுகிறார். இந்த வலம்புரி என்னும் சொல் சங்கினையே குறிக்கும். அழகுக்கு கூட சங்கினை உவமையாய்க் கூறியதை தமிழ் இலக்கியங்கள் மூலம் அறியக்கூடியதாய் உள்ளது. சங்கில் வலம்புரிச் சங்கு இடம்புரிச் சங்கு என்று இருவகை உள்ளது. வலம்புரிச் சங்கு சிறிய சங்கு தானும் ஒருவர் வீட்டில் இருப்பின் அந்த வீட்டில் உள்ளவர்கள் செல்வந்தராய் சீமான்களாய் மாறிவிடுவர். வலம்புரிச் சங்கு அதிர்ஷ்டம் உள்ளவருக்கே கிடைக்கும். வலம்புரிச் சங்கு வீடுகளில் கிடைத்து அவர்கள் அதிர்ஷ்டசாலியாய் ஆனதாய் எத்தனையோ கதைகள் உண்டு. அதில் ஒன்று.

யாழ்ப்பாணத்தில் சில நேரம் சில பெண்கள் கூடைகளில் கொண்டு சென்று மீன் விற்பார்கள். ஒருமுறை



ஒரு பெண் கூடையில் மீன் விற்றுச் செல்லும்போது, களைப்பு மிகுதியால் ஒரு வீட்டின் முன் தனது கூடையை இறக்கி வைத்தாள். அவளது கையும் அவளை அறியாமல் கூடையில் உள்ள கஞ்சல்களை எடுத்து வீசத் தொடங்கின. அந்நேரம் அவள் கையில் கூடையில் இருந்த சிறிய சங்கு கிடைத்தது. அவள் கையில் எடுத்துப் பார்த்தாள். சங்கின் ஒரு துண்டு என்று அதையும் வீசிவிட்டுத் தன் கூடையைத் தூக்கி தலையில் வைத்தபடி வியாபாரம் செய்யச் சென்றுவிட்டாள். இந்த வீசி எறியப்பட்ட சங்கு ஒரு சாதாரணச் சங்கு அல்ல. அது ஓர் சிறிய வலம்புரிச் சங்கு. அதற்கு உயிர் இருந்தது.

அது மெதுவாய் கூவிக்கொண்டு, முன் வீட்டினுள் ஊர்ந்து சென்று சுவரோரமாய் கூவிக் கிடந்தது. அந்த வீட்டில் ஒரு பெரியவர் இருந்தார். அவருக்கு சங்கினைப் பற்றிய விளக்கம் சிறிதளவு தெரிந்து இருந்தது. அவர் அந்த சங்கு வலம்புரிச் சங்கு என்பதைப் புரிந்து கொண்டார். அதிர்ஷ்ட தேவதை வீட்டைத் தேடி வந்ததை அறிந்து கொண்டார். அந்தச் சங்கினை எடுத்து, செய்யவேண்டியவற்றை முறையாய் செய்து அதிர்ஷ்டத்தைத் தமதாக்கினார். பிறகு என்ன? அவர்கள் வியாபாரம் விரைவில் பெருகி பெரும் செல்வந்தர்கள் ஆயினர்.

இடம் புரி சங்கு கோயில்களில் பார்க்கும் சங்காகும். இதைப் பூஜை நேரம் ஊதுவர். பழைய

RangaRakes tamilnavarasam.com

காலத்தில் போர் தொடங்கும் சமயத்திலும், வெற்றி பெறும் நேரமும், சங்கினை ஊதிச் செய்தியை வெளிப்படுத்தினர். சங்கே முழங்கு என்ற பாடல்கூட உள்ளது. இறந்தவர் வீட்டிலும் இச்சங்கினை ஊதி இறந்தோர் பெருமையை வெளிப்படுத்துவார்கள். அப்படிப்பட்ட பெருமையை உடைய சங்கினை குழந்தைக்கு அடை மொழியாக்கி இங்கு கேக்கின்ற சங்கோ என்று கேட்பதின் மூலம் அக்குழந்தை சீமான் என்ற பெருமைக்கு உரியது என்பதை காண்பிக்கிறார், அக்குழந்தையின் மூதாதையர். அடுத்த வரியைப் பாருங்கள். ஊர்ந்து திரிகிற வண்டோ என்கிறார். இந்த வண்டு ஊர்ந்து திரிவதில் மிகச் சுறு சுறுப்பானது.

எனவே வண்டோ நீ ஊர்ந்து திரிவதில் என்கிறார். மூன்றாம் வரியைப் பாருங்கள். சோறு இல்லா சோலைக் கிளியோ என்கிறார். தன் குழந்தை சோறு சாப்பிடுவதில்லை. கிளிகளும் சோறு சாப்பிடுவதில்லை. எனவே தன் குழந்தையை கிளிக்கு ஒப்பிட்டுப் பாடி மகிழ்கிறார் பாடியவர். அடுத்த வரியில் அவருக்கு கிளியின் மேல் ஜாஸ்தியான பிரியம் என்பது எமக்குப் புரிந்து போகிறது. என்ன சொல்லுகிறார் தெரியுமா? பால் குடிக்கிற பஞ்சவர்ணக் கிளியோ என்று தன் மழலையைப் பஞ்சவர்ணக் கிளிக்கு ஒப்பிடுகிறார். கிளிகளிலே உயர்ந்த ஜாதி பஞ்சவர்ணக்கிளி. இது ஐந்து நிறங்களை உடையது. குழந்தையைக் கொஞ்சிப் பாடியவர் மனம் இறைவனிடம்



லயித்திருக்கும். நிறங்களோ ஐந்து உடையாய் என்று சிவபுராணத்தில் சிவனுக்கு கூறியதை தன் குழந்தையிடமும் காண்பதற்காக பஞ்ச வர்ணக்கிளியோ என்று கூறி மகிழ்கிறார் போலும். இப்படி உயர்வாகவே பிள்ளையைத் தூக்கிப் பாடி மகிழ்ந்தனர். உயர்ந்த பொருள்களோடு ஒப்பிட்டுப் பாடினார்கள்.

RangaRakes tamilnavarasam.com

## அத்தியாயம் – 3

# உடம்பு புரட்டுகையில்

குழந்தை மூன்றாம் மாதத்தைக் கடக்கிறது. குழந்தை தற்போது மூன்றாம் மாத முடிவில் உடம்பை பிரட்டத் தொடங்குகிறது. இதை திருகோணமலை தமிழர் உடம்பு பிடித்தல் என்பர். குழந்தை உடம்பை பிரட்டியபடி தலையைத் தூக்குகிறது. தலைப் பாரத்தால் தூக்கிய தலை நிலத்தில் சில சமயம் அடிபடப் பார்க்கிறது. சில சமயம் `மெல்லிய நிலையில் அடிபடுகிறது. குழந்தை சிணுங்கி அழுகிறது. தாயார் ஓடிச் சென்று மெல்லக் குழந்தையின் தலையை வருடி விடுகிறாள். நெற்றியை ஒத்தடம் கொடுப்பது போல் அழுத்துகிறாள். தலையை செல்லமாய் பிடித்து விடுகிறாள். அவள் வாயில் குழந்தை தன் நோவை உறவுகளிடம் சொல்லிப் பகிர்ந்து கொள்வது போல் பாடல் வருகிறது.





சின்னி தலை நோகுது நோகுது
சின்னம்மா தலை நோகுது நோகுது
பப்பா தலை நோகுது நோகுது
பப்பம்மா தலை நோகுது நோகுது

இந்தப் பாடல் எப்போ யாரால் பாடப் பெற்றது என்று தெரியாது. இதில் உள்ள குழந்தைகளுக்கான பாடல் எல்லாம் ஒருவர் மூலமாம் பாடப் பெற்றது என்று சொல்ல முடியாது. காலத்திற்கு காலம் தம் சூழ்நிலைக்கேற்ப பலர் பாடியிருக்க வேண்டும்.

RangaRakes tamilnavarasam.com

ஒவ்வொன்றும் ஒவ்வொருவித பாணியில் பாடியிருப்பதையும், ஒவ்வொரு பாட்டிலும் வெவ்வேறு விஷயங்கள் சொல்லப்படுவதில் இருந்தும், நாம் அறிந்து கொள்ளக் கூடியதாய் உள்ளது. எனினும் பாடல் யாவும் ஒன்றுக்கு பின் ஒன்றாய் குழந்தையின் வளர்ச்சியைத் தொடர்ச்சியாய்க் கொண்டு வருவதற்கு உபயோகப்படுவது எம் அதிர்ஷ்டமே. இவைகள் ஒன்றுக்குப் பின் ஒன்றாய்ப் பாடிய பாடல் அல்ல. ஒவ்வொருவரும் ஒவ்வொரு காலத்திலும் தம் சிறார்களை களிப்பூட்டப் பாடி இருக்கிறார்கள். அநேகமாக திருகோணமலை தமிழரால் இப்பாடல்கள் எல்லாம் பாடுவதை நாம் அறியக்கூடியதாய் இருக்கிறது. இங்குள்ள தமிழ் பழைய குடி மக்கள் இப்பாடல்களைப் பாடி வந்திருக்கிறார்கள். அவர்கள் வாய்மொழியாய் வழிவழியாய் பாடியதை நாமும் கேட்டுத் தெரிந்து பாடினோம். அங்கொன்றும் இங்கொன்றுமாய் இருந்ததை சேர்த்துப் பாடி இருக்கிறார்கள். எவ்வளவு பாடல் மறைந்து விட்டனவோ தெரியாது. தெரிந்தவற்றை எழுதுகிறோம்.

குழந்தை தலைபிடிக்கையில் பாடும் பாடல் குழந்தை பாடுவது போன்றே பாடியிருக்கிறார்கள். சின்னம்மா என்ற சொல்லுக்கு முன் வரியில் சின்னி என்று பாடியிருக்கிறார்கள். இந்த சின்னி என்னும் சொல் செல்லமாய் சித்தப்பாவைக் குறிக்கும் சொல்லே. சிறுவர் சிறுமியர் சின்னம்மா கணவரை சின்னி என்று அழைத்திருக்கிறார். இச்சின்னி என்னும் சொல்லை பலர் தமது உறவுகளை அழைப்பதில் இருந்து அறியலாம். தாயின் தங்கையே சின்னம்மா ஆவார்.



குழந்தையைத் தாயார் பிரசவித்து இருக்கும் நாட்களில் அநேகமாக அந்தத் தாயாரின் தங்கையே குழந்தையைப் பார்த்து வளர்ப்பதைக் கண்கூடாய் நாம் பார்க்கிறோம். பால் கொடுப்பது மாத்திரம் தான் தாய் வேலையாய் இருக்கும். மற்றைய குழந்தையின் வேலை யாவும் தாயின் தங்கையான சின்னம்மாவே செய்து வருவார்.

எனவேதான் அந்த சிறிய தாயாருக்கு முக்கியத்துவம் கொடுத்து அக்குழந்தை சின்னம்மா தலை நோகுது என்று சொல்வது போல் பாட்டை அமைத்தனர். அடுத்த வரியில் குழந்தை யாரிடம் சொல்வதாய் பாட்டை அமைத்திருக்கிறார்கள். பப்பா தலை நோகுது தலை நோகுது என்கிறது குழந்தை. இந்த பப்பா யார்?

1624–ல் திருகோணமலை கோணேஸ்வரம் கோவில் போர்த்துகேயரால் உடைக்கப்பட்டது என்பது சரித்திர உண்மை. இப்போர்த்துக்கேயப் படை வீரர்களின் பல குடும்பம் குடும்பமாய் திருகோணமலையை வதிவிடமாய் கொண்டு தங்கிவிட்டனர். அவர்களின் நாகரிகம் அவர்கள் பாஷையில் உள்ள சொற்கள் பல திருகோணமலை வாழ்

RangaRakes tamilnavarasam.com

தமிழரிடை புகுந்துவிட்டது. இன்றும் அச்சொற்களில் சில பேசப்பட்டு வருவதை எமது பேச்சு வழக்கில் இருந்து அறிந்து கொள்ளலாம். பப்பா என்னும் சொல் போர்த்துக்கேய மொழியில் தந்தையைக் குறிக்கும் சொல். இன்றும் பலர் திருகோணமலையில் தம் தந்தையை பப்பா என்று அழைப்பதை நாம் காணலாம். அவர் அன்னையை பப்பம்மா என்று அழைத்தனர்.

எனவே தன் தந்தையிடம் தலை நோகிறதை பப்பா தலை நோகுது என்று படிப்பது போலப் பாடுகிறார். எனவே இந்தப் பாடல், போர்த்துக்கேயர் திருகோணமலைக்கு வந்து போர்த்துக்கேய நாகரிகம் திருகோணமலையில் பரவியவுடன் பாடிய பாடலாய் இருந்திருக்க வேண்டும். எனவே 1625க்கு பின் இப்பாடல் பாடப்பெற்று இருக்கிறது.

இப்படி பாடிப்பாடி தலை பிடிப்பதால் குழந்தையின் தலை நன்கு உருண்டையாகி விடுகிறது. பிள்ளை பிறந்து சில மாதங்களில் குழந்தையின் அவயவங்களை நன்கு வடிவுற அமைவதற்காகத் தலை, கை, கால்களை பிடித்து விடுவார்கள். தலையும் நன்கு உருண்டையாகி நன்கு அழகாய் அமைந்து விடும். இது பழம் தமிழர் செய்கை.



**அத்தியாயம் – 4**

# எண்ணெய் பூசுகையில்

குழந்தைக்கு எண்ணெய் பூசி சூரிய வெளிச்சத்தில் குழந்தையை படுக்கப் போட்டுவிடுவார்கள். காலை சூரிய வெளிச்சம் குழந்தைக்குப் படுவதால் விற்றமின் D என்னும் உயிர்ச்சத்து குழந்தைக்குச் சேரும். இச்சத்து குழந்தைக்குச் சேர்வதால் சரும நோய் குழந்தைக்கு வராது. அதோடு குழந்தை அழகாய் வருவதற்காக குழந்தையின் மூக்கில் எண்ணெய் தடவி கைகளினால் அழுத்தி மூக்கின் தண்டினை உயர்த்தி விடுவார்கள். இதனால் குழந்தைக்கு சப்பை மூக்காய் இருந்தாலும் மூக்குத் தண்டினை உயர்த்துவதால் மூக்கு நீண்டு அழகாய் வரும். அந்த தேகப் பயிற்சியினை சும்மா செய்வதில்லை. பாட்டுப்பாடியே செய்வார்கள். என்ன பாட்டு பாருங்கள்! கேளுங்கள்!

நாய்க்கு மூக்கு இல்லை
    நரிக்கு மூக்கு இல்லை
நான் பெத்த பிள்ளைக்கு
    மூக்கு வா மூக்கு

RangaRakes tamilnavarasam.com



என்பதேயாகும். இந்த பாட்டைப் பாடிப்பாடி தாயார், குழந்தை மூக்கின் தண்டினை உயர்த்திப் பிடிக்க பாட்டின் சுவையில் குழந்தையும் அழாமல் சிரித்துக் கொண்டு இருக்கும்.

இப்படி பாடிப்பாடி மூக்கைப் பிடிக்கும் தாயார், குழந்தையின் கை கால்களுக்கு எண்ணெய் பூசி, கால்களை மடித்து நீட்டி, விரல்களை இதமாய் நீவி காலைப் பிடித்து விடுவார். கையை, கை விரல்களை எல்லாம் பாட்டு பாடிப் பாடி மசாஜ் பண்ணுவது போல் பிடித்து விடுவாள். என்ன பாட்டு தெரியுமா? இதோ:

கை பிடிக்கிற கணக்குபிள்ளைக்கு
மாதம் பத்துப்பணம் சம்பளம்
கால் பிடிக்கிற கணக்குபிள்ளைக்கு
மாதம் பத்துப்பணம் சம்பளம்

RangaRakes



கை கால்களை மடித்து நீட்டி தேகப்பயிற்சியை எவ்வளவு அழகாய் செய்து விடுகிறார்கள். இந்த தேகப்பயிற்சி கை, கால், முழங்கால், முழங்கை இவற்றுக்கு நன்கு வலுவூட்டுகிறது. படிக்கும் பாட்டைப் பார்த்தால் அன்றைய கால நிலவரம் விளங்கும் தன்மை உள்ளதை அறியக்கூடியதாய் இருக்கிறது. பணம் என்றே சிறிது காலத்துக்கு முன்னர் காசை அழைத்து வந்தனர். இதை என் அனுபவம் மூலம் அறிவேன். நான் சிறுமியாய் இருக்கையில், என் தாயார் சில சமயங்களில் நான் காசு எதற்கும் கேட்டால், நாலு பணம் அலுமாரியில் வைத்திருக்கிறேன் போய் எடுத்துக்கொள் என்று சொல்லுவார். இந்த நாலு பணம் என்பது எவ்வளவு தெரியுமா? இருபத்தைந்து சத குத்தியாகும். அப்போ ஒரு பணம் ஆறு சதத்தைக் குறிப்பதாய் என் தாயார் கூறியிருக்கிறார். என் தாயாரின் சிறு வயதில் ஒரு பணம் ஆறு சதத்தையே குறித்தது. என் தாயார் 1909-ஆம் ஆண்டில் பிறந்தவர்.

எனவே 19-ஆம் நூற்றாண்டில் திருகோணமலை மக்கள் ஆறு சதத்தை ஒரு பணம் என்றே அழைத்தனர். இந்தப் பாட்டில் கணக்காளருக்கு மாதம் பத்துப்பணம் சம்பளமாய் கணக்குப்பிள்ளைக்கு தந்து விடுவதாய் படிக்கப்படுகிறது. பத்துப்பணம் என்பது அறுபத்தைந்து சதத்தையே குறிக்கும் சொல். இந்த பணம் என்னும் சொல் சொல்லப்பட்ட கால கட்டத்தில் தான் இப்பாடல் பாடப்பட்டிருக்க வேண்டும்.

tamilnavarasam.com

எனவே 19-ஆம் நூற்றாண்டு முற்பகுதியில் திருகோணமலையில் ஒரு சிலரால் இது பாடப்பெற்று உள்ளது. கணக்காளரே இந்த காலையும் கைகளையும் (மசாஜ்) பிடித்து விடுங்கோ, உங்களுக்கு பத்து பணம் மாதம் சம்பளமாய்த் தந்து விடுவோம் என்கிறார். பாட்டைப் பாடியவர்.

இந்த சம்பளம் என்னும் சொல் திருகோணமலையில்தான் அப்போ கூலி கொடுக்கும் பொழுது சொல்லப்பட்டது. இங்கு டச்சுக்காரர், போர்த்துக்கேயர், பிரான்சியர், பிரித்தானியர் என்று பலரும் குடியேறி இருந்தார்கள். அவர்கள் அங்கு தங்கள் சீவியத்தை தனித்தும் குடும்பமாயும் நடத்தியபடியால், பணம் நன்கு புழக்கத்தில் இருந்தது. அதை இந்தப் பாடல் மூலம் கூட அறியக்கூடியதாய் இருக்கிறது. இங்கு எதையும் சும்மா செய்வதில்லை. குழந்தைக்கு கால்பிடித்து, கை பிடித்து விடுவதில் கூட சம்பளம் என்று ஒரு தொகையை கொடுப்பதாய் பாடுபவர் கூறுகிறார். லௌகிக வாழ்க்கைக்குப் பணம் மிக முக்கியமானது.

நேரத்தை வீணாய்க் கழிக்காமல் வேலை செய்யவேண்டும். அந்த வேலை எதுவாய் இருப்பினும் ஒரு சம்பளம் நிர்ணயித்து அதைக் கொடுக்க வேண்டும் என்பதே கொள்கையாய் இருந்தது. அதனால்தான் எவரும் திருகோணமலையில் வாழத் தொடங்கினால் அவர்கள் வாழ்வில் பொருளாதாரப் பிரச்சனைகள் வருவதில்லை.



அதையொட்டி மற்றய பிரச்சனைகளும் வருவதில்லை. இதனால்தான் கோணேசர் பூமி வந்தாரை வாழவைக்கும் பூமி என்று எல்லோராலும் இன்றும் சொல்லப்பட்டு வருகிறது. முன்பும் இந்நாட்டின் செழிப்பால் சொல்லப்பட்டு வந்தது. இந்தப் பாடல்களில் அதிகம் திருகோணமலையிலும் அதைச் சுற்றியும் பாடப்பட்டு வந்தபடியால் இவ்வூர் நாகரிகத்தைப் பற்றி நாம் கூடுதலாய் அறிந்து கொள்ள முடிகிறது.

RangaRakes tamilnavarasam.com

அத்தியாயம் – 5

## விரல்கள் மூடி விரிக்கையில்

சூரிய வெளிச்சத்தில் இருக்கும் விற்றமின் D சத்தும் குழந்தைக்கு கிடைக்கப்பெற்று குழந்தை ஆரோக்கியமாய் வளருகிறது. குழந்தைக்கு நாலு மாதம் தொடங்குகிறது. குழந்தை மெல்ல மெல்ல கையை விரித்து மூடத் தொடங்குகிறது. இதை தாயார் பார்த்து விடுகிறாள். இப்படி பல தடவை செய்வதால் குழந்தையின் கைகள் பெலம் பெறும் என்பதை உணருகிறாள்.

எனவே இந்த தேகப்பயிற்சியைச் செய்வதற்காக பாட்டைப் பாடி குழந்தையைக் கொண்டு செய்விப்பதற்காக பாட்டைத் தாய் பாடுவதாய் பாடலாசிரியர் பாட்டை அமைத்திருக்கிறார். இதில் உள்ள பாடலையும் பாட்டின் விளக்கத்தையும் நாமும் அறியலாமே!



பொன்னான் பொன்னான்
  காசு தா
பொன்னான் எங்கட
  பிள்ளையைத் தா
செப்பை தா
  செப்பு மூடியை தா
செப்பு நிரம்ப
  காசு தா



பிள்ளைகளின் விளையாட்டுப் பொருட்கள் செப்பு, மூடிகள். இவைகளை வைத்து உருட்டுவார்கள். சத்தம் எழுப்ப நிலத்தில் போட்டுத் தட்டி இன்புறுவார்கள். இது குழந்தையின் செயல். இந்தக் குழந்தை விளையாட்டுப் பொருட்களைக் கொண்டே அக்குழந்தையின் மாதத்திற்கு ஏற்ப தேகப்பயிற்சியினையும் செய்ய வைத்து குழந்தைக்கு தாய் அரிய பாடத்தினை சொல்லிக் கொடுப்பதாய் ஆசிரியர் பாட்டினை படைத்திருக்கிறார். பாட்டைக் கவனித்துப் பாருங்கள்.

பொன்னான் (பொன்னை உடையவனே) காசு தா (பணம் தா) பணத்தை குழந்தை யாரிடம் பெற்றுக் கொள்ளவேண்டும்? பொன்னை உடைய குபேரனிடம் தான் பெறவேண்டும். அதனால்தான் தாயார் பொன்னான் பொன்னான் காசு தா என்று கூறுகிறாள்.

RangaRakes tamilnavarasam.com

பின் முதல் வரியில் காசு தா என்று கூறிவிட்டோம், காசுக்காக பிள்ளையை உன்னிடம் வைத்துக் கொள்ளாமல், காசு கேட்கும் பிள்ளையையும் தந்துவிடு என்று சொல்வது போல், இரண்டாம் வரியில் பொன்னான் எங்கட பிள்ளையைத் தா என்று கூறும் தாய், மூன்றாவது வரியில் செப்பு தா என்று கேக்கிறதாய் பாடல் ஆசிரியர் அமைக்கிறார். அந்தக் காசைப் போட்டு வைக்க செப்பு தா என்கிறார். செப்பு மூடியைத் தா என்று நாலாம் வரியில் கூறி செப்புக்கு மூடிவேண்டும். அப்பொழுதுதான் காசை பத்திரப்படுத்தலாம் என்பதை உணர்த்தி அதற்குரிய மூடியைத் தந்துவிடும்படி கூறும் ஆசிரியர், தாயார் செப்பு நிறையக் காசு தா என ஐந்தாம் வரியில் கூறுவதாய்ப் பாடுகிறார்.

முதலாம் வரியில் கூறிய காசை ஐந்தாம் வரியில் செப்பு நிரம்பத் தந்து விடு என்று தாயார் பாடுவதாய் காண்பிக்கிறார். இந்த நாட்டுப் பாடல் சிறிய பாடல். எளிய நடையில் குழந்தையின் விளையாட்டுப் பொருளைக் கொண்டே பாடப்பெற்ற பாடல். பெரிய விஷயத்தை குழந்தைக்கு தாயார் மூலம் சொல்லிக் கொடுக்கிறார். இந்தக் குழந்தை லௌகிக உலகத்தில் வாழ வந்திருக்கு. அந்த வாழ்க்கைக்கு பணம் மிக மிக அவசியம். அதோடு குழந்தை பணத்தை சிக்கனப்படுத்த வேண்டும். அதை வைப்பு செப்பாய் வைக்க வேண்டும். குழந்தை அதை உணர்ந்து வாழவேண்டும் என்பதற்கு இணங்கத் தாயார் செப்பை தா செப்பு மூடியைத் தா என்கிறாள்.



இப்பாடல் எப்போ பாடப்பெற்ற பாடல் என்று தெரியாது. எங்கள் அம்மா எங்களுக்குப் படித்தார். அவரின் அம்மா அவர்களுக்குப் படித்தார். அவர்களின் அம்மா அவர்களுக்கு படித்தார். இப்படி வழிவழி படித்தனர். இதை நாம் அநுபவத்தில் உணர முடிகிறது. ஆதியில் திருகோணமலையில் வில்லூண்டியில் இருந்தவர்கள் இன பந்துக்களாகவே இருந்தனர். இவர்களில் பலரும் எங்கள் தாயாரும் இப்பாட்டைப் பாடி எங்களுக்கு விளையாட்டு காட்டினார் என்று சொல்வதிலிருந்து இப்பாடல் நூறு வருடங்கள், நூற்றி ஐம்பது வருடங்களுக்கு மேலான பர்ட்டு என்பது தெரிய வருகிறது. இதை வேறு ஊரவர்களும் தம் குழந்தைகட்கு பாடி இருக்கின்றனர்.

இந்த தேகப்பயிற்சியை செய்வதால் குழந்தையின் உள்ளங்கை எலும்பு தசை நார் உரமேறுகிறது. விரல்களை நீட்டி மடக்குவதால், விரல்கள் பலம் பெற்று விரல்கள் மூலம் நுட்ப வேலைகளைச் செய்யக்கூடிய பக்குவமும், ஒரு பொருளைக் கையில் சில மணி நேரம் வைத்திருக்கும் கெட்டித்தனமும் குழந்தையை வந்து அடைகிறது.

RangaRakes tamilnavarasam.com

**அத்தியாயம் – 6**

## கை அசைத்தல்

இது போன்று குழந்தையின் அசைவுகளுக்கு ஏற்ப பல பாடல்கள் உள்ளன. முடிந்தவற்றைத் தருகிறோம். கையை மூடி விரிக்கும் குழந்தை கையை நீட்டி பொருட்களை வாங்கி கையில் வைத்திருக்க வெளிக்கிடுகிறது. இதனால் மணிக்கட்டை அசைக்கவும் சுழட்டவும் தேவை ஏற்படுகிறது. இந்த தேகப்பயிற்சியினை செய்விக்க முன்னையோர் எம் ஊரில் இப்பாட்டைத் தாயார் பாடுவது போலப் பாடினார். இப்பாடலும் நூறு நூற்றைம்பது வருட பாடலே. என் தாயாரின் வயதே நூறு வயதாகிறது (காலம் சென்றுவிட்டார்). அவர் அம்மம்மா படிக்கும் பாடல் என்றால் நூற்றைம்பது வருடம் மேலே தான் இருக்கும். இரு வரிப் பாடல். ஆனால் மிக மிக மகிமை பொருந்திய பாடல்.





இந்தாரும் ஐயா
ரவிகுல ராமச்சந்திரா

இரண்டு வரிகள் தான் இந்தாரும் ஐயா (இந்தாரும் பொருள் வாங்கும்) என்று முதல் வரியில் குழந்தையை விளித்து பொருளைக் காட்டுகிறார் (குழந்தை கைநீட்டி பொருளை பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தில்) அடுத்த வரி ரவி குல ராமச்சந்திரா என்று கூறி சூரிய வம்சத்தில் பிறந்த ராமனை நினைவு கூர்ந்து கூறி நீயும் ஒரு ரவி குல ராமச்சந்திரன் தான் என்பதாய் காட்டுகிறார். அக்குழந்தைக்கு ராமச்சந்திர மூர்த்தி யார் என்பதை விளக்கி அவர் ரவி குலத்தவர் என்பதைத் தாயார் சொல்லுகிறார்.

RangaRakes tamilnavarasam.com

இந்த ராமச்சந்திரமூர்த்தியின் நாமம் குழந்தையின் காதில் கேட்டாலே போதும். எந்தவித தோஷங்களோ கிரக கஷ்டங்களோ தீய சக்திகளோ அத்தீய சக்திகளினால் வரும் இடையூறுகளோ நீங்கிப்போய்விடும். இதைத் தாயார் உணர்ந்தே அந்தப் புனித நாமத்தைச் சொல்லிப் பாடுகிறார். அக்குழந்தையின் மனதில் இந்த விசேடப் புனித நாமம் பதியுமானால் அக்குழந்தை எந்தத் தீய செயல்களிலும் இறங்காது. அதன் உள்ளம் மிகப் புனிதமான நிலையில் இருக்கும். போட்டி, பொறாமை, பொய் பேசல் என்னும் கீழ்த்தர குணங்களைக் கனவிலும் நாடாது. அதற்கு நல்ல எண்ணங்களே மனதில் உதிக்கும். நற்செயல்களையே அக்குழந்தை நாடும். இந்த மந்திர ஜெப மகிமையால் அதன் சகல நற்கருமங்களும் வெற்றி பெறும். ஸ்ரீராமஜெயம் போன்றே ராமச்சந்திரமூர்த்தி நாமமும் மஹாமந்திரமாகும். சிவனாரும் கைலாயத்தில் நடனம் ஆடுகையில், ராமமந்திரம் சொல்லியே ஆடினார் எனப் புராணங்கள் கூறுகின்றன. இந்த மந்திரத்தைப் பாடலோடு பாடலாய் எப்படிக் குழந்தையின் செவியில் புகுத்தி விடுகிறார்கள் பாத்தீர்களா! இது வாழ்விற்கே உறுதுணையானது. குழந்தையின் மனதில் இது பதிந்துவிட்டால் குழந்தையின் மகிமைதான் என்னே. பெரியதொரு செயலை குழந்தையின் ஐந்தாம் மாதம் புகுத்தி விடுகின்றார்.



அதோடு மணிக்கட்டு தேகப்பயிற்சியும் நன்கு செயல்பட்டு, மணிக்கட்டு சுழட்டவும் பாரமான பொருளைத் தாங்கவும் கூடியதாய் வந்துவிடுகிறது. இதுவே இந்த இரு வரிப் பாடல் மகிமை. நாம் மேலே செல்வோம்.

அத்தியாயம் – 7

## தவழுகையில்

குழந்தை பிறந்து ஆறு மாதமாகிறது. உடம்பு பிரட்டிய குழந்தை இரு கைகளையும் ஊன்றி முழங்காலில் நின்று தவழ முயற்சிக்கிறது. யானை போன்று உடம்பை மேலும் கீழுமாய் ஆட்டுகிறது. அசைக்கிறது. இது யானை ஆடுவது போல தோன்றியபடியால் பாடல் ஆசிரியர் யானைப் பாட்டாய் தாய் படிப்பது போல் பாட்டை அமைத்து இருக்கிறார்.

அதோடு யானை, சமுத்திரம், சந்திரன் என்றாலே மனிதருக்கு மிக விருப்பமான பொருட்கள். அதில் யானையைப் பற்றிப் பாடினால் பாடுபவரின் மகிழ்வு தான் என்ன! அதை கேட்டு ரசிக்கும் குழந்தையின் குஷி தான் என்ன! நீங்கள் உங்கள் குழந்தைக்கு இதன் அசைவை சொல்லிக் காட்டிக் கொடுத்துப் பாடிப் பாருங்கள்! குழந்தை எவ்வளவு அழகாய் சிரித்துக் கொண்டு ஆடுகிறது என்று அநுபவத்தில் பார்த்து ரசித்து மகிழ வேண்டிய காட்சி இது. பாடலுக்கு வருவோமா?



ஆனையாடுமாம் பிள்ளை ஆனையாடுமாம்
என்ஆனை இதுஒரு பொன்ஆனை
எங்க குலத்து மதஆனை
கட்டிக்கரும்பு முறிக்குமாம் ஆனை
காவேரித்தண்ணி குடிக்குமாம் ஆனை
இந்தக் குட்டிஆனை வந்திருக்கு என்று
பட்டணத்து ஜனங்கள் எல்லாம்
பார்க்க வந்து நிக்கினமாம்.

இப்பாடல் ஆண் குழந்தையை உற்சாகப்படுத்தும் விதமாகவே உள்ளது. கட்டு கட்டாய் யானை கரும்பை முறித்துத் தின்னுவது காவேரி தண்ணீர் குடிப்பது எல்லாம் வீரம் மிகுந்த செயல்கள். எங்கள் குலம் விளங்க வந்த செல்வம் என ஆண் மகவைத்தான் குறிப்பிடுவர். பெண் குழந்தைகள் பருவம் அடைந்தவுடன், இன்னொருவருக்கு

RangaRakes tamilnavarasam.com

கன்னிகாதானம் செய்து கொடுப்பதாலும், ஆண் குழந்தை பருவ வயதுப் பெண்ணை கன்னிகாதானமாக்கி வீட்டுக்கு கொண்டு வருவதாலும் குலம் விளங்க வைப்பவர் ஆண் குழந்தைகளே எனப் பழையோர் கருதினர். ஆகையால் வீரம் மிகுந்த ஆனைக்குட்டியைப் பார்க்க பட்டணத்து ஜனங்கள் எல்லாம் வந்து இருக்கிறார்களாம் என்று பாடுகிறார்.

இப்படி பாடப்பாட குழந்தை கால்களை மடித்து, முழங்காலில் இருந்து கைகள் இரண்டையும் ஊன்றிக்கொண்டு கன்றுக்குட்டி யானைக்குட்டி நிற்பது போல் தவழ்ந்து கொண்டு, அசைந்து அசைந்து முன்னும் பின்னுமாய் ஆடும். இத் தேகப்பயிற்சியால் முள்ளம் தண்டு எலும்பு வலிமை பெறுகிறது. நாரி சந்து இவை உறுதியாகின்றது. இருதயம் நன்கு வேலை செய்து சுவாசப் பைகள் நன்கு வேலை செய்கின்றன. கூடுதலான சுத்தக் காற்றை குழந்தை சுவாசித்தது. குழந்தைக்கு நன்கு பசிக்கின்றது. நன்றாய்ப் பால் குடிக்கிறது. நல்ல நித்திரை கொண்டு எழுந்து, நல்ல ஆரோக்கியமாய் வளர்கிறது.

தமிழ் மக்கள் தங்கள் குழந்தைகளை நல்ல தேகப்பயிற்சி கொடுத்து வளர்த்தார்கள். அழகான நாட்டுப் பாடலைப் பாடி உற்சாகப்படுத்தி தேகப்பயிற்சியைச் செய்யவைத்து விடுகிறார்கள். அநேகமாய் இப்பாடல் இந்தியாவில் உள்ள சோழ மன்னர் இங்கு வந்து ஆட்சி செய்யும் பொழுது, இங்கு வந்தமர்ந்த



மக்களால் பாடப்பெற்ற பாட்டாய் இருக்க வேண்டும். 1010ஆம் ஆண்டு முதலாம் இராஜேந்திர மன்னன் திருகோணமலையைத் தனதாக்கி ஆண்டான். கந்தளாய் சிவன் கோவிலில் திருப்பணிகள் செய்ததாக வரலாற்று ஏடுகள் கூறுகின்றன.

அச்சமயம் அங்கு வந்தமர்ந்த இந்திய குடிகள் தம் குழந்தைகளுக்கு பாடிய பாடலாய் இருக்கவேண்டும். இந்த ஆசிரியர் காவேரி தண்ணீர் யானை குடிப்பதாய் பாடலில் அமைத்துப் பாடுவது சோழர் வருகைக்கு பின்னே தோன்றிய பாடல் என்றே எண்ணத் தோன்றுகிறது. பழைய காலப் பாடல்களாய் வழி வழியாய் பாடி வந்த தமிழர்கள் 1010 ஆண்டின் பின் இந்தப் பாட்டினையும் தம் குழந்தைகளுக்கு பாடியதில் வியப்பில்லை.

RangaRakes tamilnavarasam.com

அத்தியாயம் – 8

## இருந்து விளையாடுகையில்

இந்தப் பாடலைப் பாருங்கள். இது குழந்தை இருக்கும் பருவத்தில் பாடிய பாடலாகும். தவழ்ந்து கொண்டு செல்லும் குழந்தை கால்களை சப்பாணம் கொட்டி இருக்க முயல்கிறது. அந்நேரம் பெற்றவர்களோ உறவினர்களோ குழந்தையின் முதுகு வளையாதபடி பார்த்துக் கொள்கிறார்கள். அதைக் கவனிக்காமல் விட்டால் குழந்தை முதுகு கூனிப் போய்விடும். சிறு பிள்ளைகளைத் தூக்கி எடுப்பது இருக்க வைப்பது நடக்க வைப்பது இவைகளில் அவதானம் தேவை. கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் எதற்கு? அன்றைய காலத்தில் பிள்ளைகளைப் பெற்றோர் அன்புடனும் அவதானத்துடனும் வளர்த்தார்கள்.

அதனால் இன்று போல் பிள்ளைகள் நலன் கருதி வைத்தியரைத் தேடிச்செல்வது மிகக் குறைவாகவே இருந்தது. இன்றைய நிலைமை வேறு. குழந்தைகளின்







வளர்ப்பில் கூடிய கவனத்தை செலுத்த முடியாத பெற்றோர் நிலை. வேலைக்காக தாய் தந்தையர் வீட்டைவிட்டுக் கிளம்பி விடுவார்கள்.

குழந்தைகளின் சாப்பாடு, குளிப்பு, இருக்கை எல்லாமே வேறு ஒருவர் கையில் சிக்கிவிடும். இதனால் குழந்தை பாதிக்கப்பட்டு வெவ்வேறு வருத்தம் குழந்தைக்கு வந்து விடுகிறது. பழைய கால மக்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தனர். இப்பொழுது முற்றாய் அப்படி வாழ முடியாவிட்டாலும், இயன்ற அளவு எமது பிள்ளைகட்கு

தமிழ்ப் பாடல் மூலம் பிள்ளையின் இயற்கைத் திறனைக் கூட்டி வாழலாம் அல்லவா?

சப்பாணம் கொட்டி இருக்கும் குழந்தையின் நான்கு பக்கத்திலும், தலைஅணையை அணையாக வைத்து குழந்தை கூனாமல் நிமிர்ந்து இருக்கச் செய்து விடுவார். இப்படிச் செய்வதால் குழந்தை முதுகு இடுப்பு வளையாமல் நல்ல நிலையில் இருக்கும். இக்குழந்தை இருக்கும் நேரத்தைக் கூட்டுவதற்காய் அக்குழந்தையின் கருத்தைக் கவர பாட்டு பாடுவார்கள். அப்பாட்டில் ஒன்று

சாழ சாழ சப்பாணி
சப்பாணம் கொட்டுமாம் எங்கபிள்ளை
முத்துக் கொட்டுமாம்
எங்க பிள்ளை
முழங்கிக் கொட்டுமாம்
எங்க பிள்ளை

இந்தப் பாட்டில் சாழ சாழ சப்பாணி என்று முதல் வரி இருக்கிறது. சாழ சாழ என்னும் சொல் கையால் தாளம் இடுதல் என்பதையே குறிக்கும். மாணிக்கவாசகப் பெருமான்கூட தனது திருவாசகத்தில் சாழலோ பதிகம் என இருபது பாடல்கள் பாடியுள்ளார். ஒவ்வொரு பாட்டிலும் சாழலோ என்றே முடியப் பாடினார். அதில் ஒரு பாட்டைப் பார்ப்போம்.



பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோதும் காணேடி
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசன் அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ

இப்படி இவர் பாடியதிலிருந்து கையைத் தாளமிடக் கூறும் சொல்லான சாழலோ என்னும் சொல் மாணிக்கவாசகர் காலமாகிய 9ம் நூற்றாண்டில் இருந்து வழக்கில் வந்த சொல் என்று விளங்குகிறது. தாலோ என்று தாலாட்டும் சொல் ஏலோ என்று ஓடம் செலுத்த பாவிக்கும் சொல், சாழலோ என்று கைத்தாளமிட பாவிக்கும் சொல். மூன்று ஒரு சேர்க்கை உள்ளவாய் இருத்தலை உற்று நோக்குங்கால், இவை மூன்றும் பழங்காலத் தமிழ்ச் சொற்கள் என்று விளங்குகின்றன. இதில் தாலோ தாலேலோ என்று தாலாட்டுச் சொல்லாய் மாறி வழக்கில் இருக்கிறது. ஏலோ என்னும் சொல் ஓடம் செலுத்த ஏலேலோ என்னும் சொல்லாய் மாறி ஓடம் ஓட்டும் பொழுது பாடி பாவிக்கிறார்கள். ஆனால் சாழலோ என்னும் சொல் சாழ சாழ என்னும் இந்த நாட்டுப்புறப் பாடலில்தான் காணமுடிகிறது.

வேறு எந்நூலிலும் இருக்கோ தெரியவில்லை. ஆனால் தற்போதைய காலத்தில் வழக்கொழிந்து விட்டது. இச்சொல்லை பாவிப்பவர் அருகிவிட்டனர். இப்பாட்டு வரியில் வரும் மற்ற சொல்லான சப்பாணம் கொட்டி என்னும் சொல் (சப்பாணம் என்பது இரு கால்களையும்

RangaRakes tamilnavarasam.com

மடித்து உட்காருவது) பந்தியில் இருந்து சாப்பிடுகையிலும் பெரியோரின் பேச்சை கேட்கையிலும் மேடைப் பேச்சை கீழே அமர்ந்து கேட்கையிலும், இறைவனை வழிபட பஜனைகளை செய்யும் பொழுது போட்டு அமர்ந்து கொள்ள சொல்லும் சொல்லாகும்.

இப்பொழுது சப்பாணம், சப்பாணி என்னும் சொல் ஒரு கேலிக்குரிய சொல்லாகி, காலால் நடக்க முடியாமல் சப்பாணம் போட்டு இருபவர்களையே சார்ந்து நிற்கிறது. பழைய காலம் இச்சொல் குழந்தைகளைக் குறிக்கும் சொல்லாக இருந்தது. இப்பாட்டின் மூலம் விளங்குகிறது.

சாழ சாழ சப்பாணி என்று குழந்தையை விளித்தே இப்பாட்டைப் பாடுகின்றார் பழையோர். அடுத்தவரி கையால் தாளம் போட்ட எங்கட பிள்ளை சப்பாணம் கொட்டி என்று கூறி, முத்தை கையால் அள்ளி வீசிக் கொட்டுமாம் என்பதைக் கூற முத்துக் கொட்டுமாம் எங்க பிள்ளை என்றும், மூன்றாம் வரியை அமைத்துப் பாடுகிறார். திருகோணமலை கடலால் சூழப்பட்ட நகரம். அங்கு கடல்படு திரவியங்கள் அதிகம் எடுக்கக்கூடிய செழிப்பான நகரமாய் பழைய காலத்தில் இருந்தது. அதனால்தான் முத்தைக் கொட்டி விளையாடும் பிள்ளை என்று பாடினார். அடுத்த வரி முழங்கி கொட்டுமாம் எங்க பிள்ளை எனப் பாடுகிறார். முழங்கி என்பது இடி ஓசையைக் குறிக்கும் சொல். எங்கட பிள்ளை இடி ஓசை



கேட்பது போல பெரிய சத்தத்துடன் தாளம் போடுமாம் என்கிறார்.

பழைய காலப்பாடல் எவ்வளவு சுவை நயத்துடன் பாடப்படுகிறது பார்த்தீர்களா! பழங்குடியினர் எவ்வளவு காலம் வழிவழியாய் இதைப் பாடி வந்திருக்கின்றனர். என்ன ஒரு பெருமையான விஷயம். கூனாமல் நிமிர்ந்து இருக்கும் பயிற்சியினைச் செய்து பழகவே, பாடப் பெற்ற பாடலாய் கருத வேண்டி உள்ளது. குழந்தை இப்பயிற்சியை மேற்கொள்வதால் சில மணி நேரம் அழகாய் நிமிர்ந்து இருக்க முடிகிறது. தோள் வலிமையை கை தட்டும் பயிற்சி மூலம் பெற்றுக் கொள்கிறது. கை தட்டி விளையாடுவதால் மனதில் நிரம்பிய மகிழ்ச்சி கொள்கிறது. கை நரம்புகள் எலும்புகள் பெலம் பெறுகின்றன. இந்த உயரிய தேகப் பயிற்சியால் குழந்தை தலையணையின்றி இருக்கும் பழக்கத்திற்கு உள்ளாகிறது. உடலும் உரம் பெறுகிறது. இனி குழந்தை எதை நாடிச் செல்கிறது என்பதைப் பார்ப்போம்.

RangaRakes tamilnavarasam.com

**அத்தியாயம் – 9**

# இருந்து சாய்ந்து விளையாடுதல்

குழந்தை இந்த மாதிரி தலையணைகளை அணைப்பாய் வைத்துப் பயிற்சி பெற்றுத் தலையணை இன்றி இருக்கப் பழகிக் கொள்கிறது. தவழ்ந்து வந்து விளையாட்டுப் பொருட்களைக் கண்டவுடன் அவ்விடத்தில் உள்ள விளையாட்டுப் பொருட்களான கிலுகிலுப்பை, பொம்மை முதலியவற்றை எடுத்து விளையாடுகிறது. கையில் வைத்து இருந்து கொண்டு விளையாடும் போது அந்த விளையாட்டுப் பொருள் கையில் வைத்திருக்கும் சந்தோஷத்தில் தன் உடலை முன்னும் பின்னுமாய் அசைத்து ஆடி ஆடி பொருளுடன் விளையாடுகிறது. இது சாய்ந்து நிமிர்ந்து சாய்ந்து விளையாடும் விளையாட்டாய் அமைகிறது. இதற்கு ஏற்ப தாயாரோ வேறு உறவினரோ பாட்டு ஒன்று பாட குழந்தை சாய்ந்து நிமிர்ந்து சந்தோஷமாய் ஆடுகிறது. அந்தப் பாட்டு இதோ! (குழந்தை பெண் ஆயின் அம்மா கண்ணே என்றும் ஆணாயின் ஐயா கண்ணா என்றும் பாடுவார்கள்.)



சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சாயமயிலே சாய்ந்தாடு
கொஞ்சும் கிளியே சாய்ந்தாடு
கோயிற் புறாவே சாய்ந்தாடு
குத்து விளக்கே சாய்ந்தாடு



இந்தப் பாடல் தமிழ் பேசும் மக்களில் அநேகர் தம் குழந்தைகளுக்கோ வேறு தெரிந்த குழந்தைகளுக்கோ பாடி வருகிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய் தமது கற்பனைக்கு ஏற்றவாறு பாடுவார்கள். இதைப் பாடும் தாயார் தன் கற்பனையை எவ்வாறு விரித்துப் பாடுகிறாள் என்றுதான் பார்ப்போமே.

சாய்ந்தாடு அம்மா என்று கூறி மயிலின் சாயல் உள்ளவளே சாய்ந்தாடு என்கிறாள். கொஞ்சிக் கொஞ்சி கிளியைப் போல் பேசுபவளே என்று சொல்வதற்காகக் கொஞ்சும் கிளியே சாய்ந்தாடு என்கிறாள். அழகான சாயலை மயிலில் கண்டு அவள் கொஞ்சிப் பேசும் இனிய குரலை கிளியில் கற்பனையில் கண்டவள், கள்ளம் கபடம் அற்ற வெள்ளை உள்ளமாய் தன் குழந்தையைக் கற்பனையில் கண்டு, அதை புறாவுக்கு ஒப்பிடுகிறாள்.

அதனால்தான் கோயில் புறாவே சாய்ந்தாடு எனப்பாடுகிறாள். பின் தன் குழந்தை மயிலின் சாயல்

RangaRakes tamilnavarasam.com

கொஞ்சும் கிளி, கபடமற்ற கோயில் புறா இவை எல்லாம் கடந்த ஜோதி மயமானவள் என எண்ணுகிறாள். எனவே குத்து விளக்கே சாய்ந்தாடு எனப் பாடுகிறாள்.

பார்த்தீர்களா! கவிஞன் இல்லை அவர்! ஆனால் தன் செல்லக் குழந்தையை அள்ளி விளையாடுகையில் எப்படிக் கற்பனை கொடிகட்டிப் பறக்கிறது என்பதை!

இந்த சாய்ந்தாடு என்னும் தேகப்பயிற்சி குழந்தையை பெலன் பெற்றதாக்குகிறது. மற்ற ஒரு பயிற்சியாகும் ஆனையாடுவது போல் செய்யும் விளையாட்டில் வரும் பயன் போன்றே, அந்த தேகப்பயிற்சி நின்று போக இது தொடருகிறது.

தவழும் பருவத்தில் "ஆனையாடும்" பாட்டின் மூலம் பெற்ற பயிற்சிகளையும் பயன்களையும் இப்பாட்டின் மூலம் குழந்தை பெறுகிறது. ஆனையாடுமாம் எப்படி ஆண் குழந்தைக்கு உரிய பாட்டோ அதே போன்று "சாய்ந்தாடு அம்மா" கூடுதலாய் பெண் மகவுக்காகப் பாட பெற்றதே என்று எண்ணத் தோன்றுகிறது. மயிலின் சாயல் கிளியின் கொஞ்சல், புறாவின் வெண்நிற உள்ளம் இவைகள் எல்லாம் கூடுதலாய் பெண்மையைக் குறிக்கும் சொற்களே. ஆனையாடுமாம் எப்படி ஆண் மகவின் வீரத்தை விளக்குகிறதோ அது போன்று சாய்ந்தாடு பெண் மகளின் குணங்களின் உயர்வினை சொல்லிக்காட்டுகிறது.



மகளைப் பற்றிப் பாடியோர் மகனைப் பற்றியும் பாடி இன்புறுதல் வியப்பில்லை.

எனவே இப்பாடலும் ஆனையாடும் பாடலோடு ஒட்டி வந்த பாடலாகத்தான் இருக்கும். அநேகமாய் 1010 ஆண்டுக்குப் பின் வந்த பாடலாய் இருக்க வேண்டும். இரு பாடல்களிலும் ஒரேவித தேகப்பயிற்சியை செய்யத் தூண்டுகிறார்கள். அது ஆண் குழந்தைக்கு இது பெண் குழந்தைக்கு என்றில்லாமல் இரு குழந்தைகளும் ஒரேவித பயனைப் பெறுகின்றன. உணவு உண்ணக் கொடுக்கும் போது கூட ஆண் குழந்தைக்கு ஏழாம் மாதமும் பெண் குழந்தைக்கு எட்டாம் மாதமும்தான் சோற்றினை முதலில் கொடுக்கிறார்கள்.

எனவே முன் பாட்டு ஆண் குழந்தைக்கும் பின் பாட்டு பெண் குழந்தைக்கும் படிக்கப்பட்டு இருக்கலாம்.

RangaRakes tamilnavarasam.com

அத்தியாயம் – 10

# உணவு உண்ணுகையில்

குழந்தைக்கு எட்டு மாதம் ஆகிறது. ஆண் குழந்தைக்கு ஏழு மாதத்திலும் பெண் குழந்தைக்கு எட்டு மாதத்திலும் சோறு ஊட்டுவார்கள். அப்பொழுது குழந்தைக்கு சாப்பாட்டைப் பற்றி சொல்லிக் கொடுப்பார்கள். எப்படி குழந்தைக்கு சொல்லிக் கொடுக்கிறார்கள் பாருங்கள்! பாட்டாக இல்லை; பேச்சாக பிள்ளை விளையாடும் சமயத்தில் சொல்லிக் கொடுக்கிறார்கள். இதைக் குழந்தை புரிந்துகொள்ளும் விதமாக ரசிக்கத்தக்க விளையாட்டு போன்று சொல்லிக் கொடுப்பார்கள். எப்படி என்று பார்ப்போமா?

முதலில் குழந்தையின் கைகளைப் பிடித்து, தம் கையில் விரித்து வைத்துக் கொண்டு, குழந்தையின் கட்டை விரலைத் (பெருவிரல்) தொட்டு, இது சோச்சி என்று கூறி எமக்கு பிடித்தமான குழந்தை சாப்பிடுவதற்கு ஏற்ற கறிகளை, அடுத்த நான்கு விரல்களையும் ஒவ்வொன்றாய்ப் பிடித்துப் பிடித்து சொல்வார்கள். எப்படி என்றால் குழந்தையின் சுட்டு விரலை எமது கையினால் பிடித்து,





இது பப்புகறி (பருப்புக்கறி) நடுவிரலைப் பிடித்து இது கெங்கு கறி, (கிழங்குக்கறி) மோதிர விரலைப் பிடித்து இது கீரைக்கறி, சுண்டு விரலைப் பிடித்து இது பொரியல் என்று கூறிக் குழந்தை உள்ளங்கையில் எமது முழங்கையை வைத்துக் 'கீரைகட கீரைகட' என்று செல்லமாய் உள்ளங்கையில் தேய்த்துப் பின் உள்ளங்கையில் இருந்து சாப்பாட்டை எடுப்பது போல் சிறிது எடுப்பதாய் பாவனை பண்ணிக் குழந்தை வாயருகே வைத்து, உப்பு போதுமா புளி போதுமா எனக் கேட்டுப் பின் எமது வாயருகே வைத்து உப்பு போதுமா புளி போதுமா என்று நாம் கேட்டு சுவைத்துத் தின்பது போல் பாவனை பண்ணி,

RangaRakes tamilnavarasam.com

அச்சா அச்சா என்று கூற குழந்தைக்கு ஓரளவு சாப்பாட்டின் மேல் ஆசை பிறக்கும்.

பின் அதை செல்லச் சிரிப்பாய் மாற்ற குழந்தையின் முன் கையில் எமது சுட்டு விரல் நடு விரலை மாறி மாறி ஊர்வது போலச் செய்து நண்டூர நரியூர என்று சொல்லிக் குழந்தையின் கமக்கட்டு வரை விரலை ஊர்வது போல் கொண்டு வந்து கீச்சம் வரச் செய்து சிரிக்கப் பண்ணவேண்டும்.

இப்படிச் செய்வதால் குழந்தை சாப்பாட்டை விரும்பத் தொடங்கி சாப்பிட ஆரம்பிக்கும். பின் சாப்பாட்டை சுவைபடச் செய்து கொடுக்க குழந்தை விளையாடி விளையாடி உண்ண ஆரம்பிக்கும்.

குழந்தைகளுக்கு சாப்பாடு தீத்துவது ஒரு இன்பம். குழந்தைகளுக்கு உறைப்பு இல்லாமல் சிறிதளவு உப்பு புளி சுவையோடு நன்றாய்க் குழைந்த சோற்றை மசித்துக் கறியுடன் சேர்த்துக் கொடுக்கையில் அக்குழந்தை சாப்பிட்டு விட்டால் எமக்கு வரும் நிம்மதியும் இன்பமும் வேறு எதிலும் வராது. குழந்தைகளை வளர்ப்பதே ஒரு இன்பம்தான். அவர்கள் பிறந்தவுடன் தாயானவள் களைத்துப் போய் கண்களை மூடியபடி படுத்து இருக்கிறாள். தாதி (நர்ஸ்) கையில் குழந்தையைக் கொண்டு வந்து தாயிடம் காட்டுகிறாள். அப்பொழுது ஒரு இன்பம் ஏற்படுகிறதே! அதற்கு ஈடு ஏது இணை ஏது?



தான் பிரசவித்த நோவைக் கூட அந்தப் பேதை மறந்து விடுகிறாள்.

குழந்தை பசியில் காலையும் கையையும் உதைத்து அழ, தாயானவள் அக்குழந்தையை மார்போடு அணைத்து தன் பாலை குழந்தைக்கு ஊட்டுகிறாள். இதில் அவள் பெறும் இன்பத்திற்கு ஈடு இணை உள்ளதா?

மெல்லிய சுடுநீரில் குழந்தையைக் குளிக்க வைத்து, அதற்கு குழந்தைக்கு என்று வாங்கிய சோப்பை போட்டுக்கழுவி, பஞ்சு போன்ற மெல்லிய துணியால் துடைத்து ஓடிக்கலோன், பவுடர் இவற்றை அந்த மென்மையான சருமத்தில் தடவி, ஒரு அழகிய உடுப்பை குழந்தைக்கு அணிவித்து பொட்டிட்டு பார்க்கையில் ஏற்படும் இன்பம், ஈரேழு லோகமும் எமக்கு கிட்டினாலும் கிடைக்குமா என்பது சந்தேகம்தான்.

குழந்தை ஒன்றுக்கு இரண்டுக்கு போய்விட்டால், தாயானவள் அந்த சாணனையை மாற்றும் பொழுது ஏற்படும் நிம்மதிதான் பசியாற சாப்பிட்டு எழுந்தால்கூட வராது. அவ்வளவு இன்பம்.

இப்படி குழந்தைகளுக்கு ஒவ்வொரு செயலையும் செய்து அவற்றின் பெறு பேறுகளின் பின் தாய் அடையும் சந்தோஷம்தான் என்னே! அதுதான் தாய்மை; பெண்மையின் பிரதிபலிப்பு. கருணை அன்பின் அவதாரமாய் தன் செல்வனையோ செல்வியையோ

RangaRakes tamilnavarasam.com

வளர்ப்பதில் வரும் இன்பம் பெண்ணுக்கு வேறு எதில்தான் உண்டு. குழந்தைக்கு சுவைபட சாப்பாடு கொடுத்து அக்குழந்தை சாப்பாட்டில் விருப்பம் கொள்ள வைப்பதே தனிக்கலை. இன்னொரு பாடல் என்று சொல்ல முடியாவிட்டாலும், ஒரு கவிதை பாடல் போன்று பாடிக் குழந்தையை சாப்பாட்டில் விருப்பம் கொள்ளச் செய்யும் நிலையைப் பாருங்கள்.

சின்னான் சின்னவிரல்
சின்ஒட்டி பூமாலை
வாழ நெடுங்காச்சி
வந்தாரை கை காட்டி
ஒன்றும் தெரியாத ஊமைச்சி

என்று குழந்தையின் ஒவ்வொரு விரலாய்ப் பிடித்துப் பிடித்துக் கூறவேண்டும். பின் முன்னே சொன்னது போல குழந்தையின் உள்ளங்கையில், தமது முழங்கையை வைத்து 'கீரை கட கீரை கட' என்று சொல்லித் தேய்த்துக் குழந்தைக்கும் உப்பு புளி சரியா என்று கேட்பது போல் அபிநயித்து தானும் உப்பு புளி பார்ப்பது போல அபிநயித்து நல்லம் நல்லம் என்று கூறி, சாப்பாட்டை எடுத்து இது அப்பாவுக்கு, இது அம்மாவுக்கு, இது அண்ணாக்கு என்று வீட்டில் உள்ள உறவுக்காக உண்பதாய் குழந்தைக்குக் காட்ட குழந்தை அவர் மேல் கொண்ட அன்பால் சாப்பிடும். சாப்பிடாவிட்டால் அண்ணா பாவம் அழப்போறான். அம்மா பாவம் அழப்போறா



என்று சொன்னால் குழந்தைக்கு அழுவது பிடிக்காதபடியால் தான் சாப்பிட்டுவிடும்.

பின்பும் இந்த விளையாட்டைத் தொடரும் விதமாய் சாப்பிட்டபின் ஆ கழுவிக் காக்காய்க்கு கொடுப்போம். கழுவிக் கழுவி குருவிக்கு கொடுப்போம் என்று செல்லமாய் விளையாட்டைக் காட்டினால், அக்குழந்தை பிற்காலம் எல்லாரினதும் பசியை போக்க தன்னால் முடிந்ததை செய்யக்கூடிய நிலைக்கு வரும்.

பிள்ளையை உருவாக்குவது தாயின் செயல். மற்றதைப் பார்ப்பது இறைவன் செயல். பக்குவமாய் வளர்த்தல் தாயின் கடமை.

கீரையும் சோற்றையும் கடைந்து உனக்கு உண்ணத் தருவோம். நீ உறவுகளுக்காக அப்பா, அம்மா, அக்கா, அண்ணா எல்லோருக்காகவும் சாப்பிட வேண்டும். சாப்பிட்டு மிச்சத்தைக் கொட்டாமல் குருவி நாய் காக்கைக்கு கொடுத்து விடு என்னும் பாடத்தை உண்ணும் பொழுது படிப்பித்து விடுகிறார்கள். எட்டே மாதமான குழந்தைக்கு எவ்வளவு பெரிய விஷயத்தை எளிமையாக, இனிமையாக சொல்கிறார்கள், நமது மூதாதையர்கள். எல்லோருக்காகவும் சாப்பிட்டு விடு! பின்னால் அவர்களைப் பார்க்க வேண்டி வரலாம். அவர்களுக்காய் உணவை உண்டுவிடு எனக் கடமையைக் கூடக் கூறாமல் கூறும் பழக்கம் தமிழரிடையேதான் உண்டு.

RangaRakes tamilnavarasam.com

அதோடு மாத்திரமல்ல காகம் குருவிக்கு சாப்பாடு கொடுப்பதாய் கூறி குழந்தையை கவர்ந்து அக்குழந்தையை தான தர்மத்தில் ஈடுபட வைக்கக் கருதியே சொன்னார்கள். தமிழர்கள் தாமும் சந்தோஷமாய் வாழ்ந்தார்கள். மற்றவர்களையும் மனநிறைவுடன் வாழவைத்தனர்.



அத்தியாயம் – 11

## எழுந்து நிற்கையில்



குழந்தை பிறந்து ஒன்பது மாதம் தொடங்குகிறது. குழந்தை எழும்பி நிற்கத் தொடங்குகிறது. அப்போ குழந்தை நிற்கையில் கால் நிற்கப் பழக்க நிற்க முடியாமல் நிற்பதும் இருப்பதுமாய் கூத்துக் காட்டுகிற மாதிரி

RangaRakes tamilnavarasam.com

இருக்கிறது நிற்கிறது. இதை தாயார் சாதகமாக்கி அந்த மழலையை சந்தோஷப்படுத்த எண்ணிப் பாடுகிறாள்.

கூத்து கூத்து கூத்து
கூத்து வந்தது கூத்து
எப்படி எப்படி கூத்து
இப்படி இப்படி கூத்து
நேத்து வந்தவள் ஆடுகிறாள்
நெத்தலி விற்றவள் ஓடுகிறாள்
பார்க்க வந்த சனங்கள் எல்லாம்
பணம் இருந்தா போடுங்கோ
காசு இருந்தா போடுங்கோ
பை நிறைய போடுங்கோ

இப்பாட்டு எக்காலம் பாடிய பாட்டு என்று தெரியாது. ஆனால் கலைகளை மக்கள் ரசித்துப் பார்த்தார்கள் என்பது பாட்டின் மூலம் எம்மால் விளங்கிக் கொள்ள முடிகிறது.

குழந்தை காலை மடித்து மடித்து எழும்புவதை குழந்தை கூத்துக் காட்டுகிறது என்று எண்ணும்படி பாடலாசிரியர் சுவையாய்ப் பாடுகிறார்.

ஆகவே அக்காலத்தில் இப்பாடல் பாடப்பெற்ற திருகோணமலையிலும், சுற்றிய கிராமங்களிலும் கூத்து என்னும் கேளிக்கை நிகழ்ச்சி நடைபெற்று உள்ளது என்பதை நாம் உணரக்கூடியதாய் உள்ளது.



லலித கலைகளாகிய பண்பரதத்தைப் போன்றே பழமையானது கூத்து எனலாம். மக்கள் அலுத்து களைத்து இருக்கும் சமயம் அவர்களின் களைப்பை நீக்கி அவர்களுக்கு ஒரு புத்துணர்வையும் மகிழ்ச்சியையும் இந்த கூத்துகள் கொடுத்தது என்றால் மிகையாகாது.

நாட்டுப்புறப் பாடல்களை அபிநயமாகப்பாடி அதற்கேற்றவாறு தாளகதியில் கால்களை துரிதமாக இடம் மாற்றிக் குதித்து வளைந்து பல பாணிகளில் மக்களைக் கவர்ந்து இந்த நாட்டுப்புறக் கூத்தை நடத்தினர்.

மேடைகளிலும் தெருவீதி மரத்தின் கீழும் இக்கூத்தினை அரங்கேற்றிக் காட்டினார்கள். தெருக் கூத்துக்களில் பெண்கள் பங்கேற்பதில்லை. ஆண்களே பெண் வேடம் போட்டு கூத்துகளை நிகழ்த்தி வந்தனர்.

இலங்கையிலும் கூத்துகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. மட்டகளப்பு யாழ்ப்பாணத்தில் ஒவ்வொருவித பாணியில் கூத்து நடைபெறுகிறது. இதை வடமோடி தென்மோடி என அழைத்து வித்தியாச ரகங்களில் கூத்தை ஆடுவர். திருகோணமலையிலும் சதிர் என்ற பெயருடன் நடனம் ஆடப்படுகிறது.

கூத்துகள் வெளியூர்களில் இருந்தே அநேகமாக கொண்டு வந்து காட்டப்படுகின்றன. இராமாயணம், மகாபாரதத்தில் இருந்து பல காட்சிகளையும்,

RangaRakes tamilnavarasam.com

அரிச்சந்திரன் கண்ணகி கதையினையும், பல பழந்தமிழ்க் காவியக் கதைகளையும் கூத்தாய் நிகழ்த்துவர். இவற்றைப் பழைய காலத்தில் மேடை அமைக்காது மரத்தின் கீழேயே நிகழ்த்துவார்.

இவையே தெருக்கூத்தாய் மிளிர்ந்தது. அநேகமாகப் பாடலாசிரியர் பாடும் பாடல் இந்திய மன்னன் இலங்கையை ஆண்ட காலத்தில் கூட வந்து இருக்கலாம். கூத்தினைப் பற்றியே ஆராய்ந்து பாடி நேற்று வந்தவள் ஆடுகிறாள் என்ற கூற்றின் மூலம், இது அந்தப் பெண் ஆடும் நடனத்தைக் குறிப்பது போலவே இருக்கிறது. கூத்தாகில் பலர் சேர்ந்து நடிப்பது ஆடுவதுமாய் இருக்கும். தனித்த பெண் ஆடுவதாய் பாடுகிறார். நெத்திலி விற்றவள் ஓடுகிறாள் என்று பாடுவதில் இருந்து இந்த கூத்தினை மக்கள் கூட்டமாய் நின்று ரசிக்கிறார்கள்.

இந்த நேரம் இந்தச் சிறிய மீனாகிய நெத்திலியை ஒருவரும் வாங்க மாட்டார்கள். ஜனத்திரளில் கூடையோடு கவிழ்த்துக் கொட்டி மீனே பொறுக்க முடியாமல் போய்விடும் என்று வெகுண்டு ஓடுவது போலே நகைச்சுவையோடு பாட்டைத் தாயார் பாடுவதாய்ப் பாடி இருக்கிறார். தன் குழந்தையின் கூத்து ஜனங்களைக் கூட்டி நின்று பார்த்து ரசிக்க வைக்கிறது. சும்மா பார்க்காமல் கூத்துக்கு பணத்தை போட்டுப் போங்கள் என்று தாயார் கேட்பது போல் பாட்டை அமைத்திருக்கிறார். பாடலாசிரியர் தன் மழலைச் செல்வம் நடக்கப் போவதற்கு கால் வைத்து நிற்கையில்



இவ்வளவு கற்பனையையும் கனவையும் காண்பதாய் காண்பிக்கிறார்.

வேறு ஒரு பெண் கூத்து கூத்து எனப் பாடத் தொடங்க, அவள் வியாபாரம் செய்வதாய் குரக்கன் மாவை வாங்குவதற்கு ஆள் வந்து விடுகிறாராம்; வியாபாரத்திலும் ஒரு கண்; குழந்தையிலும் ஒரு கண். எப்படிப் பாடுகிறாள் பாருங்கள்!

கூத்து கூத்து குமரப்பா
குரக்கனை கொட்டி உமலைதா

பிள்ளையை பாட்டு படித்து பராமரிக்கிறாள். அதே சமயம் தன் வியாபாரத்திலும், கண்ணாய் இருக்கிறாள்.

ஆரியக் கூத்தாடினாலும் தாண்டவக்கோனே
காரியத்தில் கண்ணாய் இரு தாண்டவக்கோனே

என்னும் பாடல் இவளுக்கு நன்கு பொருந்துகிறது அல்லவா?

நிற்கையில் இதைப் பாடுவதால், குழந்தை பாடல் பாடும் போதெல்லாம் முழங்காலை மடித்து நிமிர்த்தும். இது முழங்கால் சில்லு பெலன்பெற நல்லதொரு தேகப்பயிற்சி, இந்தப் பயிற்சி குழந்தை ஓட்டப் பந்தயத்தில் கூட வெற்றி கொள்ளும் நிலைக்கு கொண்டு வரக்கூடும். என்னே இத்தேகப்பயிற்சி மகிமை!

RangaRakes
tamilnavarasam.com

அத்தியாயம் – 12

## நடக்கையில்

எழும்பி நிற்கும் குழந்தை தன் பட்டுப்போன்ற மென்பாதங்களைத் தூக்கி அடி எடுத்து வைக்கிறது. (இப்பாடல் ஆண் குழந்தையைக் குறித்து பாடும் பாடல் இன்று பெண் குழந்தைகளும் உலகை ஆளும் இடத்தில் உள்ளனர். அவர்களுக்கும் இது பொருந்தும்)

குழந்தை வேலன்
நடந்து வாறான்
தேரில் ஏறி
தெருவீதி வாறான்.

இதுதான் பாடல். ஆனால் இப்பாடலில் பாரிய அர்த்தமும் சக்தியும் உண்டு. தாய்மார் பிள்ளை நடப்பதை கண்ட சந்தோஷத்தில் முருகனை நினைத்துப் பாடி மகிழ்வதாய் தான் நாங்கள் நினைப்போம். ஆனால் பாடலாசிரியர் பாரிய அர்த்தத்தில்தான் இப்பாடலைப் பாடியுள்ளார் என்பது சிலரின் கருத்துக்குப் புரிந்துவிடும்.





மனித வாழ்வின் மேன்மையே நடையில்தான் தொடங்குகிறது. ஒரு மனிதன் பிறந்து நடக்கத் தொடங்கிய நாள் முதல் எதற்கு எதற்கு என்று இல்லாமல் எல்லாத்திற்கும் நடக்கிறான். தாயிடம் சாப்பிட தளிர் நடையில் நடந்து வந்து சாப்பிடுகிறான். தோழரோடு விளையாட நடக்கிறான்; ஓடுகிறான். ஐந்து வயதில் கருத்தறியா பிஞ்சு வயதில் படிப்பதற்குப் பாடசாலையை நோக்கி நடக்கிறான் அந்தக் குழந்தை வேலன். நடந்து நடந்து பாடசாலை நோக்கி நடந்து வாலிப பிராயத்தை எட்டும் வரை படிக்கிறான். அவன் சிந்தனைகள் விரிவடைகின்றன.

 tamilnavarasam.com

சில குழந்தைகளின் நடை பட்டப்படிப்பை நோக்கிச் செல்கிறது. சில குழந்தைகளின் நடை பாதை மாறிச் செல்கிறது. பாதை மாறிச் செல்லும் குழந்தைகள் நடை பெற்றோருக்கும் அக்குழந்தையை சூழ உள்ளோருக்கும் பெரும் மன வருத்தத்தை விளைவிக்கிறது. குழந்தை வேலன் நடந்து வருவது போல் தளர்நடையில் வரும் குழந்தை பாதை மாறி விடக்கூடாது என்பது கருதியே அடுத்தவரியை பாடுகிறார் என்ன வரி பாருங்கள்.

தேரில் ஏறி
தெருவீதி வாறான்

குழந்தையே இப்பொழுது நீ பச்சிளம் பாலகன். குழந்தை முருகன் போன்றே நடந்து வருகிறாய். அதே போன்று முருகன் திருஉலா வர தேரில் வருவது போன்று படித்து உத்தியோகம் பார்த்து காரில் உலா வரவேண்டும். பாதை மாறிவிடாதே என்று சொல்வது போன்றே இந்த இரண்டு வரி பாடல் அமைந்து இருக்கிறது அல்லவா? ஆகவே தளர்நடையில் குழந்தை வடிவேலன் போன்று நடந்து வரும் குழந்தை வாலிபப்பருவத்தில் முருகன் தேரில் திரு உலா வருவது போல் படித்துப் பட்டம் பெற்று, நல்ல உத்தியோகம் வகித்து காரில் ஆகாய விமானத்தில் எல்லாம் வரவேண்டும்.

அதைப் பார்த்து தாய் தந்தையர் முருகன் தேரில் தெருவீதி வருவதைக் கண்டு எவ்வளவு ஆனந்தக் கண்ணீரோடு அதை தரிசிக்கிறாரோ, அதே போன்று ஆனந்தக் கண்ணீரோடு பிள்ளையின் அந்தக் காட்சியைக் காணவேண்டும். இதுதான் பெற்றோர் கனவு. வாலிப வயதை அடைந்தால் பிள்ளைகள் அந்தக் கனவை நிறைவேற்றி வைப்பதையே ஒவ்வொரு தாய் தந்தையும் நினைக்கின்றனர்.

அதனால்தான் பாடலாசிரியர் நடக்கத் தொடங்கும் பிள்ளைக்கு எவ்வளவு கடமை என்பதையே பாடல் மூலம் சொல்லிக் கொடுக்கிறார். முருகன் அக்குழந்தைக்கு துணை நிற்கும் என்பது போலே, முருகன் பாட்டாலேயே அக்குழந்தையின் நடை பற்றிப் பாடிவிட்டார். பாடலாசிரியர் பாடலாசிரியரின் அன்பும் கடமை உணர்வும்தான் என்னே!



RangaRakes tamilnavarasam.com

அத்தியாயம் – 13

## கை வீசி நடக்கையில்

குழந்தைகள் நடக்கக் கற்றுக் கொள்கின்றன; நடக்கின்றன; வாழ்க்கை முழுக்க நடக்கும் நடையை சிறுவயதில் மதலைப் பருவத்தில் கற்று அடி எடுத்து வைக்கின்றன. அந்த எடுத்து வைக்கும் அடி எல்லாக் குழந்தைகட்கும் நல்ல வாழ்வினைக் கொடுக்கவும், அவர்கள் மகிழ்ச்சியோடு வாழவும் எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்தித்துக் கொள்கிறேன். இனி பாட்டுக்கு வருவோம். பாடலாசிரியர் யார் என்றே தெரியாது. ஆனால் அவர் கருணை மிகுந்தவர் என்பது அவர் பாடலில் இருந்து தெரிகிறது.

இப்பாடல் தமிழ் நாடு எங்கும் தமிழ் பேசுபவர் பலரும் பரவலாய்ப் பாடி வருவதை நாம் கேட்கக்கூடியதாய் இருக்கிறது. ஏன் குழந்தைகள் படிக்கும் புத்தகங்களில் கூட அச்சிட்டு இருக்கிறார்கள். பாட்டினைப் பாடுகையில் ஆண் குழந்தையாய் இருந்தால் ஐயா என்றும் பெண் குழந்தையாய் இருந்தால் அம்மா என்றும் படிக்கவேண்டும். பாட்டுக்கு வருவோமா!





கைவீசம்மா கைவீசு
கடைக்குப் போகலாம் கைவீசு
பட்சணம் வாங்கலாம் கைவீசு
பாடித் தின்னலாம் கைவீசு
கோவிலுக்குப் போகலாம் கைவீசு
கும்பிட்டு வரலாம் கைவீசு

என்று பாடிக் குழந்தைகளை வழி நடத்தினார்கள். பாடலை மேல் எழுத்து வாரியாக பார்க்கையில் கைவீசி கடைக்கு செல்லுங்கள். பட்சணம் வாங்குங்கள் பாடி சாப்பிட்டு கோயிலுக்கு போய் கும்பிட்டு வாருங்கள் என்று சொல்கிறார்கள். மந்திரத்தை கருத்து விளங்காமல் சும்மா சொல்லிவரினும் அதன் சக்தி இருக்கத்தான் செய்யும். அது போன்று பாட்டினைப் புரிந்து கொள்ளாமல் குழந்தைக்குப் பாடி அக்குழந்தை கையை வீசிக் காட்டுகையில் தாய் தந்தையருக்கு மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்யும். ஆயினும் பாட்டின் கருத்தை புரிந்து பாடினால் மகிழ்ச்சி இரட்டிப்பு ஆகலாம் அல்லவா?

கைவீசம்மா கைவீசு – கையை வீசி நட. அப்படியானால் கடைக்கு காசு கொண்டு செல்லாமல் கைவீசி நடந்து சென்று பட்டசணம் வாங்கமுடியுமா? பின்னால் வருபவர் யாரும் காசைக் கொண்டு

RangaRakes tamilnavarasam.com

வருவார்களா? அப்படியானால் அது பாட்டில் வரவில்லையே! அப்படியானால் வேறு கருத்து இப்பாட்டுக்கு உள்ளது. அது என்ன? பொருள் கைவீசுகையில் மனம் சந்தோஷம் அடைகிறது. இந்த மனம் கவலையற்று இருத்தல் வேண்டும்.

குழந்தைகள் முக்கியமாய் எதைப்பற்றியுமே கவலை கொள்ளக்கூடாது. அவர்கள் கையை வீசி நடக்கையில் தாய் கண்டித்தது ஞாபகத்திற்கு வராது. தோழரோடு விளையாடித் தோற்றுப் போனது ஞாபகம் வராது. பொம்மை வாங்கி தரச் சொல்லி தந்தையிடம் அடம்பிடித்து அழுதது ஞாபகம் வராது. அந்த கைவீசலில் உள்ள களிப்பே குழந்தையிடம் இருக்கும்.

எனவே அந்தச் சின்ன மழலையின் கவலையைப் போக்கவே பாடலாசிரியர் கைவீசம்மா கைவீசு என்று பாடி, கடைக்குப் போ. பட்சணத்தை வாங்கிக்கொள். உனக்குப் பிடித்தமான சுவையான பட்சணத்தை வாங்கிப் பாடிப்பாடி உண்டு கொள். இதனால் குழந்தைக்கு இருக்கும் உடல் சோர்வு நீங்கிப் போகிறது. பிறகு பாடலாசிரியர் என்ன கூறுகிறார், கவனியுங்கள். கோயிலுக்கு போகலாம் கைவீசு என்கிறார். உடல் சோர்வு விரும்பிய பட்சணங்களை உண்ணுவதால் தீர்ந்து போகும்.

ஆனால் மனச்சோர்வோ அது தீரப் பெரியவர்களும் சரி சிறுவர்களும் சரி இறைவனைத்தான்



வணங்கவேண்டும். அதனால் தான் பாடலாசிரியர் அந்தக் குழந்தையை கோயிலுக்குப் போகலாம் கைவீசு, கும்பிட்டு வரலாம் கைவீசு என்கிறார்.

இந்தக் கைவீசி வாழும் பழக்கம் வாழ்வின் எல்லை வரை வரவேண்டும். பெரிய மனிதர்களாய் வந்து வாழும்போது எத்தனை கவலைகள் இடர்கள் வாழ்வில் வரும். அத்தனை கவலைகளையும் மனதில் எடுத்தால் வாழ்வுதான் என்னதிற்காகும்?

எனவே கைவீசி வாழ்வது போல எதுவுமே நிலையற்றது. எது வரினும் கையை வீசி வாழ்ந்து விடுவோம்; வாழ்க்கையே எம்மிடமாக உள்ளது; அது விதியிடம் உள்ளது; விதியை இறைவன்தான் மாற்றுவார்.

எனவே, கைவீசி கோயிலுக்கு போய் கும்பிட்டு வரவேண்டியதுதான் என்று பாடலாசிரியர் கூறுவது போலக் குழந்தைகள் போல் பெரியவர்கள் வாழ்ந்தால் எல்லாம் நலமாய் இருக்கும் அல்லவா. பாருங்கள், இந்தப் பாடலாசிரியர்தான் எவ்வளவு பொதுநலத்தோடு இந்தப் பாடலைப் பாடி இருக்கிறார். தமிழ் மக்களின் பண்பாடு, அன்புதான் என்னே அற்புதம்!

RangaRakes tamilnavarasam.com

அத்தியாயம் – 14

# தூக்கி விளையாடுகையில்

இப்பாடல்கள் எல்லாம் வணங்கி வரவேற்கும் நாட்டுப்புறப் பாடல்கள். ஆனால் இவை நாட்டுப்புறப் பாடல் என்று சொல்வதிலும் பார்க்க குழந்தைகள் பாடல் என்று அழைக்கலாம். அதைவிடக் குழந்தை அமுது என்று அழைப்பது சிறந்ததாய் இருக்கும். நம் முன்னோரின் சிந்தனைச் செயல்தான் என்னே.

இப்பாட்டினை கற்பனை ரீதியாய் அணுகிப் பார்த்து அதனைச் சுவைத்து இன்புறுவோமே! வாருங்கள், குழந்தையைப் பார்ப்போம். குழந்தை மெல்லென நடை பயின்றது. நன்கு நடந்து தெருவுக்கு கடைக்கு எல்லாம் தக்க துணையோடு போகக் கற்றுக் கொள்கிறது. ஓடி விளையாடத் தொடங்குகிறது. ஒரு குழந்தையின் தந்தை கீரைத் தோட்டத்திற்கும் வாழைத் தோட்டத்திற்கும் தண்ணீர் இறைத்து வருகிறார். அவர் ஓர் விவசாயி. தோட்டம் செய்து அதில் விளைவனவற்றை விற்றே அவர்கள் ஜீவியம் நடக்கிறது.





தந்தை தோட்டத்திற்கு நீர் இறைத்து வீடு திரும்பும் பொழுது தனது இரண்டு வயதுக் குழந்தை முற்றத்தில் கோழியை துரத்திப் பிடிக்க ஓடுவதைக் காண்கிறார். தந்தையின் உடல் களைப்பு மனக் களைப்பு எல்லாம் அக்காட்சியை கண்டவுடன் நீங்கிப் போகிறது. தானும் குழந்தை பின்னே ஓர் குழந்தையைப் போல் ஓடுகிறார். கையில் குழந்தையை ஏந்தி எடுத்துக் கொள்ளுகிறார். குழந்தையைப் படுக்க வைப்பது போல் இரு கைகளிலும் சாய்த்து வைத்துக் கொள்கிறார். தந்தையின் வாயில் இருந்து பாடல் வெளிவருகிறது.

கீரைக்கு தண்ணீர் இறைப்போம் இறைப்போம்
கீரைக்கறியும் தின்போம் தின்போம்
வாழைக்கு தண்ணீர் இறைப்போம் இறைப்போம்
வாழைப்பழமும் தின்போம் தின்போம்

இந்தப் பாட்டைப் பாடி பாடிக் குழந்தையை மேலும் கீழுமாய்த் தாலாட்டுவது போல் ஆட்டுகிறார். குழந்தை வாய்விட்டு கெக்காளம் கொட்டி சிரிக்கிறது. தந்தை தன்னை ஊஞ்சலில் வைத்து ஆட்டுவது போல் ஆட்டுகிறாரே என்றும் குழந்தை மகிழ்கிறது.

RangaRakes tamilnavarasam.com

தந்தையோ அப்பதான் பாத்தி கட்டி கீரைக்கும், வாழைக்கும் நிறைய தண்ணீர்விட்ட மகிழ்ச்சி. கீரைத்தோட்டமும் வாழைத் தோட்டமும் எத்தனை செழுமையாய் வளர்ந்து இருக்கு. அந்த மகிழ்ச்சியில் கீரை கறி வாழைப்பழம் எல்லாம் தன் குழந்தை சாப்பிடட்டும் என்று நினைக்கிறார். அவர் ஓர் விவசாயியாய் இருப்பினும். எது சத்தானது, குழந்தைகளுக்கு வேண்டிய உணவு என்ன என்பதெல்லாம் அநுபவத்தில் அவருக்குத் தெரிந்து இருந்தது. எனவே பாட்டுப் பாடியே அந்த சாப்பாட்டினை சாப்பிடச் சொல்கிறார்.

உண்மையிலேயே இந்தக் கீரை, பழத்தில் இருக்கும் சத்து விவசாயிக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால் பாடலாசிரியருக்கு நன்கு தெரிந்து இருக்கவேண்டும். அதுதான் பாடலாசிரியர் அந்த நாட்டுப் பாட்டைப் பாடினார்.

நாம் அந்தப் பாடலைக் கற்பனைப் பாத்திரத்தோடு கலந்து உறவாட விட்டோம். கீரையில் உண்மையிலேயே இரும்புச் சத்தும் விற்றமின் K உண்டு. வாழைப்பழத்தில் விற்றமின் C உண்டு. இந்த இரும்புச் சத்து இரத்த சிவப்பு அணுக்களைப் பாதுகாக்கின்றன. விற்றமின் K கலன்களை பாதுகாக்கின்றன. இரும்புச் சத்து உடம்புக்கு மிகத் தேவையானது. பாடலாசிரியர் அதைத் தெரிந்து கீரையும் வாழைப் பழத்தையும் உண்ணச் சொல்லிப் பாட்டின் மூலம் சொல்லிக் கொடுக்கிறார். பழங்காலப் பாடல் பிள்ளைகளின் நலனின் மேல் எவ்வளவு கவனம் என்பதைக் காட்டி நிற்கிறது. மூன்று மாத பருவத்தில் இருந்தே தேக அப்பியாசங்களைப் பாட்டின் மூலம் சொல்லிக்கொடுத்து, நம் நாட்டுக் குழந்தைகளுக்கு ஏற்ற விளையாட்டுகள் உணவு என்பனவற்றை நாட்டுப் பாடலாகவே பாடி, சொல்லிக்கொடுத்து பாட்டின் மூலம் தூங்கவைக்கும் தமிழர் பழம் பெருமைதான் என்னே!



RangaRakes tamilnavarasam.com

**அத்தியாயம் – 15**

## ஊஞ்சலில் வைத்து ஆடுதல்

குழந்தைக்கு இப்போ தொட்டிலில் போட்டு ஆட்டும் பருவம் போய் ஊஞ்சல் கட்டி ஆடும் பருவம் வந்து விடுகிறது. குழந்தைக்கு என்று அங்குள்ள தச்சர்களிடம் சொல்லி ஊஞ்சலை செய்விப்பார்கள். ஊஞ்சல் செய்வதற்காக நாலு பக்க சட்டத்தையும் குழாய்களையும் அழகுற அமைத்துக் கொடுப்பார். அந்த ஊஞ்சலில் பலமுள்ள மெல்லிய கயிற்றை குழாய்க்குள்ளும் துவாரம் துளைத்த சட்டங்களுக்குள்ளும் போட்டு இறுக்க கட்டி வீட்டின் வெளித் தாழ்வாரத்தில் கட்டி விடுவார்கள். காலை மாலை நேரங்களில் அந்த ஊஞ்சலை குழந்தைக்கு ஏற்றவாறு தயார்படுத்தி குழந்தையை அந்த ஊஞ்சலில் இருத்தி விடுவார்கள். குழந்தையும் சிறுகுழாய்களைப் பத்திரமாய் பிடித்துக் கொள்ளும். சிறுவரும் பெண்களும் ஊஞ்சலை ஆட்டிப் பாடுவார்கள்.



ஊஞ்சலிலே புலி வந்திருக்கு
ஊராரை பேராரை கூப்பிடுங்கோ
பெற்ற தகப்பனை கூப்பிடுங்கோ
பெயரிட்ட மாமனை கூப்பிடுங்கோ

என்று பாட்டைப் பாடி ஆட்டுவார்கள். அந்தக் காலத்தில் புலி என்றால் வீரச் செயல்களைப் புரிபவன் என்றே எடுத்துக் கொள்வார்கள். நாம் கணக்கில் கெட்டிகாரராய் விடைகளை எழுதினால் எம்மை கணக்கில் புலி என்று ஆசிரியர்கள் சொல்லி கௌரவிப்பார்கள். இப்பாடல் சோழர் காலப் பாட்டாய் இருப்பதாய் நாம் கொள்ளல் வேண்டும். அநேக பாடல்கள் சோழர் காலப் பாடலாய் இருப்பதாக நாம் எண்ணியபடியால் இப்பாடலும் சோழர் காலப் பாட்டாய் இருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

இப் பாட்டைப் பாடி ஊஞ்சலை ஆட்டுகையில் குழந்தைக்கு தன்னம்பிக்கையும் துணிச்சலும் வளர்கிறது. குழந்தையின் பயத் தன்மை கழண்டு போகிறது. பாட்டைப் பாடுங்கள் ஊராரை பேரரை கூப்பிடுங்கோ என்று பாடலாசிரியர் கூறுகிறார். குழந்தை ஊஞ்சலாடுவதை இந்த வீரச் செயல் செய்வதைப் பார்க்க வீட்டில் இருக்கும் தந்தையின் தந்தையே வாருங்கள், வந்து பாருங்கள். அடுத்த வரி என்ன கூறுகிறது பாருங்கள். பெற்ற தகப்பனை கூப்பிடுங்கோ பெயரிட்ட மாமனை கூப்பிடுங்கோ என்கிறார். குழந்தை ஊஞ்சல் ஆடும் வீரச்

RangaRakes tamilnavarasam.com

செயலினைப் பார்க்க பேரரை தந்தையையும் பெயர் வைத்த மாமனையும் கூப்பிடச் சொல்கிறார். இப் பாடலில் இருந்து நமக்கு விளங்குவது என்ன? ஒரு குழந்தை பிறந்துவிட்டால் அக் குழந்தையின் தாய் மாமன் தான் பெயர் வைப்பார். இது அவரின் கடமை. தமிழ் மக்கள் கடமையுணர்வு மிக்கவர்கள். தம் தம் கடமை என்ன என்பதை அறிந்து வைத்திருந்தனர். புறநானூற்றில் ஒரு பாடல் கடமையை விளங்கப்படுத்துகிறது. ஈன்று புறத்தருதல் என் தலைக் கடனே. சான்றோன் ஆக்கல் தந்தைக் கடனே வேல் வடித்துக் கொடுத்தல் வேந்தர் கடனே, என்று வகை வகையாய் கடமைகளை எடுத்துச் சொல்கிறார் தமிழ்ப்புலவர். அது போல் பெயர் வைத்தல் மாமன் கடமை என்பது இப்பாடல் மூலம் நமக்கு விளங்குகிறது.

குழந்தையை ஊஞ்சலில் ஆட்டித் தாய் பேத்திமார், உறவினர்கள் எல்லோரும் பார்த்து ரசித்து மகிழ்வர். அவர்களோடு இருக்கும் குழந்தைகள் பல விளையாட்டுக்களை விளையாடுவார்கள். ஆண்கள் அந்த நேரம் வேலை நிமித்தம் வெளியே போயிருப்பார்கள். பெண்களும் குழந்தைகளும் பாட்டுகள் பாடி விளையாட்டுக்களை விளையாடி பொழுதினைப் போக்குவார்கள்.



**அத்தியாயம் – 16**

## சாமி விளையாடல்

அந்தக் காலத்தில் தற்போதைய போல் பட அரங்கங்களோ பொருட்காட்சி சாலைகளோ, உணவகங்களோ இருக்கவில்லை. ஏன் வீட்டில் இருந்து கூட சிறுவ சிறுமியர், பெரியவர்கள், பொழுதை கழிப்பதற்குக் கூட வானொலிப் பெட்டியோ தொலைக்காட்சிப் பெட்டியோ கணினியோ இருக்கவில்லை.

கோவில்களில் திருவிழாக்கள் நடக்கும். மக்கள் சென்று திருவிழாக்களைப் பார்த்து மகிழ்வதோடு இறையையும் தரிசிப்பர். மக்களுக்கு நற்சிந்தனைகளை ஊட்டுவதற்கும் பக்தியை பெருக்குவதற்கும் பெரிய ஆசாரியர், துறவிகள், பண்டிதர்கள் கோவிலில் அவ்வக் காலங்களில் பிரசன்னமாகி உபன்னியாசங்களை சொற்பொழிவினை, கதாகாலட்ஷேபத்தினை செய்தனர். இதனால் மக்கள் மனதில் கடமையுணர்வு, அருள் உணர்வு, பக்தியுணர்வு மேலோங்கி நல்நெறி நின்று தம் வாழ்க்கையை நடத்திச் சென்றனர். காலம் செல்ல,

RangaRakes

tamilnavarasam.com

பிள்ளைகளை மகிழ்விக்க திருவிழாக் காலங்களில் கோயில் அருகில் பல களியாட்டு அரங்குகளையும் வைத்து, வித விதமான கடைகளையும் வைத்து, மக்களை ஈர்த்து மக்கள் அதனைக் கண்டு களித்து தமக்குத் தேவையானதை வாங்கி நமது ஓய்வு நேரத்தின் பெரும்பகுதியை கோவிலில் கழித்தனர்.

இத்திருவிழாக் காட்சிகளைக் கண்ட சிறுவர்கள் வீட்டில் குழந்தைகளோடு அத்திருவிழாக் காட்சிகளை அரங்கேற்றிக் குழந்தைகளையும் மகிழ்வித்தனர். தாய்மாரும் தம் செல்லக் குழந்தைகளின் மகிழ்ச்சிக்காக அத்திருவிழாக் காட்சி சுவாமி ஊர்வலம் முதலியவற்றில் பங்கு பற்றினார்கள். சுவாமி எப்படி ஊர்வலம் வருவார் என்பதைக் காட்டிக் கொடுப்பது போல

டுண்டா டுண்டா சாமி வாறர்
காக்கு காக்கா தேரில் வாறர்
பீப்பி பீப்பி தெருவில் வாறர்

எனக்கூறி நாதஸ்வரம் வாசிப்பது போலவும் மேளம் கொட்டுவது போல் அபிநயத்து காவடிகள் கொண்டு செல்வது போலவும் காண்பித்து சிறு சாமி பொம்மைகளை எடுத்து வீட்டைச் சுற்றிச் சுற்றிக் கொண்டுவருவர். குழந்தைகட்கு ஒரே கும்மாளம் தான். தாய்மார் சிறிது அவல், கடலை முதலியவற்றை செய்து குழந்தைகட்கு பிரசாதம் கொடுப்பது போல தட்டில் கொடுத்து வருவார். குழந்தைகளும் அதை கோவில்



பிரசாதமென கருதுவது போல் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து உண்டு மகிழ்வர்.

இப்படி வீடுகளில் சிறுவர் சிறுமியர் குழந்தைகளோடு திருவிழாக்களைச் செய்வதால் அவர்கள் சிறுவயதிலேயே கூட்டமாய் ஒற்றுமையோடு விழாக்களைச் செய்யக்கூடிய தகமையைப் பெற்றனர். எச்சபைகளையும் சிறுவயதில் ஏற்று நடத்தக்கூடிய திறமை அவர்களிடம் அமைந்தது. அதோடு தாய்மார் செய்து கொடுக்கும் பிரசாதங்களை எல்லோருக்கும் சாமி பிரசாதம் எனக்கூறிப் பகிர்ந்து கொடுத்து உண்பதால், சுயநல எண்ணம் குறைந்து தனக்கு என்ற எண்ணம் சிறுவயதிலே கிள்ளி எறியப்பட்டுப் பிறருக்கு கொடுத்தல் என்னும் பெருமைக்குரிய அரிய குணம் சிறுவர்களை வந்து அடைய ஏதுவானது. எல்லாவற்றுக்கும் மேலாக அக்குழந்தைகள் திருவிழாக்கள் என்று எண்ணி அந்த விளையாட்டை விளையாடுவதால், அவர்கள் அறியாமலே அவர்கள் மனதில் தூய்மை நுழைய ஏதுவாயிற்று. பதின்மூன்று வயதில் காமன் மனதில் நுழையும் முன் காயத்திரி மந்திரம் மனதில் இடம்பிடித்ததால், மக்கள் மனதால் மேமை அடைந்த நிலையில் வாழ்ந்து வந்தனர்.

தொலைக்காட்சி பெட்டியிலும் வானொலிப் பெட்டியிலும் இன்று நாம் கேட்கும் இசை பாடல்கள் சில நம்மை எவ்வளவு தூரம் அலைக்கழிக்கிறது என்பது

RangaRakes
tamilnavarasam.com

நம் ஒவ்வொருவருக்கும் புரியும். நாமே இந்த நிலைக்கு ஆளாகினால் பொருள் விளங்கா குழந்தைகள் நிலை என்னவென்று உங்களுக்கே புரியும். குழந்தைகள் வளர்ப்பில் சிறிது கவனம் எடுத்தல் பெரியோராகிய நம் கடமை அல்லவா. அவர்கள் யார்? நம் செல்வங்கள்; நாளை நம்மை சமுதாயத்திற்குக் காட்டுபவர்கள். நாம் மறைந்து விடலாம். ஆனால் நம் பழக்க வழக்கம் மறையாது. நம் குழந்தைகளிடம் தங்கி நின்று நம்மைக் காட்டிக் கொடுக்கும். ஆகவே அவர்கள் நல்ல பெயரைப் பெற்றிட நாம் நம் பெயரை நிலைநாட்டிட நல்வழியில் வளர்ப்போமாக.



அத்தியாயம் – 17

# நிலா பார்க்கையில்

தற்போதைய காலத்தில் தாய் தந்தையர் இருவரும் குடும்பம் நடத்த சம்பாதிக்க வேண்டும் என்ற நிலையில் உழைக்கப் போய் விடுவார்கள். குழந்தைகள் தனித்து வேலையாட்கள் பராமரிப்பில் வளருகின்றன. வேலைக்கு வந்தவர்கள் குழந்தையிடம் ஒரு கண் வைத்தபடி தன் வேலைக் கடமைகளைச் செய்கின்றனர்.

குழந்தைக்கு விளையாட்டுகளை சொல்லிக் கொடுக்க அவர்களுக்கு நேரமே இல்லை. நமக்குத்தான் நேரமுண்டா? இதனால் தற்காலக் குழந்தைகள் தனித்து விடப்பட்டு தொலைக்காட்சியைப் பார்க்கிறார்கள். ஆனால் பழைய காலக் குழந்தைகள் போன்று சுறுசுறுப்பாய் ஓடுவது, குழந்தைகளோடு திறந்த வெளியரங்கில் விளையாடுவது எல்லாம் குறைவுதான். பாடசாலைத்தினம், தேசியதினம் இவைபோன்ற நாட்களில் மாத்திரமே இக்காலப் பிள்ளைகள் ஓட்டப்போட்டி, உயரப் பாய்தல், நீளப்பாய்தல்,

RangaRakes tamilnavarasam.com





கிரிக்கெட், கால் பந்து விளையாட்டு, நீச்சல் போட்டி முதலிய போட்டிகளில் பங்கு பெறுகின்றனர். அக்காலத்தில் குழந்தைகள் வீட்டில் விளையாட்டை தேகப் பயிற்சியாய் மனப் பயிற்சியாய் செய்து பயன்பெற்றனர்.

பத்து பதினொரு மாதமளவில் குழந்தைகள் வெளிப்புறக் காட்சிகளைக் கண்டு களிக்கத் தொடங்குகின்றன. மரங்கள், பூக்கள், தெருவில் போகும் வாகனங்கள், மிருகங்கள், வானத்தில் இரவில் வரும் சந்திரன், நட்சத்திரம் எல்லாவற்றையுமே பார்த்து மகிழ்கின்றன. அப்போ மின்சாரம் இல்லாத காலம். எனவே பௌர்ணமி சந்திரனை கண்டுவிட்டால் குழந்தைக்கு நல்ல மகிழ்ச்சி. பெற்றோரும் குழந்தைக்கு முழு நிலவைக் காட்டி மகிழ்ச்சி ஊட்டினார். குழந்தைகளும் தம் சிறிய கைகளினால் நிலவை வா வா என்று அழைத்தனர். இந்நிலையில் ஒருவர் வாயில் இருந்து ஒரு நிலாப் பாட்டு உதிர்கிறது.

என்னவென்று நாமும் பார்ப்போமே!

நிலா நிலா வா வா
நில்லாமல் ஓடி வா
மலைமேல் ஏறி வா
மல்லிகைப் பூ கொண்டு வா

RangaRakes tamilnavarasam.com

பாருங்கள்! எளிமையான பாட்டு தான். ஆனால் ஆழமான கருத்தைக் கொண்டதாய் இப்பாட்டு இருக்கிறது.

நிலவே வா வா எங்கும் நில்லாமல் வந்துவிடு நீ உயரத்தில் இருப்பதால் மலை கடந்து வரவேண்டும். ஆகையால் மலை மேல் ஏறி வந்து விடு. அப்படி மலையின் மேல் ஏறி வருகையில் மல்லிகைப் பூவும் கொண்டு வா என்கிறார். மல்லிகைப் பூ பார்வைக்கு தெரியாவிடினும் அதன் வாசனை மல்லிகைப்பூ அருகில் உள்ளது என்பதைக் காட்டிக் கொடுத்துவிடும். அந்த வாசனையை காற்றுதான் சுமந்து வரும். எனவேதான் பாடுபவர் மலைக்கு மேலாய் உயரத்தில் வரும்பொழுது இனிய மல்லிகை வாசனையை தென்றலோடு சுமந்து வந்து எங்களுக்குத் தந்துவிடு என்கிறார். எனவே குழந்தையோடு நின்று பாடும் இடம் மலையொட்டிய பிரதேசமாயும் மலர்கள் செறிந்த இடமாயும் இருத்தல் வேண்டும்.

எந்த ஒரு அழகான இடத்தில் நின்று மிக எளிய வார்த்தைகளால் எவ்வளவு நயம்பட இந்த நாலுவரிப் பாடலைப் பாடுகிறார். இதுதான் அன்றைய மக்கள் வாழ்ந்த எளிய அழகான வாழ்க்கை. தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதைக் காட்டவே குழந்தைக்கு விளக்கி குழந்தை மூலம் எம்மையும் இன்பத்தில் ஆழ்த்துகிறார் பாடலாசிரியர். கையில் குழந்தை. அதுவோர் ஸ்பரிச சுகம்.



அதன் மழலை, அது இனிய கானம் போன்று தான் பாடும் பாடலின் சுவையோடு கலந்த ராகத்தை கேட்கும் இனிமை. தான் பாடும் பாடலால் ஏற்படும் சுவை பாலை தேனை விட மிஞ்சிய சுவை குழந்தையும் பௌர்ணமி நிலவும் கண்ணுக்கு விருந்தளிக்கும் காட்சி. அதோடு மல்லிகை மணம் மூக்கினுக்கு இனிய முகர்வு. பஞ்சப் புலன்களுக்கே சுவையாக்கி சந்திரன் பவனி வரும் காட்சியை குழந்தைக்கு காட்டி மகிழ்ந்தனர் தமிழர். இது ஓர் மன வளர்ச்சியினைக் கூட்டும் அரிய காட்சி என்று அவர்களுக்குத் தெரியும்.

குழந்தைக்கு இப்பாட்டினை பாடிக் காட்டுகையில் மல்லிகைப் பூவை கொண்டு வந்து இந்த நிலா நமக்கு தரும் என்று நம்பிக்கை பிறக்கும். உயரிய பொருள்கள் எல்லாம் எம்மால் கைப்பற்ற முடியும் என்னும் சுயநம்பிக்கை உணர்வு துளிர்விடும். உலகம் இனிமையானது. அதில் இருக்கும் பொருள்கள் இனிமையானது. நானும் இனிமையானவன் என்று முடிவுக்கு குழந்தை வருகிறது. அதன்படி தன்னை அமைத்தும் கொள்கிறது. நாலுவரிப் பாட்டு எப்படி குழந்தைகள் வாழ்வில் பங்கினை வகிக்கிறது.

ஒரு பாடலாசிரியர் நிலவைப் பாடி கற்பனை சக்தியை குழந்தைக்கு ஊட்டி மனதை மகிழ்ச்சி கொள்ளச் செய்ய இன்னொரு ஆசிரியர் நிலவினைக் காட்டிக் குழந்தையின் சிந்தனா சக்தியைப் பெருக்கி அறிவை மிளிர வைப்பதைப் பாருங்கள். பாட்டைக் கவனியுங்கள்.

RangaRakes tamilnavarasam.com

அம்புலி மாமா
அழகழ சொக்கா
எங்க போறாய்
காட்டை போறேன்
காட்டை ஏன்
கம்பு வெட்ட
கம்பு ஏன்
மாடு சாய்க்க
மாடு ஏன்
சாணி போட
சாணி ஏன்
வீடு மெழுக
வீடு ஏன்
பிள்ளைப் பெற
பிள்ளை ஏன்
எண்ணெய் குடத்துள் போட்டு
துள்ளித் துள்ளி விளையாட

என்கிறார் இந்தப் பாடலாசிரியர். இந்தப் பாடலை சிந்தனையைத் தூண்டுவதற்கு என்ன விதமாய் பாடியிருக்கிறார் என்பதைப் பாருங்கள். மாமா எங்கே போகிறாய் என்று கேள்வியுடன் பாடல் ஆரம்பிக்கப்படுகிறது. கேள்வி கேட்டுப் பதில் எடுப்பதில்தான் உலகம் தங்கி இருக்கிறது. இப்பாடல் எப்போ யாரால் பாடப்பெற்றது என்பது எமக்குத்



தெரியாது. பாடலில் இருக்கும் சொற்களில் இருந்து பாட்டினைக் கவனித்தால் இது பழந்தமிழ் மக்களின் பாடல் என்று கூறலாம். நமது மூதாதையரினால் பாடப்பெற்று வழிவழியாய் வந்து இன்று எம் குழந்தைகட்கு நாம் பாடும் நிலைக்கு வந்துள்ளோம். பாட்டின் கருத்தாழம் மிக விசாலமானது. பாடல் சிறு குழந்தைகட்கு ஏற்றவாறு அமையப்பட்டு உள்ளது.

கிரேக்கப் பேராசிரியர் சிந்தனையாளர் மாபெரும் அறிவாளி தத்துவஞானி சோக்கரடிஸ் என்ன கூறுகிறார் தெரியுமா? “எதையும் சும்மா கேட்டுவிட்டு, விட்டு விடாதீர்கள்! ஏன் வந்தது, எதற்கு வந்தது என்று கேள்விகளைக் கேட்டு விடைகளை எடுங்கள்! அப்பொழுதுதான் உங்கள் அறிவு துலங்கி நீங்கள் சரியான பாதையில் நடக்கத் தொடங்குவீர்கள்!” என்று கூறுகிறார்.

“எப்பொருள் யார்யார் வாய்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு”

என்பதற்கு இணங்கவே, இப்பாடகர் குழந்தையிடம் கேட்கும் பழக்கத்தினை ஏற்படுத்தப் பார்க்கிறார். சிந்தனை வாழ்க்கையின் உயர்ந்த குறிக்கோளை எட்டிப் பிடித்து வாழப் பண்ணிவிடும். வினாக்களைத் தொடுத்து விடையை எடுப்பது வாழ்க்கையில் மிக அத்தியாவசியமானதொன்று. எனவேதான் பாடுபவர்

RangaRakes tamilnavarasam.com

அம்புலிமாமா என்று அந்தச் சந்திரனுக்குப் பெயரும் சூட்டி நீ எங்கே போகிறாய் என்று கேட்கிறார். வானத்தை நிமிர்ந்து குழந்தை பார்த்தால் முகில்கள், மேகங்கள் செல்கையில் சந்திரன் செல்வது போல் தெரிவதால்தான் ஆசிரியர் அம்புலிமாமா எங்கே போகிறாய் எனக் கேட்கிறார். அதை குழந்தை கேட்பது போலவும் அம்புலி மாமா விடை அளிப்பது போலவுமே பாடலை அமைத்திருக்கிறார். குழந்தை அம்புலி மாமாவிடம் கேட்க அம்புலி மாமா சொல்கிறது. காட்டை போகிறேன் என்று. அதற்கு குழந்தை கேட்கிறது காட்டை ஏன் என்று.

இந்த காடானது ஊர் முடிவில் இருக்கும். பழைய காலத்தில் ஒரு கிராமம் முடிவடைய காடுவரும். பின் அடுத்த கிராமம் ஆரம்பமாகி கடைகள் வீடுகள் எல்லாம் வரும். ஊர்மனை எல்லையில் திரும்பிக் காடுவரும். மக்களின் ஊர்மனைகள் அடுத்து வரும் காடுகளில் மக்கள் தமக்கு தேவையான கம்பு தடிகளைப் பெற்றுக் கொண்டனர். ஊர்மனையில் உள்ள மரங்களில் கம்பு வெட்ட மாட்டார். அவை பிரயோசனமான மரங்களாம். கனி தரும் மரமாய் இருக்கும். காடுகளில் உள்ள மரத்தில் தான் கம்பு வெட்டி வீடு கட்ட வேலி போட மற்றும் இதர தேவைகட்கும் எடுத்து பாவிப்பர். அதேபோல் தான் அம்புலி மாமாவும் கம்பு வெட்ட காட்டுக்கு போகிறேன் என்று சொல்கிறது. குழந்தை கேட்கிறது. கம்பு ஏன் என்று. அம்புலி மாமா சொல்கிறது மாடு சாய்க்க...



மிகப் பழமையான காலத்தில் மாடுகள் மேய்வதற்காக சிறந்த புல்வெளிகளைத் தேடி செல்வோரை இடையர் என்றும், மாட்டை கூட்டிச் செல்கையில் சாய்த்து செல்லுதல் என்றே கூறுவர். என்ன மாதிரி குழந்தைக்கு பேசும் பண்பினை அதற்கேற்ற சொற்களால் சொல்லிக் கொடுக்கிறார்கள். குழந்தை யோசிக்குதாம் என்னத்திற்காக மாட்டை சாய்க்க வேண்டும் என்று அதைக் குழந்தை அம்புலி மாமாவிடம் கேட்குதாம். மாடு ஏன் என்று உடனே அம்புலி மாமா சொல்லி இருக்கலாம். பால் எடுக்க அல்லது பால் குடிக்க கொடுக்க என்று ஆனால் அம்புலி மாமா அப்படி சொல்லவில்லை. குழந்தையை வேறு விதமாய் சிந்திக்க வைக்க எண்ணி சாணி போட என்று கூறுகிறார். இந்த சாணிதான் என்னத்திற்கு என்று குழந்தை நினைத்துக் கேட்பது போல் பாடலாசிரியர் குழந்தைக்காக கேட்கிறார். பின் அம்புலிமாமாவுக்காக பதில் என்ன கொடுக்கிறார் பாருங்கள். வீடு மெழுக என்கிறார், சாணியை ஒரு பொருட்டாய் தற்போதைய மக்கள் மதிப்பில்லை.

ஆதிகாலம் என்பது பழைய காலம். அந்நாட்களில் வீடுகள் மண் சுவரால் கட்டப்பட்டு ஓலைகளால் வேயப்பட்டு இருந்தன. நிலத்தையும் களிமண் கொண்டு செய்து இருந்தார்கள். அந்த நிலத்திற்கு சாணியைப் போட்டு மெழுகினால் மிக வழுவழுப்பாய் இருக்கும். அதோடு சாணி சிறந்ததொரு கிருமி நாசினியாய்

RangaRakes tamilnavarasam.com

இருப்பதினால் கிருமிகளோ பூச்சிகளோ நிலத்தில் வராது. இதனால் நல்லவிதமான வீடாய் அது அமைந்து இருந்தது. தற்கால சீமெந்துக்கு (சிமெண்ட்) நிகராய் அக்கால மெழுகிய வீடு இருந்தது என்று கூறினால் மிகையாகாது. எனவேதான் அம்புலி மாமா வீடு மெழுக சாணி வேண்டும் என்று கூறிற்று. எனவே குழந்தை கூறுவது போல கேட்கிறார் ஆசிரியர் வீடு ஏன் என்று.

உடனே அம்புலி மாமா சொல்கிறது பிள்ளைப்பெற என்று. மாரிகாலம் வந்துவிட்டால் மண்ணால் கட்டப்பட்ட வீடுகள் பல தூவானம் பட்டோ வெள்ளப் பெருக்காலோ கரைந்துவிடும். ஓலை பழையதாய் போனால் ஒழுகினால் கூட கரைந்து விடும். அதனால் மாரி காலத்திற்கு முன் அந்த வீட்டில் உள்ள பெண்கள் யாராவது கர்ப்பிணியாய் இருந்தால் தங்கள் தங்கள் வீட்டைப் புதுப்பித்துக் கொள்வார்கள். சாணி போட்டு மெழுகி பளிச் என்று வைத்துக் கொள்வார்கள். இதனால் பூச்சி பூரான் வீட்டில் வராது. வீடு சுத்தமாய் இருக்கும்.

இப்படி சுத்தமான வீட்டில்தான் நீயும் பிறந்தாய் என்று அம்புலிமாமா கூறுவது போல பிள்ளைப்பெற என்று கூறிவிட்டது. அதற்கு குழந்தை கேட்கிறது. பிள்ளை ஏன் என்று. அம்புலி மாமாவால் இதற்கு என்ன பதில் சொல்ல முடியும். பிள்ளை என்னத்திற்கு என்று சொல்லத்தான் முடியுமா?



உடனே கேள்வியை நகைச்சுவையான பதிலால் நிரப்பி விடுகிறது. என்ன சொல்கிறது பாருங்கள். எண்ணெய் குடத்துக்குள் போட்டு துள்ளி துள்ளி விளையாட என்கிறது. நீயும் குழந்தை. உன்னையும் எண்ணெய் குடத்துள் போட்டு விளையாடுவோம் என்பது போல் நகைச்சுவையாய் பதிலை கொடுத்துவிடுகிறது. பாடலாசிரியர் விபரமாய் ஏன் ஏன் என்னும் கேள்விகளுக்கு பதிலைக் கூறி கடைசியில் எல்லாவற்றையும் நகைச்சுவையாக்கி விடுகிறார். வாழ்க்கையே அப்படித்தானே! எவ்வளவு இன்ப துன்பங்களுக்கு இடையே பலத்த சிந்தனையோடு நடைபெறும் வாழ்க்கை எல்லாமே கனவாய் கதையாய் சிரிப்புக்கிடமாய் போய்விடும் தானே! இதுதான் வாழ்க்கை.

RangaRakes tamilnavarasam.com

அத்தியாயம் – 18

## தெருக்காட்சி பார்க்கையில்

இந்நிலையில் குழந்தை தாய் தந்தை உறவுகள் அன்போடு பாடும் பாடலுடன் வளர்ந்து வருகிறது. தவழும் பருவம் போய் துள்ளி விளையாடும் பருவம் வருகிறது. சாப்பாடு நித்திரை இவற்றை எல்லாம் மறந்து தமது வயதினை ஒத்தவர் மூத்தோர் இளையோர் என்ற பாகுபாடு இன்றி இரவு பகல் எந்நேரமும் குழந்தைகள் விளையாடுகின்றன. இப்பருவம் கண்ணால் பார்ப்பதை எல்லாம் உன்னிப்பாய் கவனித்து மனதில் வைக்கும் பருவம். யார் எதைச் சொல்லினும் எதைச் செய்யினும் தாங்களும் அதைப்போல் செய்ய, சொல்ல முற்படுவர்.

தாய் தந்தையரோடு கோவில், கடைகள் என்று பல இடங்களும் போய் வருவார்கள். இந்நேரம் காணும் காட்சிகளை எல்லாம் மனதில் வாங்கித் தாய் தந்தையரிடம் கேள்வியாய்த் தொடுத்துப் பதிலை எதிர்பார்த்து நிற்கும் நேரம். அவர்களை அலட்சியப்படுத்தாமல் தகுந்தபடி கேட்கும் வினாக்களுக்கு



நல்ல விடைகளைத் தாய் தந்தையர் சொல்லிக் கொடுப்பார்கள். கொடுக்க வேணும். பழைய காலத் தாயாரிடம் ஒரு சிறுவன் ஒரு காட்சியைக் கண்டு கேட்கிறான். தாயோடு ஒரு குழந்தை தெருவில் போகிறது. தெருவீதியில் நாய்கள் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டு இருப்பது நம் எல்லோருக்கும் தெரிந்தது தானே. குழந்தையும் நாயைக் கண்டு விடுகிறது. நாயைச் சும்மா காணவில்லை. இரண்டு நாய்கள் வீதியில் சண்டை பிடித்துக் கொண்டு இருப்பதைக் காண்கிறது. உடனே, அந்தக் குழந்தை தாயின் கைகளைப் பிடித்தபடி வீதியில் போனவன் நின்று அக்காட்சியைப் பார்க்கிறான். பின் தாயிடம் அம்மா நாய் என நாயை காட்டுகிறான். தாய் மிக புத்திசாலி. இதுதான் சமயம் என்று அழகாய் அவன் மனதில் படும்படி பாடுகிறாள். வீடு வர அவள் பாட்டும் மிக அழகாய் வருகிறது. பாருங்கள் பாட்டை!

நாய்க்கும் நாய்க்கும்
சண்டை எடா
சின்ன மாமா நான்
நாவல் மரத்தில்
ஏறிக் கொண்டேன்
சின்ன மாமா

என தாயார் படிக்க குழந்தைக்கு தாயார் நாவல் பழம் எடுத்துக் கொடுக்கையில், நாவல்பழம் நாவல்மரம் என்று சொல்லிக் கொடுத்த ஞாபகம் வர; தாயின் கையில் இருந்து

RangaRakes tamilnavarasam.com

தன்னை விடுவித்து ஓடிச்சென்று முற்றத்தின் பக்கம் இருந்த நாவல் மரத்தை குழந்தை சுட்டிக் காட்டுகிறது. பாருங்கள்! தாயார் என்ன மாதிரி பாடத்தை படிப்பிக்கிறாள். நேர், விளக்கங்களோடு குழந்தைக்கு எழுத்து இலக்கணத்தை எவ்வளவு அருமையாய் படிப்பிக்கிறாள். அது நாய் இது நாவல் மரம். இரண்டும் நாவில் வரும் சொற்கள் எனச் சொல்லாமல் சொல்லி விளங்கப்படுத்தி விடுகிறாள்.

பழைய காலப் படிப்பு திண்ணைப் பள்ளிக்கூடத்தை விட மேன்மை. பொருட்களை படத்தில்தான் இப்போ பிள்ளைகள் பார்த்துப் படிப்பார்கள். அப்போ அதனை நேரில் பார்த்துப் படிப்பார்கள். இந்த தாயார் எப்படி தன் மகனுக்கு இலக்கணம் படிப்பிக்கிறாள் பாருங்கள். நாய்க்கும் நாய்க்கும் சண்டை எடா சின்ன மாமா நாவல் மரத்திலே ஏறிக் கொண்டேன் சின்ன மாமா” என்று குழந்தை பாடி தாய் முகத்தைப் பார்க்கிறது. தாயார் அடுத்த இரு வரிகளைச் சொல்லிக் கொடுக்கிறாள்.

புலிக்கும் புலிக்கும்
சண்டை எடா
சின்ன மாமா நான்
புளிய மரத்தில்
ஏறிக் கொண்டேன்
சின்ன மாமா



இது இரண்டாம் பாடம். முதல் பாடம் நாவல் மரமும் வரும் நாயும் வரும் என்று சொல்லி கொடுத்தவள், இரண்டாம் பாடத்தில் புலி, புளி என்று உச்சரிக்கும் வித்தியாசத்தை காட்டிக் கொடுத்து ஒன்று புலி என்னும் மிருகம், மற்றது புளி என்னும் புளிய மரம் என்பதைக் காட்டுகிறாள். குழந்தையும் பாட்டு ருசியில் “புலிக்கும் புலிக்கும் சண்டை எடா சின்ன மாமா நான் புளிய மரத்தில் ஏறிக்கொண்டேன் சின்ன மாமா எனப் பாடுகிறது.

குழந்தைக்கு தமிழ் எழுத்து வித்தியாச ஒலிகளை சாதுரியமாய் தாய்மார் பழக்கி அவைகளை உச்சரிக்க வைத்துக் கேட்டு மகிழ்ந்தனர். இது ஒரு நாள் சம்பாஷனை. தாயாரும் தன் குழந்தைக்கு கற்பிப்பதை விட்டு விடவில்லை. நாளொரு வண்ணமாய் குழந்தைக்கு அறிவூட்டினர் பழந்தமிழ்த் தாய்மார்.

இன்னொரு நாள் குழந்தை பூனையைக் கண்டு தாய்க்கு காட்டுகிறது. தாயார் உடனே நாயின் பாடல் ஞாபகம் வர வேண்டும். புலி புளியின் பாடல் ஞாபகம் வரவேண்டும். புலிக்கும் புளிக்கும் வித்தியாசம் தெரிய வேண்டும் எனக் கருதிப் பாட்டை அதே பாணியில் கொண்டு செல்கிறாள். குழந்தைக்கோ மிக சந்தோஷம். தான் முன்பு பாடிய ராகத்திலே இப்பாடல் இருக்கும் மகிழ்ச்சி. அவை இரண்டும் சண்டை பிடிப்பதாய் நினைக்கும் மகிழ்ச்சி. தாயார் பாடுகிறாள்.

RangaRakes
tamilnavarasam.com

பூனைக்கும் பூனைக்கும்
சண்டை எடா
சின்ன மாமா
நான் புன்னை மரத்தில்
ஏறிக் கொண்டேன்
சின்ன மாமா...

பழைய காலங்களில் துஷ்ட மிருகங்களைக் கண்டு விட்டால் பெரியவர்கள் மரத்தில் ஏறிக் கொள்வார்கள் என்று தான் குழந்தைகளுக்கு பெரியவர்கள் கதையினை சொல்லிக் கொடுப்பார்கள். அப்படிப் பல குழந்தைக் கதைகளும் உண்டு. ஆகவே தாயார் மிருகம் சண்டை பிடிக்கையில் மரத்தில் ஏறிக் கொண்டேன் என்றே பாட்டைப் பாடிக்காட்டி குழந்தைகளுக்குரிய பாதுகாப்பினை விளங்கபடுத்துதல் அருமையல்லவா! குழந்தை எழுத்து படிக்காத காலத்தில் எழுத்தின் வேற்றுமைகளை புரியப்பார்க்கிறது. இதனால் தமிழ்ப் புலமை உள்ள குழந்தையாய் இது வளரும் தானே.

தாயார் இந்தப் பாடலை இதோடு விடவில்லை. இந்தக் குழந்தைக்கு இந்தப் பாடல் எந்நேரமும் ஞாபகத்தில் இருக்க வேண்டும் என்று விரும்புகிறாள். அதற்காய் ஓர் உபாயம் செய்கிறாள். என்ன தான் பார்ப்போம். குழந்தைகள் பாம்பு என்று சொன்னாலே மிக பயப்படுவார். ஆகவே குழந்தைக்கு பாம்பு என்னும் வார்த்தை ஞாபகத்திலே இருக்கும். எனவே அந்த



வார்த்தையைப் பயன்படுத்த எண்ணுகிறாள். ஆனால் குழந்தை அந்த வார்த்தையால் பயப்படக்கூடாது என்பது அத்தாயின் விருப்பம். எனவே எப்படித் தந்திரமாய் குழந்தையைக் கவர்ந்து மனனம் பண்ணும் விதமாய் படிக்கிறாள் பாருங்கள்!

எட்டு நாளாய்
செத்த பாம்பை
சின்ன மாமா
எட்டி நின்று
தொட்டுப் பார்த்தேன்
சின்ன மாமா.

மாமன் தான் குழந்தையோடு அதிகம் விளையாடுவார். அதிலும் தாயாரின் தம்பி மிகக் குறைந்த வயதாய்தான் இருக்கும். அவருடன் தான் இக்குழந்தை போட்டி போட்டு வளரும். அந்த சின்ன மாமாவும் தன் செல்ல மருமகனை அணைத்துக் கெட்டிக்காரன் எனச் சொல்லுவார். இதை எதிர்பார்த்தே குழந்தை தன் வீரச் செயல்களை சின்ன மாமாவோடு பகிர்ந்து கொள்கிறது. பாருங்கள்! இடம் பொருள் ஏவல் கண்டு தம் குழந்தைகளை தமிழர் வளர்த்தனர். என்ன அருமை! குழந்தைக்கோ ஒரு பெருமை. தான் பாம்பை தொட்டு விட்டதாய் ஆனாலும் அதைத் தொடப் பயப்படத் தேவை இல்லை. அது எட்டு நாளைக்கு முன்பே செத்துவிட்டது என்று பாட்டால் விளங்கி தன் சின்ன மாமாவிடம் தன்

RangaRakes tamilnavarasam.com

வீர தீரச் செயலைப் பாடிக் காட்டுவதாய் இந்தப் பாடல் அமையப்பட்டு உள்ளது. குழந்தை தாயாரிடம் கேட்டு பாட்டை பாடம் ஆக்குகிறான். தான் வீரன் என்று சின்னமாமா ஒப்புக் கொள்ள வேண்டுமே! எனவே தாயாரைப் பாடச் சொல்ல, தாயார் தன் செல்வத்துக்கு பாம்பில் இருந்து தொடங்கினால் தான் விரும்புவான் என்பது தெரியும். எனவே பாட்டை பாம்பில் இருந்தே தொடங்குகிறாள்.

எட்டு நாளாய்
செத்த பாம்பை
சின்ன மாமா
எட்டி நின்று
தொட்டுப் பார்த்தேன்
சின்ன மாமா
நாய்க்கும் நாய்க்கும்
சண்டை எடா
சின்ன மாமா
நான் நாவல் மரத்தில்
ஏறிக் கொண்டேன்
சின்ன மாமா
புலிக்கும் புலிக்கும்
சண்டை எடா
நான் புளிய மரத்திலே
ஏறிக் கொண்டேன்

RangaRakes



சின்ன மாமா
பூனைக்கும் பூனைக்கும்
சண்டை எடா
சின்ன மாமா
நான் புன்னை மரத்தில்
ஏறிக் கொண்டேன்
சின்ன மாமா

குழந்தை மழலையில் பாடுகிறது. பிற்காலத்தில் இப்பாடல் இலக்கண அமைப்புகளை விளக்கக் கூடியதாய் எதுகை மோனை உள்ளதாய் இருக்க, குழந்தை இலக்கண அமைப்புகளை படிக்கையில் கண்டு கொள்கிறது. பார்த்தீர்களா! பாட்டின் மூலம் ஒரு மழலைக்கு தமிழர் படிப்பு சொல்லிக் கொடுத்த விதத்தை! இனி விளையாட்டின் மூலம் எப்படிப் படிப்பைச் சொல்லிக் கொடுத்தனர் என்பதை அடுத்து பார்ப்போமே.

tamilnavarasam.com

அத்தியாயம் – 19

## விளையாட்டால் படிப்பு

பாட்டின் மூலம் அறிவூட்டப்பெற்ற குழந்தை இப்போ விளையாட்டின் மூலம் அறிவூட்டப்பட்டு படிப்பிக்கப் படுகிறது. படிக்கிறோம், அறிவூட்டப் படுகிறோம் என்று தெரியாமலே விளையாட்டின் மூலம் கணிதம் அரசியல் இலக்கியம் முதலியவற்றைக் கற்கும் செழுமை தான் என்னே!

குழந்தைக்கு நாலு ஐந்து வயதாகிறது. அதற்கு விளையாட வேண்டும் என்று ஒரே துடிப்பு. சாப்பாடு நித்திரை இவைகளை மறந்து விடுகிறது. ஓடவேண்டும் ஆடவேண்டும் என்னும் எண்ணம் குழந்தையைப் போட்டு அலைக்கழிக்கிறது. தனக்கு வயதில் மூத்தவர் இவர் இளையவர் இவர் என்று பார்க்காமலே பல சிறுவர் சிறுமியரோடு சேர்ந்து விளையாடிக் களிக்கிறது. பழைய காலத்தில் சிறு குழந்தை எப்படி கணிதம் கற்றுக் கொள்கிறது பார்ப்போமா?





RangaRakes tamilnavarasam.com

"கறுவாடு காய வைத்தல்" என்னும் விளையாட்டை விளையாடப் போவதாய்ச் சொல்லி விளையாடும் இடத்துக்கு பாலன் வருகிறான். அங்கு அந்தப் பாலகனைப் போன்றும் அதற்கு மேல் வயது வந்த சிறுவர், சிறுமிகளும் விளையாட வருகிறார். இவர்கள் எல்லாம் சேர்ந்து வட்டமாய் உட்காருகிறார்கள். இதில் விபரம் தெரிந்த சிறுவன் தான் பாட்டிக்கு வருவதாய்ச் சொல்லி எழும்பிக் கொள்கிறான். மற்றவர்கள் ஐந்து பேர் அந்த விளையாட்டில் கலந்து கொள்வதற்காக தமது கால்கள் இரண்டையும் வட்டத்துக்குள் நீட்டி வைத்து அதன் மேல் தம் கை இரண்டையும் வைத்துக் கொள்கிறார்.

அந்தச் சிறுவர்களில் எண்ணத் தெரிந்த சிறுவன் ஒவ்வொருவரின் கைகள் கால்கள் கறுவாடு என்று ஒன்று இரண்டு எண்ணி ஐவரின் கையும் காலும் இருபது எனக் கூறுகிறான். அந்தப் பெரிய பையன் ஒன்று இரண்டு கூறுகையில் சிறு குழந்தைகளும் வாய்விட்டு ஒன்று இரண்டு எண்ணுகின்றன. மொத்தத்தில் ஐவரின் வாயிலும் எண்கள் தான் வெளிவருகின்றன. பெரிய பையன் இருபது என்று சொன்னவுடன் பாட்டிக்கு வரும் பையன், சரி! இருபது கறுவாடு! உங்கள் எல்லோரிடமும் இருக்குது! நீங்கள் இவற்றைக் காயவைத்து பத்திரமாய் வைத்து இருங்கள். இது என்னுடைய கறுவாடுகள். மிகவும் கவனம். நான் சந்தைக்குப் போய் வந்து உங்களுக்கு



சம்பளம் தருகிறேன் என்று சொல்லி கூனிக் கூனி பொல்லை ஊண்டி ஊண்டி கிழவி செல்வது போல் செல்வார். இச்சமயம் விளையாடும் ஐந்து பிள்ளைகளும் தம் தம் கையில் ஒன்றை ஒளித்து கொள்வர். பாட்டி சந்தைக்கு போவது போல் காட்டி அதன்பின் திரும்பி வருவார். அவர் வந்து அந்த கறுவாட்டினை எண்ணிப் பார்ப்பார்.

அப்போ மறைத்து வைத்த கறுவாடு போக களத்தில் பதினைந்து கறுவாடே இருக்கும். பாட்டி ஒன்று இரண்டு என்று எண்ணுகையில் அந்த விளையாட்டில் கலந்து இருப்போரும் எண்ணுவர். பாட்டி கேட்பர் என்ன பதினைந்து கறுவாடே இருக்கு! ஒவ்வொருவரிடமும் ஒரு கறுவாடு குறையுது எங்கே என ஒவ்வொருவரும் ஒருவித பதிலைக் கூறுவர். நான் சாப்பிடப் போகையில் காக்காய் தூக்கி போய் விட்டது என்பார். இப்படி ஐவரும் தமக்கு விருப்பமான பதில்களை உற்சாகத்தோடு சிரித்துக் கொண்டு பாட்டியை ஏமாற்றியதாய் நினைத்துக் கூறுவர். பாட்டியும் சரி பிள்ளைகளே இந்த மிகுதியான பதினைந்து கறுவாட்டையும் வைத்திருங்கள். ஒவ்வொருவரிடமும் மூன்று கறுவாடு இருக்கிறது. பத்திரமாய் பார்த்துக் கொள்ளுங்கள். நான் கோவிலுக்கு போய் வாறேன் என்று கூறி வெளியே செல்வார். அப்போ வட்டமாய் குந்தி விளையாடும் குழந்தைகள் பாட்டி கார் வருகுது பார்த்துப் போ என்பர். பஸ் வருகுது பார்த்து போ என்பர்!

RangaRakes tamilnavarasam.com

பாட்டியும் அவற்றுக்கு பயப்படுவது போல் பயந்து நடுங்கி விழுந்து செல்வார். இந்த ஐந்து குழந்தைகளுக்கு ஏக மகிழ்ச்சி.

தம் சொல்லுக்கு பாட்டி பயந்து விட்டா என்று பாட்டி கண்ணில் இருந்து மறைந்ததும் குழந்தைகள் தமது மற்ற கையை மறைத்து வைத்து விடுவார். பாட்டி திரும்பி வந்து எண்ணிப் பார்ப்பார். பத்துத்தான் இருக்கும். எங்கே என் கறுவாடு என்று பாட்டி கேட்பார். குழந்தைகள் மகிழ்ச்சியுடன் முன்பு சொன்னது போல் பதிலை மாற்றி மாற்றி சொல்லுவார்கள். பாட்டியும் அதைக்கேட்டு அபிநயித்து சரி சரி இந்த பத்துக் கறுவாட்டையும் பத்திரமாய் பாருங்கள். ஒவ்வொருவரிடமும் இரண்டு இரண்டு கறுவாடு உள்ளன என்பார்.

குழந்தைகளும் தாமும் எண்ணி அது சரியெனக் கூறுவர். பின்பு முன் போல் பாட்டி செல்கையில் பகிடி சேட்டைகளாய் விளையாடும் குழந்தைகள் கூறுவர். பாம்பு வருகுது பாட்டி என்று கூறும் ஒரு குழந்தை. வண்டில் வருகுது பாட்டி என்று அடுத்தது கூறும். பாட்டியோ பாம்புக்கு பயப்படுவது போலவும் வண்டிலுக்கு பயப்படுவது போலவும் மருண்டு விழுந்து எழும்புவர். குழந்தைகள் எங்கட கதையை பாட்டி நம்பி விட்டாயே என வெகுவாய் சிரிக்குங்கள்.



இப்படி எல்லாக் கறுவாடும் மறைக்கப்பட்டு காக்காய் தூக்கிற்று என்று பாட்டிக்கு சொல்லி முடிக்கையில் பாட்டி காக்காய் எங்கே என்று கேட்பா. அப்போ குழந்தைகள் மரத்திலே எனக் கூறுவார்கள். மரம் எங்கே என்று கேட்பா. வெட்டியாகிவிட்டது எனக் குழந்தைகள் கூறும். வெட்டிய துண்டுகள் எங்கே என்று கேப்பா. எரித்தாகி விட்டது என குழந்தைகள் கூறும். எரித்த சாம்பல் எங்கே என்பா பாட்டி. பாத்திரம் தேய்த்தாகி விட்டாச்சு என்பார் குழந்தைகள். பாத்திரம் எங்கே என்பார் பாட்டி. சாப்பாடு போட்டு வைத்திருக்கு என்பர் குழந்தைகள். சாப்பாடு எங்கே என்பார் பாட்டி. அடுத்த வீட்டு நாயும் எதிர் வீட்டு பூனையும் வந்து தட்டிக் கொட்டி சாப்பிட்டு ஓடி போயிற்று எனக் குழந்தைகள் கூற, பாட்டி தன் பொல்லால் குழந்தைகட்கு அடிக்க போவதாய் பாவனை செய்ய குழந்தைகள் சிரித்துச் சிரித்து பாட்டியிடம் தப்பித் தப்பி ஓடுவார்கள்.

இந்த விளையாட்டு குழந்தைகட்கு ஏக சந்தோஷத்தை கொடுக்கும் பாருங்கள்! மனது குழந்தைகட்கு உற்சாகமாய் இருக்கும். ஓடும் தேகப் பயிற்சி உடலுக்கு நன்றாய் இருக்கும். குழந்தைக்கு எண்கள் எண்ணும் முறை, எதற்குப் பின் எதை எண்ண வேண்டும் என்று ஒன்று இரண்டு சொல்லி பழகி கொள்கிறது. இதனால் அறிவு விருத்தியாகி விவேகம் பிறக்கிறது.

RangaRakes tamilnavarasam.com

கணிதப் பாடம் குழந்தைக்கு வெகு இலகுவாய் வந்து விடுகிறது. இலக்கணம் கற்ற குழந்தை கணித பாடம் எப்படி படிக்கிறது என்பதைப் பார்த்தீர்கள். இதனால் மனக் கணிதத்தில் வல்லோராய் வந்துவிடும். விளையாட்டுடன் படிப்பு நடைபெறுகிறது. ஆசிரியன் இல்லை. ஆனால் படிப்பு நன்றாய் நடைபெறுகிறது.

இன்னொரு விளையாட்டு அதையும் உங்களிடம் பரிமாறுகிறேன். எல்லா விளையாட்டுகளுமே எதோ ஒரு படிப்போடு சம்பந்தப்பட்டதாய்தான் இருக்கும். குழந்தைகள் தாங்கள் படிக்கிறோம் என்று தெரியாமல் படிப்பார். தற்காலத்தில் தாய் தந்தை வேலைக்குப் போகக் கூடுதலான பணத்தைக் கட்டிப் பாலர் வகுப்பில் விட்டு சில பாடங்களைப் படிக்கிறார்கள். அக்காலத்தில் அப்படிப்பினை விளையாட்டின் மூலம் படிப்பித்தனர். சில சிறுவர் சிறுமியர் ஒன்று சேர்வார். அதற்கு ஒரு சிறுவனோ சிறுமியோ அல்லது ஒரு பெரியவரோ தலைவனாய் இருப்பார். இந்தத் தலைமை வகிப்பவர் கீழ்க்கண்டவாறு கூறுகையில் ஒவ்வொரு வசன முடிவிலும் சேர்ந்து விளையாட இருக்கும் குழந்தைகள் எல்லாம் ஓம் ஓம் என்று கூறுவார். தலைவர் எப்படி கூறுவார் குழந்தைகள் எதற்கு ஓம் ஓம் கூறுகின்றன எனப் பாருங்கள்.

தலைமை தாங்குபவர் – சங்கு பித்தளை
குழந்தைகள் – ஓம் ஓம்
தலைவர் – சருகு பித்தளை



குழந்தைகள் – ஓம் ஓம்
தலைவர் – எங்கும் அப்படி
குழந்தைகள் – ஓம் ஓம்
தலைவர் – இராச கட்டளை
குழந்தைகள் – ஓம் ஓம்
தலைவர் – கேட்பீர்களா
குழந்தைகள் – ஓம் ஓம்

தலைவர் – ஓடி ஓடிப் போய் சிறு கல்லு பொறுக்கி வாருங்கள் அல்லது இலை அல்லது வேறு சாமான் கொண்டு வரும்படி கூறுவார். குழந்தைகள் தலைவர் என்னத்தை கொண்டு வரச் சொன்னாரோ அதை விரைவில் கொண்டு வந்து கொடுக்கப் பார்க்கும். எந்தக் குழந்தை முதலில் கொண்டு வந்து தலைவர் சொன்ன சாமானை கொடுக்கிறதோ அவர்தான் விளையாட்டில் வென்றவர். அவருக்கு ஒரு வெற்றிப் புள்ளி ஒன்று. பின் அடுத்ததரம் தலைவர் இதே முறையில் சொல்வார். எந்தக் குழந்தை வெல்கிறதோ அவருக்கு ஒரு வெற்றிப் புள்ளி. இப்படிப் பத்து வெற்றிப் புள்ளி யார் எடுக்கிறாரோ அவரே விளையாட்டில் வென்றவர்.

இந்த விளையாட்டால் என்ன நன்மை குழந்தைகட்கு கிடைக்கின்றன. குழந்தைகள் இலைகளின் பெயர் மற்றும் இதர பொருட்களைப் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்கின்றன. தலைவர் ஒருவருக்கு கீழ்ப்படிந்து நடக்க வேணும் என்ற

RangaRakes tamilnavarasam.com

உணர்வினை பெற்றுக் கொள்கின்றன. இதுவே ஆசிரியரிடம் கீழ்ப்படியும் தன்மையை உண்டாக்கி கொடுக்கிறது.

குடம் வைத்தல் என்னும் விளையாட்டால் நரம்புகள். பெலனடைந்து நேர்வாக்கில் கையை அசையாது பிடிக்கும் கெட்டித் தனம் குழந்தையிடம் வந்து சேருகிறது. கண்கட்டி விளையாடுவதால் காதின் ஒலியால் கவனிக்கும் தன்மை, கண்ணை மூடி நின்று ஒன்றை அவதானிக்கும் தன்மை ஏற்படுகிறது. இப்படிப் பலவித விளையாட்டுகளால் பலவித நன்மைகளை குழந்தைகள் அடைந்தார்கள். மனப் பயிற்சி உடல் பயிற்சி மூளைப் பயிற்சியை பெற்றனர். அன்று குழந்தைகள் பாடசாலை செல்லுமுன் பாட்டினாலும் பலவித விளையாட்டினாலும் பயிற்சிகளைக் கொடுத்து உடல் வல்லுனர்களாகவும் படிப்பாளிகளாகவும் குழந்தைகளை வரச் செய்தனர். இடைக்காலத்தில் வேலைகள் பார்ப்பதின் நிமித்தம் கிராமங்களை விட்டு பட்டணம் வரத் தலைப்பட்ட மக்கள் தம் சீவியத்தின் நிமித்தம் வேறு வேறு வேலைகளைச் செய்து ஓய்வு நேரங்களைக் குறைத்து பணம் சேகரிப்பதில் முனைந்தனர். குழந்தைகள் பலர் வீட்டில் கற்கும் கல்வியை மறந்தனர். பாடசாலை செல்வதும் அங்கு கொடுக்கும் பாடங்களை வீட்டில் செய்வதுமாய் தமது சீவியத்திற்கு தேவையான பாடங்களை மாத்திரம் கற்றனர். இதனால் பல குழந்தைகளுக்கு அவர்களின் உற்சாகம்



உற்சாகம் இழக்கப்பட்டு பாடப் புத்தகங்களை காவுதலே அவர்களின் நித்திய கடமையாயிற்று. இக்காலத்தில் கனணி கண்டுபிடிக்கப்பட்டு குழந்தைகள் அதன் வசப்பட்டு கல்வியைக் கற்கின்றனர். மின்னல் வேகத்தில் பலவற்றைக் கற்கின்றனர். ஆனால் குழந்தைகள் உடல் வலுவிழந்து நோய்க்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்படுகிறது.

எல்லாமே முன்னேறும் உலகத்தில் முன்னேற்றமாய் தோன்றினாலும் பல பல கஷ்டங்களை மக்கள் குழாம் குழந்தைப் பருவத்தில் தாண்ட வேண்டி இருக்கிறது. இந்த நிலைமாறி குழந்தைகள் வலுவுடன் உற்சாகத்துடன் வளருமா? இதுவே இன்றைய சமுதாயத்திற்குரிய கேள்வியாய்த் தொக்கி நிற்கிறது.

வழி பிறந்திடும் என்றே நினைத்து நாம் வாழ்வினை எதிர்கொள்வோம். எல்லாம் நலமாகட்டும்.

RangaRakes tamilnavarasam.com

அத்தியாயம் – 20

## நா உச்சரிப்பு திருத்துதல்

குழந்தைகள் எல்லோரும் விருப்புடன் மாலை நேரம் சேர்ந்து விளையாடுவர்கள். ஓடி விளையாடுவார் இருந்து கொண்டு வைச்சுக் கொள் அம்மா வைச்சுக் கொள் வாயில தம்பளம் போட்டுக் கொள் என்று வட்டமாய் உட்கார்ந்து விளையாடுவர். வட்டம் ஒன்றை கீறி குளம் இது கரை இது என்று கூறி குளம் கரை விளையாடுவார். கள்ளன் அரசன் விளையாட்டு விளையாடுவார். அப்படி பலவித விளையாட்டுகளை குழந்தைகள் விளையாட அவர்கள் எண்ணம் விரிவடையும்; உடல் வலுவுறும்; இப்படிக் குழந்தைகள் விளையாடுதலைக் கண்ட ஒரு பெரியவர் அக்குழந்தைகளை விளையாட்டின் மூலம் எண்ணங்களை விரிவடையச் செய்யவும் சொற்களை திருத்தமாய்ச் சொல்லவும், அவர்களை மடக்கி விளையாட்டுப் பாணியிலே அதைப் புகுத்த நினைக்கிறார்.

பிள்ளைகளே! இங்கு வாருங்கள்! வட்டமாய் இருங்கள்; நான் சொல்வதைக் கவனமாய்க் கேட்டு நீங்கள் அதனை விரைவாக எந்தவித தடுமாற்றமும் இன்றி சொல்ல வேண்டும். எவர் அதனை அப்படியே



RangaRakes tamilnavarasam.com

சொல்கிறாரோ அவர் ஜெயித்து விட்டார். பரீட்சை கேள்வி ஒன்றல்ல இரண்டு மூன்று இருக்கின்றன. அவற்றில் யார் ஜெயிப்பார் பார்ப்போம், என்றார். (இந்த பெரியவர் குழந்தைகள் குழந்தைகளோடு கதைத்தல் இவை ஒரு கற்பனையே.) எப்படியோ இந்த படிப்புகளை அந்தக் காலச் சிறுவர் சிறுமியர் படித்தனர். அவர்களுக்கு பெரியோர்கள் எப்படிச் சொல்லித் தந்தார்கள்? எப்படிச் சிறுவர் சிறுமியர் இவற்றைத் தெரிந்து படித்தார்கள் என்பது தெரியாது. நாம் எல்லாம் கூடி விளையாடுகையில் கடற்கரையில் இருந்து கதைத்து விளையாடி மகிழ்கையிலும் நம் பெரியார் நமக்கு சொல்லித் தந்தார்.

இப்போ சிறுவர் சிறுமியர் இதனை அறிய வேண்டும். இதனாலே இக்கற்பனைப் பாத்திரத்தைப் படைத்தோம். தற்காலச் சிறுவர் சிறுமியர் ஏன் வாலிபர் யுவதிகளுக்குக் கூட ஒழுங்காய் தமிழ் கதைக்க முடியவில்லை. அவர்கள் உச்சரிப்புகளில் மிகவும் பிழை விடுகிறார்கள். அவர்களைப் பார்த்து அடுத்து வரும் சந்ததிகளும் இப்பிழைகளை விடுதல் சரியில்லை. தமிழின் அழகே போய்விடும். எனவே தான் கற்பனைப் பாத்திரம் மூலம் இந்தச் சுவையான படிப்பினை பெரியார் கூறுவதாய் படைத்துள்ளோம். சரி, அவர்கள் விளையாடுவது போல் கூறும் செய்திகளை அவர்கள் பாணியிலேயே நாமும் தெரிந்து கொள்வோம். பெரியவர் சொல்கிறார். ஒவ்வொரு சிறுவர் சிறுமியராய் முறை வைத்து கூறுங்கள் பார்க்கலாம். சரி கூறுங்கள்.



**வாக்கியம் 1**

கடற்கரையில் கரி மணலில்
உரல் உருளுது

சிறுவர் சிறுமியர் ஒவ்வொருவரும் முறை வைத்து சொல்லுகிறார்கள். பலரின் நாக்கு தட்டுபட்டு வாக்கியம் அழகாய் வராமல் போகிறது. பெரியவர் கூறுகிறார். வாக்கியத்தை தட்டுத் தடுமாறாமல், கொன்னாமல், அழகாய்ச் சொல்ல வேண்டும். சொற்களில் தடுமாற்றம் இருக்கக்கூடாது என்றார். சிலர் முயன்று வெல்கிறார்கள். சிலருக்கு அப்படி கூறுவது மிகக் கஷ்டமும் தடுமாற்றமுமாய் இருக்கிறது. சரி நீங்கள் வீட்டில் இதை இந்த வாக்கியத்தை சொல்லிப் பாருங்கள் இப்படி வாக்கியத்தை உச்சரித்துச் சொல்வதினால் உங்களால் அழகாய் தமிழைக் கதைக்க முடியும். உங்களுடைய மொழி வளம் உங்கள் வாழ்க்கையே உயர்த்தும் எனக் கூறி, சரி மற்ற சில வாக்கியங்கள் இருக்கின்றன. அவற்றைக் கூறுங்கள், பார்க்கலாம், என அடுத்த வாக்கியத்தைக் கூறுகிறார்.

**வாக்கியம் 2**

காடிக்கு பிடரி கறுப்பு
கண்ட புலிக்கு தொண்டை கறுப்பு

இந்த வாக்கியம் சிறுவருக்கு சொல்ல சுலபமாய் இருக்கிறது. அநேகம் சிறுவர் சிறுமியர் உற்சாகத்தோடு

RangaRakes
tamilnavarasam.com

இதனை சொல்லுகிறர்கள். அவர்களால் இந்த வாக்கியத்தை சொல்லக் கூடிய விதமாய் அமைந்திருப்பதைக் கண்ணுற்ற பெரியவர் மிக சந்தோஷப்படுகிறார். எனினும் சில குழந்தைகள் அந்த வாக்கியத்தை சொல்லத் தெரியாமல் தடுமாறுவதை கண்ணுற்ற அவர் பரவாயில்லை. நீங்கள் வீட்டில் நன்றாய் நாக்கை அசைத்து ரரர ரிரிரி என்று சொல்லி வாருங்கள். நாளடைவில் இவ்வாக்கியத்தை உங்களால் சொல்ல முடியும் என்று சொல்ல முடியாத சிறுவர் சிறுமியரை முதுகில் தட்டிக் கொடுக்கிறார். குழந்தைகளும் சந்தோஷத்தோடு வீடு திரும்புகின்றன. வீட்டில், குழந்தைகள் நேரம் கிடைக்கையில். எல்லாம் இந்த வாக்கியங்களையும் உச்சரிப்புகளையும் சொல்லி பார்க்கிறார்கள். வென்று விட்ட சந்தோஷத்தோடு தமது சிநேகிதரை சந்தித்து வாக்கியத்தை சொல்லிக் காட்டுகிறார்கள். அவர்களுக்கு ஏக உற்சாகம். எப்போ அந்தப் பெரியவரை சந்திப்போம் என்று திரும்பவும் ஒரு நாள் பெரியவரை குழந்தைகள் சந்திக்கின்றன. குழந்தைகள் மிக உரிமையோடு அப்பப்பா எங்களால் வாக்கியத்தை கூற முடியும் என சிறுவர் சிறுமியர் சொல்லிக் காட்டுகின்றன. அப்படியா, நாம் இன்று அடுத்த வாக்கியம் படிப்போம். எங்கே சொல்லுங்கள் என்று கூறிச் சொல்கிறார்.



**வாக்கியம் 3**

புட்டும் புதுப் புட்டு
தும்பும் புதுத் தும்பு
பாக்கும் பழுப் பாக்கு

குழந்தைகள் பல இதைக் கூற முற்படுகின்றன. இப்பொழுது குழந்தைகள் பலரால் இதை சொல்லக் கூடியதாய் இருக்கின்றது. சென்ற வாரம் வாக்கிய விளையாட்டுகளை விளையாடியபடியாலும் வீட்டில் அவற்றை சொல்லிச் சொல்லிப் பழகிய படியாலும் அவர்கள் பலர் வாக்கிய விளையாட்டில் வெற்றியடைகின்றனர். அப்பப்பா மற்றொரு வாக்கியம் சொல்லிக் கொடுக்கிறார் இதோ.

**வாக்கியம் 4**

அடி மரம் இருந்து
நுனி மரம் ஏறி
புளிப் பழம் தின்னும் அணிலனாரே
நீர் ஆண் அணிலனாரோ
அல்லது பெண் அணிலனாரோ
என்று சொல்லும் அணிலனாரே

என்று கூற குழந்தைகள் மகிழ்ச்சியோடு அவ்வாக்கியத்தைச் சொல்கிறார்கள். சில குழந்தைகளால் அந்த வாக்கியத்தைக் கூற முடியவில்லை. ஏக்கமாய்ப்

RangaRakes tamilnavarasam.com

பெரியவரை பார்க்கிறார்கள். அவரால் அந்தப் பார்வையை பொறுக்க முடியவில்லை. சொல்லாமல் ஏங்கும் குழந்தைகளைப் பார்த்து துக்கப்படாதீர்கள் நீங்கள் இப்படிக் கூறுங்கள் என்று இலகுவான வாக்கியம் ஒன்றை சொல்லிக் கொடுக்கிறார்.

இது என்ன சட்டை
தாத்தா தைச்ச சட்டை

குழந்தைகள் அனைவரும் இவ்வாக்கியத்தைக் கூறுகின்றன. அப்பப்பாவும் சந்தோஷத்துடன் உங்களுக்கு அடுத்த முறை பாட்டால் சில நொடிகளை கேட்பேன். யார் சொல்கிறார் பார்ப்போம் என்கிறார். குழந்தைகளும் சந்தோஷத்துடன் வாக்கியங்களை சொல்லி சொல்லிப் பார்த்து விடைபெறுகின்றன.



அத்தியாயம் – 21

# நொடிகளும் விடைகளும் - I

ஒரு வாரம் கழிகிறது. சிறுவர் சிறுமியருக்கு அன்று விடுமுறை தினம். பிள்ளைகளுக்கு ஏக சந்தோஷம். மாலை வருமுன்னேயே குழந்தைகளை வீட்டை விட்டு எப்போ விளையாடப் போவார்கள் எனப் பெற்றோர் சிலர் காத்திருந்தனர். அவ்வளவு ரகளை. குழந்தைகளுக்கோ எப்போ மாலை வரும் என்று ஆவல். தங்களுடைய புதிய அப்பப்பாவை சந்திப்போம். அவர் புதிதாக எமக்கு ஏதாவது சொல்லித் தந்து எம்மை திக்கு முக்காட வைப்பார் என்ற எண்ணம் அவர்கள் ஒவ்வொருவரையும் கிலுகிலுக்க வைத்தது. மாலையும் வந்தது. திறந்த முற்ற வெளிக்கு சிறுவரும் சிறுமியரும் மெல்ல மெல்ல வரத் தொடங்குகிறார்கள்.

திறந்த வெளியில் கூடிய குழந்தைகள் அன்று என்ன விளையாட்டு என்று ஒருவரிடம் ஒருவர் கேட்கவில்லை. ஆனால் எல்லோரும் சென்ற கிழமை அந்தப் பெரியவராகிய அப்பப்பா சொல்லித் தந்த

RangaRakes tamilnavarasam.com





வாசகங்களை திரும்பச் சொல்லி சொல்லி மற்றவர்களுக்குக் கேட்கச் செய்து பெருமைப்பட்டுக் கொண்டு இருந்தனர். தூரத்தில் அந்தப் பெரியவர் வருவதைக் கண்ட குழந்தைகள் அதோ அப்பப்பா வந்து விட்டார் என துள்ளிக் குதித்து மகிழ்ச்சியைக் காட்டின.

அவரும் அருகே வந்து ஆ வந்துவிட்டீர்களா! சரி, சரி யார் எல்லாம் வாக்கியங்களை சரியாய்ச் சொல்கிறீர்கள் என்று கேட்டார். எல்லாக் குழந்தைகளும் ஒரே சமயத்தில் என்னால் முடியும் என்னால் முடியும் என்று கூவியபடியே இருந்தனர். மெத்த நல்லது என்று கூறிய பெரியவர் இன்று என்னத்தை செய்வோம் என்று கேட்டார். குழந்தைகள் நொடிகள் கேட்டு விளையாடுவோம் எனக் கூறினர். சரி சரி நொடிகள் கேளுங்கள் பார்க்கலாம் எனக் கூறியவுடன் ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த நொடிகளை சொல்லத் தொடங்கின. சரி இப்படி சொல்லி விளையாடக் கூடாது. இருக்கும் பிள்ளைகள் இரண்டாய்ப் பிரிந்து நின்று கொள்ளுங்கள். ஒரு பிரிவில் இருப்பவர் ஒரு நொடியை கேட்கட்டும். அடுத்த பிரிவினர் நொடிக்கு விடை சொல்லாவிடில் அவர்கள் இன்னொரு நொடியை முதல் பிரிவில் உள்ளவரிடம் கேட்கட்டும். பதிலை அவர் சொல்லாவிடில் 1-ம் பிரிவுக்கு வெற்றி. பதில் சொல்ல முடியாவிட்டால் இருவரும் பதிலைக் கூறிவிடல் வேண்டும். எந்தப் பிரிவு வெல்கிறது என்று பார்ப்போம் என்றார், அப்பப்பா. சிறுவர் சிறுமியருக்கு

RangaRakes tamilnavarasam.com

ஒரே மகிழ்ச்சி. இரண்டாய் தங்களைப் பிரித்துக் கொண்டனர். ஒவ்வொரு பிரிவும் நொடிகளைச் சொல்லவும் விடைகளைச் சொல்லவும் தயாராயின. முதலாம் பிரிவு ஆரம்பித்தது.

நொடி : பார்த்தால் கல்லுத்தான்,
பல்லு பட்டால் தண்ணீர்தான்.

இரண்டாம் பிரிவு குழந்தைகள் ஒருவரை ஒருவர் பார்த்தன. ஒருவரோடு ஒருவர் கதைத்தனர். ஆ தெரிந்து கொண்டோம் என்று கூறினர். அதில் ஒரு சிறுவன் பதிலைச் சொன்னான்.

பதில் – ஐஸ்கட்டி

முதலாம் பிரிவு குழந்தைகள் கைகளை பட படவென்று தட்டினர். இரண்டாம் பிரிவு தற்போது கேள்வி கேட்டது.

நொடி : சும்மாவும் இருக்காது,
சொல்லவும் தெரியாது.

முதலாம் பிரிவு சிறுவர் சிறுமியர் எல்லோரும் யோசித்தனர். அவர்களுக்கு விடை தட்டுப்படவில்லை. உடனே அவர்கள் தாம் ஒரு நொடியை அவர்களுக்கு எடுத்து விட்டனர்.

நொடி : மாற்று நொடி போட்ட வன்னியனுக்கு
முகத்தில் மூன்று சுளி.



மற்றைய இரண்டாம் பிரிவுக்கும் விடை தெரியவில்லை. இருபகுதியையும் தங்கள் விடையை பரிமாறிக் கொண்டன.

பதில் 1) குழந்தை. இதை இரண்டாம் பிரிவுக் குழுவினர் சொல்ல, முதல் பிரிவுக் குழுவினர். 2) தேங்காய் என்று தம் விடையைக் கூறினார். இப்படியே இருபகுதிப் பிரிவுகளும் தங்கள் நொடியைக் கேட்பதும் விடைகளைச் சொல்வதுமாய் நேரம் நகர்ந்து கொண்டு இருந்தது. அரை மணித்தியாலம் இப்படி சந்தோஷமாய் நேரம் நகரவே அப்பப்பா சொல்கிறார். சரி, நான் இப்போது பழைய காலத்தில் சொல்லும் நொடியை கூறுகிறேன், பதில் சொல்லுங்கள் பார்க்கலாம் என்று கூறினார். உடனே சிறுவர் சிறுமியர் எல்லாம் சரி கூறுங்கள் எனக் குரல் கொடுத்தனர். அவரும் தன் நொடியைக் கூறுகிறார்,

மரமது மரத்தில் ஏறி
மரமது செல்லும் வேளை
மரமதை கண்ட மரம்
மரத்தினால் மரத்தைக் குத்தி
வளர்மனை ஏகும் போது
மரமதை கண்ட மாதர்
மரமொரு மரம் எடுத்தார்.

குழந்தைகள் ஒருவருக்கும் பதில் தெரியவில்லை. பதில் சொல்லக் கஷ்டமாய் இருந்தது. அவர்கள்

RangaRakes tamilnavarasam.com

அப்பப்பா பதில் கூறுங்கள் எனக் கேட்கத் தொடங்கினர். அவரும் பதிலை சொல்லத் தொடங்கினார்.

இந்த நொடியில் கூறப்பட்டவைகள் எல்லாம் மரங்களே. மரமது மரத்தில் ஏறி என்றால் அரசு அரசு மரத்தில் ஏறி அந்த மரம்மா மா என்பது குதிரையைக் குறிக்கும். அரசன் குதிரையில் ஏறி என்பது முதலாம் வசன அர்த்தம். இரண்டாம் வசனம் மரமது செல்லும் வேளை. இந்த வசன அர்த்தம் மரமாகி அரசமரம் எனப் பெயர் கொண்ட அரசு என்று சொல்கின்றார். அரசன் செல்லும் வேளை என்பது பொருள். மூன்றாம் வசனம் மரமதை கண்ட மரம். இதன் பொருள் வேங்கை மரம் (மரம் என்னும் சொல்லை விட்டுச் சொன்னால் வேங்கை என்பதாகும்) வேங்கை (சிறுத்தைகளில் ஒரு இனம்) கண்ட அரசன் என்பதாகும். நாலாம் வரி மரத்தினால் மரத்தைக் குத்தி என்பது. அதன் பொருள். மரத்தினால் என்றால் வேல மரம் இதில் மரத்தை விட்டா வேலால் வேங்கையைக் குத்தி என்பது பொருள். ஐந்தாம் வரி வளர்மனை ஏகும் போது என்பதின் பொருள். வளர்ந்த மனை என்று சொல்லுகின்ற மாளிகைக்கு அரசன் திரும்பி வருகிற போது என்பதாகும். ஆறாம் வரி மரமதை கண்ட மாதர் என்பது. அதன் பொருள். அரசனைக் கண்ட பெண்கள் என்பதாகும். ஏழாம் வரி மரமொடு மரம் எடுத்தார் பெண்கள் என்பதாகும். மரமொடு மரம் என்பது



ஆலமரத்தொடு ஆத்திமரம் என்பதே. ஆல் ஆத்தி என்பது ஆலாத்தி அரசனுக்கு பெண்கள் எடுத்தார். ஆகவே பாத்தீர்களா பிள்ளைகளே இதன் முழுக் கருத்தும்.

அரசன் குதிரையில் ஏறி
அரசன் செல்லும் வேளை
வேங்கையைக் கண்ட அரசன்
வேலால் வேங்கையைக் குத்தி
மாளிகைக்குத் திரும்பும் போது
அரசனைக் கண்ட பெண்கள்
ஆலாத்தி எடுத்தனர்...

இப்படித் தமிழர் வாழ்க்கையில் சிலேடையாகப் பல கருத்தினைச் சொல்லி வைத்திருந்தனர். அவர்களின் பெருமை சொல்லுதற்கரிது. சரி எப்படி இந்த நொடி என்று அப்பப்பா கேட்டார். குழந்தைகள் மிக மிக உற்காகமாய் நல்லாய் இருக்கிறது நல்லாய் இருக்கிறது. ஒருமித்த குரலில் கத்தினார்கள். அந்த நொடியை சொல்லிச் சொல்லிப் பார்த்தனர். குழந்தைகளுக்கு ஏக மகிழ்ச்சி. அப்பப்பாவை அதோடு விட்டு விடவில்லை. பொழுது சாய்ந்ததினால் எல்லோரும் வீட்டுக்கு திரும்ப வேண்டிய தாயிற்று.

RangaRakes tamilnavarasam.com

அத்தியாயம் – 22

## நொடிகளும் விடைகளும் - II

டிசம்பர் மாதம் பாடசாலை விடுமுறைக் காலம். குழந்தைகள் பழைய வகுப்புகளில் இருந்து சித்தி அடைந்து புதிய வகுப்புகளுக்கு போகும் நேரம். இதனால் சிறுவர் சிறுமியர் புதிய புத்தகங்களைக் கடைகளில் வாங்குவதற்கு முயற்சி; புதுப் புது விஷயங்களைப் படித்து அறிய வேண்டும் என உற்சாகம். இதனால் அவர்கள் மனம் பரபரப்பும் மகிழ்வுமாய் இருந்தது. இந்நிலையில் சனி மாலை சிறுவர் சிறுமியர் முற்றவெளியில் கூடினர். அன்று அந்தப் பெரியவராகிய அப்பப்பாவிடம் விடுகதைகள் கேட்ட அதே சிறுவர் சிறுமியர்தான் இன்றும் அப்பப்பா ஏதாவது விடுகதை சொல்லித் தருவார். பழைய கால மக்கள் என்ன விதமான விடுகதைகளை தமது பிள்ளைகளிடம் கேட்டார்கள் என்பதை அறிய ஆவலுற்றனர்.

அப்பப்பாவும் அன்று சீக்கிரமாகவே முற்ற வெளிக்கு வந்து விட்டார். பிள்ளைகள் ஆராவாரமாய்



அவரை வரவேற்றனர். அப்பப்பா திறந்த முற்ற வெளியில் பச்சைப்பசேல் என்ற புற்தரையில் அமர்ந்து விட்டார். குழந்தைகளும் அவரைச் சுற்றி உட்கார்ந்து கொண்டன. அப்பப்பா அவர்கள் எல்லாரையும் ஒரு முறை பார்த்தார். பின் கூறினார் : இன்றைய விடுகதை தமிழ் எழுத்தை வைத்தே கேட்கப் போகிறேன், யார் சொல்லுகிறீர்கள் பார்ப்போம் என்றார். பிள்ளைகளும் உற்சாகத்தோடு கேட்க ஆரம்பித்தன.

இருமா தலையன் இருபது மா தலையனைக்
கொன்றான்; ஏனென்றால் சவ்வில் நாலையும்
தவ்வில் ஒன்பதையும் கவர்ந்த படியால்...

கேள்வியைக் கேட்டு அப்பப்பா மௌனமாய் குழந்தைகளைப் பார்த்தார். ஒருவராலும் அந்த நொடிக்கு பதில் கூற முடியவில்லை. குழந்தைகள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டன. முகத்தால் கேள்வியை எழுப்பினர். உதட்டைப் பிதுக்கி விடை தெரியாது என்று தலையை ஆட்டினர். பின்னர் குழந்தைகள் ஏகோபித்த குரலில் அப்பப்பா நீங்கள் விடையை சொல்லித் தாருங்கள் என்றனர். அப்பப்பாவும் பிள்ளைகளுக்கு இந்த விடைகளை தெரிந்து இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் விடையைக் கூறினார்.

மா என்பது தமிழ் எழுத்தில் குதிரைக்கும் வரும். எண்களில் ஒன்றின் அரையைக் குறிக்கும் எழுத்தாயும்

RangaRakes tamilnavarasam.com

இருக்கும். இந்தக் கேள்வியில் இந்த "மா" என்னும் எழுத்து அரை எண்ணையே குறிக்கிறது. ஆகவே விடையைப் பாருங்கள்! இரு மா தலையன் என்பது இரண்டு அரைவாசி உடைய ஒரு தலையை உடையவன். யார் ஒரு தலை உடையவன். ஒரு மனிதர். அவன் இருபது மா தலையனை என்பது இருபது மா சேர்ந்தால் பத்து தலையன். ஆகவே பத்து தலை உடையவனை, ஒரு தலையுடையவன் கொன்றான். ஏனெனில் சவ்வில் நாலையும் தவ்வில் ஒன்பதையும் கவர்ந்த படியால், அப்படியானால் சவ்வரிசையில் நாலாம் எழுத்தான சீ என்ற எழுத்து உடையதையும் த வரிசையில் ஒன்பதாம் எழுத்தான தையையும் கவர்ந்த படியால்... அப்படியானால் சீ எழுத்தையும் தை எழுத்தையும் உடைய சீதையைக் கவர்ந்த படியால் என்பது பொருள். ஒருதலை உடையவன் பத்துத் தலை உடையவனைக் கொன்றான் சீதையை கவர்ந்த படியால். யார் ஒருதலை? யார் பத்துத் தலை? ஒருதலை உடையவன் இராமன். பத்துத் தலை உடையோன் இராவணன் என்றதும், சிறுவர் சிறுமியர் எல்லோரும் தம் கைகளைத் தட்டி ஆர்ப்பரித்து அப்பப்பாவை மெச்சினர். அப்பப்பாவிற்கு சிறிது லட்சை. குழந்தைகள் கை தட்டித் தம்மை மெச்சுகிறார்களே என்று. உடனே அவர் சரி சரி இன்னொன்று கேட்கிறேன் சொல்லுங்கள் பதில் என்றார். குழந்தைகளும் கேட்கத் தயார் ஆயின.



அப்பப்பா சொல்லத் தொடங்கினார்.

செந்தில் வடி வேலனுக்கு
சேர்ந்த கொம்பு இரண்டு
வள்ளிக்கு கால் இல்லை
ஆனைக்கு கொம்பு இல்லை
ஆட்டுக்கு வால் இல்லை
பாட்டுக்குள் ஆராய்ந்து பார்

இது அப்பப்பா கேட்டது. இக்காலச் சிறுவர் சிறுமியருக்கு இது மிகவும் கஷ்டமாய்த்தான் இருக்கும் என்று அப்பப்பா நினைத்துக் கொண்டார். ஆயினும் பழைய கால விடுகதை. மனப்பயிற்சி புதிர் கேள்விகள் இவற்றை சிறுவர்கள் அறியத்தான் வேண்டும் என்றும் எண்ணினார். ஆகவே அவர்களுக்குத் தெரியாவிட்டால் நாம் அதை விளங்கப்படுத்தி விடுவோம் எனவும் எண்ணிக் கொண்டார். அவர் எதிர்பார்த்தபடியே அந்தச் சிறுவர் சிறுமியருக்கு அதற்குரிய விடை தெரிந்து இருக்கவில்லை. பெரியவர்களுக்கும் கூட இவ்விடை தெரியாமல் இருக்கும். இந்தச் சிறுவர் சிறுமியர் தெரிந்து இருக்க நியாயமில்லை. எனினும் நாளை இவர்கள் பெரியவர்களானால் என்னைப் போல் வருங்கால சிறுவர் குழாமுக்கு இவர்கள் சொல்லிக் கொடுப்பார்கள் என்னும் எண்ணம் அவர் மனதுக்கு இனிப்பை ஊட்டியது. அவர் பதிலை கூறத் தொடங்கினார்.

RangaRakes tamilnavarasam.com






செந்தில் வடிவேலன் என்பதில் செந்தில் வடிவேலன் என்னும் நாமத்தை எடுத்தால் அதில் சேர்ந்த கொம்பு எழுத்து இரண்டு இருக்கின்றன. அவை செந்தில் வரும் ஒற்றைக் கொம்பு ஒன்று வேலனில் வரும் இரட்டைக் கொம்பு ஒன்று. ஆகவே இரண்டு கொம்பு எழுத்து உள்ளன. வள்ளிக்கு கால் இல்லை. வள்ளி என்னும் நாமத்துக்கு த, தி மாதிரி கீழே இழுத்து விடும் கால் இல்லை. அந்தக் காலத்தில் த, தி இவற்றை எழுதுகையில் கால் வடிவாய் போடு என்று கூறுவார்.

த, தா, இவைகளில் வரும் கீழே இருக்கும் அந்த வரி கால் என அழைப்பார். அப்படி வள்ளிக்கு இழுத்து கீழே எழுதும் கால் இல்லை. யானைக்கு கொம்பு இல்லை. பழைய காலத்தில் யானை என்று எழுதினாலும் "னை" கொம்பு எழுத்தல்ல. ஆகவே தான் யானைக்கு கொம்பில்லை என்றார். ஆட்டுக்கு வால் இல்லை. ஆட்டுக்கு வால் என்பது எமக்கு வால். எமது பிள்ளைகள் அது ஒரு எழுத்துக்கு வால் ா(அரவு) என்பதாகும். கா வரும் அரவு தா வரும் அரவு இப்படி அரவுகள் வால் ஆகும். ஆடு என்னும் சொல்லுக்கு வால் இல்லை என்றார்.

பிள்ளைகள் வியந்து போய் நின்றார்கள். தமிழ் எழுத்தில் இப்படி விடுகதைகளா என அப்பப்பாவிடமே கேட்டார்கள். அப்பப்பாவும் ஆமாம் தமிழ் மொழி இனிமையானது மாத்திரமல்ல, விந்தையானது! புதிரானது என்று குழந்தைகளைத் திகைக்க வைத்தார்.

RangaRakes tamilnavarasam.com

சிறிது நேரம் பொறுத்து அப்பப்பா சரி இன்னொரு நொடியையும் உங்களுக்கு சொல்லித் தருகிறேன். நீங்கள் மனதில் வைத்து உங்கள் தம்பி தங்கைகளை இக்கேள்வி கேட்டுப் பின் அவர்களும் அறியும் வண்ணம் இதைச் சொல்லிக் கொடுங்கள்! சுவையான விடுகதை எனக் கூறினார். குழந்தைகளும் அதை அறியும் ஆவலில் கூறுங்கள், அப்பப்பா கூறுங்கள் என குழந்தைகள் மாறி குழந்தை கேட்கத் தொடங்கின. அப்பப்பாவும் சொல்லத் தொடங்கினார்.

கையும் கையும் கடைக்குப் போய்
கையை வாங்கி வருகையில்
கையின் காலில் புகுந்தது பூ
கை எடு என்றது கையை
மாட்டேன் என்றது கை
கையும் கையும் சண்டை பிடிக்க
கையை கண்டகை
கையை எடுத்து கையில் வைத்து
கையைத் தின்றது கை.

இதன் விடை உங்களுக்கு தெரிந்து இருக்க முடியாது. இதன் விடையையும் நானே சொல்லித் தருகிறேன். சிறுவர்களாகிய நீங்கள் இவற்றை அறிந்து இருக்க வேண்டும். நாளைய சமுதாயம் உங்கள் கையில்! தமிழ் மொழிகளில் எத்தனைவிதமான கருத்துகள், சொற்கள் இருக்கின்றன! முழுவதையும் நம்மால் தெரிந்து கொள்ள



முடியாவிடினும் ஒரளவுக்கு ஆவது தமிழின் அற்புதத்தை புரியவேண்டும் என்று கூறி விடையைக் கூறினார்.

கையும் கையும் கடைக்குப் போய்
அக்கையும் தங்கையும் கடைக்கு போய்

கையை வாங்கி வருகையில்
திருக்கை வாங்கி வருகையில்

கையின் காலில் புகுந்து பூ
அக்கையின் காலில் புகுந்தது முள்காம்பூ

கை எடு என்றது கையை
அக்கை எடு என்றது தங்கையை

மாட்டேன் என்றது கை
மாட்டேன் என்றது தங்கை

கையும் கையும் சண்டை பிடிக்க
அக்கையும் தங்கையும் சண்டை பிடிக்க

கையை கண்ட கை
திருகையை கண்ட காக்கை

கையை எடுத்து கையில் வைத்து
திருக்கையை எடுத்து முருங்கையில் வைத்து

கையைத் தின்றது கை
திருக்கையைத் தின்றது காக்கை.

எப்படி பதில் பார்த்தீர்களா! இப்படிப் பல புதிர்கள் கூட இருக்கின்றன. ஆறுதலாய் நாங்கள்

RangaRakes tamilnavarasam.com

அறிவோம். மாலை போய் இரவு வரப்போகுது. பிள்ளைகளே நேரத்துக்கு நாம் வீட்டுக்கு சென்று முகம், கை, கால் கழுவி இறைவனை வணங்கி நம் பாடங்களைப் படிக்க வேண்டும் என்று அப்பப்பா, கூற சிறுவர் சிறுமியர் முற்ற வெளியில் இருந்து புறப்பட்டனர்.



**அத்தியாயம் – 23**

## புதிர்களும் விடைகளும

மக்கள் ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைச் சரிவரச் செய்துவரின் மாநிலம் வகையுற வாழும் என்பது பெரியோர் கூற்று. அது மாத்திரமல்ல, ஒவ்வொரு மனிதனும் தன் கடமையை உணர்ந்து நிறைவேற்றுகையில், அவன் வழி வந்த அவன் செல்வங்களும் அவ்வழி நின்று ஒழுகுவர். குழந்தைகளைச் சரியான நடைமுறையில் நடக்க வைப்பது பெற்றோரின் கடமைப்பாடு. அவரின் கடமை பிள்ளைகளை அன்புடன் பராமரித்து அவர்களை ஒழுக்கத்தை கடைப்பிடித்து நடக்க வைத்தல் வேண்டும்.

ஆசிரியர் அவர்களின் கடமை எதிர்கால வாழ்விற்குத் துணை போக நற்கல்வியை பயிற்றுவித்தல் வேண்டும். ஆனால் இந்தப் பெரியவர் போன்று குழந்தைகளை அறிவூட்டி நடக்க வைப்பவர் அத்திபூத்தாற் போல் ஆயிரத்தில் ஒருவரே. இவர்கள் குறிஞ்சி மலர் போன்றவர் ஆவார். பன்னிரண்டு வருடத்துக்கு ஒருமுறையே மலரும்.

RangaRakes
tamilnavarasam.com

இப்படியானவர்களின் நட்பு கிடைத்தல் அரிது. ஆனால் அந்தக் குழந்தைகட்கு அந்த நட்பு கிடைத்தது. அவர் மூலம் சிறு குழந்தைகள் கேள்விகள் மூலம் பலதைக் கற்றனர்.

அவர்களின் அறிவுக்கு விருந்தாயிற்று. அன்றும் ஒரு விடுமுறை நாள். திறந்த முற்றவெளி பக்கத்தே அலை அலையாக வீசும் கடல். கண்ணுக்கு மிகவும் ரம்மியமான காட்சி. இந்தச் சூழலில் குழந்தைகள் அப்பப்பாவை கேள்வி கேட்டனர். அப்பப்பா சொன்னார். குழந்தைகளே கேள்வி கேட்பது நல்லதுதான். ஆனால் அவை சிரிப்பை மூட்டுபவையாகவும் சுவையாகவும் சில சமயம் அமைந்து விடுதல் உண்டு.

பழைய காலத்தில் நாம் பாடசாலையில் படிக்கையில் கூட இப்படிச் சுவையான கேள்வி பதில் பாலர் புத்தகங்களில் வருவதுண்டு. நாங்களும் படித்து வீட்டிலும் கேள்வி கேட்டுப் புதுப்புது வார்த்தைகள் அர்த்தங்கள் கண்டு பிடிப்போம். இதனால் எமக்குக் கூடுதலான வார்த்தைகளைக் கையாளக்கூடிய தன்மை ஏற்படும். சுவையான கதைகள், கட்டுரைகள் எழுதக்கூடியவர்களாய் வருவோம். உதாரணமாய் இரு குழந்தைகள் இருக்கிறார்கள். ஒரு குழந்தை என்ன என்பதை மாத்திரமே கேட்டு எப்படி மற்ற குழந்தையிடம் தமிழ்ச் சொற்களைக் கற்றுக் கொள்கிறது பாருங்கள்.



| | | |
|---|---|---|
| முதல் பையன் | – | அன்னம் |
| 2–ம் சிறுவன் | – | என்ன அன்னம் |
| 1–ம் சிறுவன் | – | சோத்து அன்னம் |
| 2–ம் சிறுவன் | – | என்ன சோறு |
| 1–ம் சிறுவன் | – | பழஞ்சோறு |
| 2–ம் சிறுவன் | – | என்ன பழம் |
| 1–ம் சிறுவன் | – | வாழைப் பழம் |
| 2–ம் சிறுவன் | – | என்ன வாழை |
| 1–ம் சிறுவன் | – | திரி வாழை |
| 2–ம் சிறுவன் | – | என்ன திரி |
| 1–ம் சிறுவன் | – | விளக்குத்திரி |
| 2–ம் சிறுவன் | – | என்ன விளக்கு |
| 1–ம் சிறுவன் | – | குத்து விளக்கு |
| 2–ம் சிறுவன் | – | என்ன குத்து |
| 1–ம் சிறுவன் | – | இந்தக் குத்து |

எனக்கூறி இரண்டாம் சிறுவன் வயிற்றில் சிறு குத்து போட்டு ஓடுவான். மற்றைய சிறுவன் அவனைத் துரத்திப் பிடிப்பான். இப்படி அறிவு நிறைந்த விளையாட்டுகளை விளையாடினார் என்றார். பின்பு நான் சிறிய கணக்கு கேட்கிறேன் பதில், சொல்வீர்களா என்று அப்பப்பா கேட்டார். எட்டு கிரிக்கெட் பந்து உண்டு. ஒரு பந்து எடையில் சற்றுக் கூடியது. அதைப் பார்த்தாலோ, கையில் எடுத்தாலோ தெரிந்து கொள்ள முடியாது. அதற்குரிய திராசில் போட்டு நிறுத்துப் பார்த்து எடுக்க வேண்டும்.

RangaRakes

tamilnavarasam.com

அந்த திராசிற்கு எடை நிறுத்தம் படிகள் இல்லை. திராசை மூன்று தரத்துக்கு மேல் உபயோகிக்க முடியாது. எப்படி கண்டு பிடிப்பீர்கள்.

குழந்தைகளில் ஒருவன் கணக்கில் கெட்டிக்காரன். அவன் சற்று யோசித்த பின் விடையைக் கூற முற்பட்டான்.

பையன் கூறினான்.

எட்டு கிரிக்கெட் பந்தை சமனாய் பிரிப்பேன். ஒவ்வொன்றிலும் நாலு நாலாய் போடுவேன். அதில் ஒரு பகுதி பந்தின் எடை கூடிய படியால், கீழே இறங்கி நிற்கும். அதை எடுத்துக் கொள்வேன். இது முதல் தரம். எடை நிறுக்கப்படுகிறது. இரண்டாம் தரம் அந்த நாலையும் எடுத்து இரண்டு இரண்டாய்ப் போடுவேன். அப்போ எடை கூடியது. கீழ் வரும் அதில் கூடிய இரண்டு பந்தினை எடுத்து மூன்றாம் தரம் திராசில் போடுவேன். ஒன்று ஒன்றாய் கூடிய எடை உடையதை எடுத்துத் தருவேன். மூன்று தரம் திராஸ் பாவித்தேன். எடை கூடிய பந்தை கண்டு பிடித்தேன் என்றான். சிறுவர்கள் எல்லோரும் பலத்த கைதட்டல். அப்பப்பாவும் சேர்ந்து கைதட்டித் தன் மகிழ்வினைத் தெரிவித்தார். மெத்த நல்லம் மெத்த நல்லம் என்று கூறினார். கூட்டத்தில் அவன் ஓர் கதாநாயகனாய் காட்சி கொடுத்தான். அப்பையனும் மிகவும் மகிழ்வு கொண்டான்.





RangaRakes tamilnavarasam.com

பிள்ளைகள் இப்போ அப்பப்பாவை விடவில்லை. தாமும் பதில் சொல்ல வேண்டும் என்று எல்லா குழந்தைகட்கும் ஆவல். அப்பப்பா அடுத்த கேள்வி கேட்டார். ஒரு மனிதன்; அவனிடம் மூன்று பொருட்கள் இருந்தன. அவை ஒரு கீரைக்கட்டு, ஒரு ஆடு, ஒரு புலி. இவை மூன்றையும் ஆற்றின் மறுகரைக்கு கொண்டு போக வேண்டிய சந்தர்ப்பம் அவனுக்கு வந்து விட்டது. ஆற்றில் ஒரு ஓடம் உள்ளது. அதில் ஒரு பொருளை மாத்திரம் தான் ஏற்றிக்கொண்டு போக முடியும். எப்படி மூன்றையும் அக்கரை சேர்ப்பான் என அப்பப்பா கேட்டார். ஒரு குழந்தை புலியை முதலில் கொண்டு செல்வான், என்றான். அதற்கு பெரியவர் அப்படியானால் அந்த ஆடு கீரைக்கட்டை சாப்பிட்டு விடுமே என்றார். இன்னொரு பையன் கீரைக்கட்டை கொண்டு போவான் என்றான். அதற்கு இன்னொரு பையன், இல்லை அங்கே ஆட்டை புலி தின்றுவிடும் என்றான்.

பெரியவர் அந்த பையன் முதுகில் தட்டிக் கொடுத்தார். அப்போது இன்னொரு பையன் ஆட்டை கொண்டு போவான் என்றான். சரி ஆட்டை கொண்டு மறுகரையில் விட்டு வருவான். அதன் பின் என்ன செய்வான் எனப் பெரியவர் கேட்டார். புலியைக் கொண்டு போய் விட்டு வந்து கீரையை எடுத்து போவதற்குள் புலி ஆட்டை சாப்பிட்டு விடுமே என்றார். அப்போ பையன் கீரை என்று கூறத் தொடங்கி வாக்கியத்தை முடிவுறாமல்



நிறுத்தினான். ஆம் நீ எதிர்பார்ப்பது போல் கீரை வைத்து புலியை எடுக்க வந்தால், ஆடு கீரையைத் தின்றுவிடும் என்றார். குழந்தைகள் விடை சொல்லத் தெரியாது திகைத்தனர். ஒரு பையன் சொன்னான். ஆட்டை முதலில் கொண்டு போய்விட்டு பின் புலியை எடுத்து சென்று விட்டு பின் அங்கிருந்து ஆட்டை எடுத்து வருவான். பின் இந்த கரையில் ஆட்டை விட்டுவிட்டு பின் கீரையை எடுத்து சென்று அங்கே விட்டுவிட்டுப் பின் வந்து ஆட்டை ஏற்றி அக்கரைக்கு கொண்டு செல்வான் என்றான். பெரியவருக்கு ஏக சந்தோசம். குழந்தைகளும் பெரியவரும் சேர்ந்து கைதட்டி தம் மகிழ்ச்சியினைத் தெரிவித்தனர்.

அந்தப் பையனும் தான் பதிலை சரியானபடி கூறியதால் மட்டில்லா மகிழ்ச்சி கொண்டான். சரி கெட்டிக்காரரர் பதில் கூறி விட்டீர்கள். இன்னொரு கேள்வி கேட்கிறேன் என்றார். குழந்தைகள் மகிழ்ச்சியோடு சரி சரி என்றனர். அப்பப்பா சொல்லத் தொடங்கினார். ஒரு கிளிக் கூட்டம் ஆகாயத்தில் பறந்து கொண்டு சென்றது. அப்போ ஒரு வேடுவன் அந்த கிளிக்கூட்டத்தை கண்டு அம்பெய்ய வெளிக்கிட்டான். திடீரென்று தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டு அந்தக் கிளிக் கூட்டத்திடம், நீங்கள் எத்தனை பேர் உள்ளீர்கள் என்று கேட்டான். அதில் தலைமைக் கிளி கூறிற்று. நாங்களும், எங்கள் அளவும், எங்களில் பாதியும், பாதியில் உன்னையும் சேர்த்தால் 100 எனக் கூறிப் பறந்தது. எத்தனை இருக்கும்

RangaRakes tamilnavarasam.com

அந்தக் கிளிகள் என்று கேட்டார். சில பையன்கள் ஏதோ கணக்கு போட்டனர். ஒரு சிறுமி சிறிது யோசித்து ஏதோ கணக்கை எழுதிப் பார்த்துவிட்டு அப்பப்பாவிடம் முப்பத்தாறு எனக்கூறிற்று. குழந்தைகள் சில அவளைத் திரும்பிப் பார்த்தனர். ஒரு சிறுவன் முப்பதாறை வைத்து கணக்கு போட்டுப் பார்த்தான். இதில் முப்பத்தாறு கிளி என்றால் இதே போல் ஒரு பகுதியை என்றால் அதுவும் முப்பத்தாறு. அப்போ முப்பத்தாறும் முப்பத்தாறும் எழுபத்திரண்டு. எங்களில் அரைவாசி பதின்எட்டு. அதின் அரைவாசி ஒன்பது. எழுபத்திரண்டும் பதின் எட்டும் தொண்ணூறு அதோடு ஒன்பது தொண்ணூற்று ஒன்பது, வேடுவன் ஒன்று; ஒரு நூறு சரி. விடை சரி. இந்தச் சிறுமி பதில் எப்படி எடுத்தாள் என்று யோசித்தான். பதிலைச் சரியாகச் சொன்ன சிறுமிக்காக பெரியவரும் மற்றைய குழந்தைகளும் கை தட்டி கரகோஷம் செய்தனர்.

அப்பப்பா அந்தக் குழந்தையிடம் நீ விடையை எப்படிக் கண்டுபிடித்தாய் எனக் கேட்டார். அந்தச் சிறுமி சொன்னாள். கணக்கின் கீழிருந்து சென்றேன். எங்களில் பாதியில் பாதி ஒரு பங்கு பாதி இரண்டு பங்கு நாங்கள் நாலு பங்கு எங்களை போன்றோர் நாலு பங்கு. ஆகவே மொத்த பங்குகள் = 1+2+4+4 = பதின் ஒரு பங்கு. நூறில் வேடுவனைக் கழித்தால் தொன்னூற்றி ஒன்பது.

ஆகவே தொன்னூற்றி ஒன்பதை பதின் ஒன்றால் பிரித்தால் ஒன்பது. ஒன்பது ஒரு பங்கு. ஆகவே நாலு



பங்கு முப்பத்தாறு எனக் கூறினார். மெத்த மெத்த சரி என அப்பப்பா மெச்சினார். பிள்ளைகளும் மகிழ்வு கொண்டனர்.

பின் அப்பப்பா சரி, பிள்ளைகளே! உங்களுக்கு இன்னொரு கேள்வி கேட்கிறேன். இது விடுகதை மாதிரி இருப்பினும் இது ஓர் புதிர் கேள்வி; பதில் சொல்லுங்கள் பார்க்கலாம் என்று கேள்வியை சொல்லத் தொடங்கினார்.

ஆறு எழுத்தாலான மனிதன் பெயர் இது. மூன்று எழுத்தாலான பொருளின் நடு எழுத்தில் வந்துதிக்கும்.

மனிதனின் பெயரின் முதலாம் எழுத்து தாவர இனத்தில் வரும்.

இரண்டாம் எழுத்து கடல் வாழ் பிராணி.

மூன்றாம் எழுத்து பறக்கும் பறவை.

நாலாம் எழுத்து ஓடும் மிருகம்.

ஐந்தாம் எழுத்து மனிதன் உடல் உறுப்பு.

ஆறாம் எழுத்து – பெண்ணின் ஒரு பருவம்.

இம் மனிதன் பெயர் என்ன. இது பெரியவரின் கேள்வி. சிறுவரும் சிறுமியரும் மௌனமாயினர். அவர்களில் சிலர் ஆறு எழுத்தில் உள்ள பெயர்களை ஆராய்ந்து சில பெயர்களை மனதில் எடுத்தனர். சிலர் மூன்று எழுத்தாலான தாவரங்கள் எவை எவை என எண்ணினர்.

RangaRakes tamilnavarasam.com

அரசு, வேம்பு, புன்னை, நாவல் என தாவரம் நீண்டு கொண்டு உள்ளது. சில சிறுவ சிறுமியர் மிருகம் பறவை மூன்று எழுத்து உள்ளது. எவை எவை கணக்கிட்டனர். சிறுவ சிறுமியருக்கு ஒரு எண்ணம் உதித்தது. தாங்கள் ஆறாய் பிரிந்து நின்று தாவரம் கடல்வாழ் பிராணி, மிருகம், பறவை என்று ஆறு பகுதிகளிலும் உள்ள மூன்று எழுத்தாலான பொருள் என்ன என்பதை ஆராய முற்பட்டனர். பறவையைச் சிந்தித்தனர்.

காகம், குருவி, மயில், கொக்கு எனப்பல அவர்கள் சிந்தனையுள் வந்தன. கடல் வாழ்பிராணியை சிந்தித்தனர். நண்டு, இறால், முதலை, சங்கு வந்தன. மீன் இனங்களை சிந்தித்தனர். மணலை நகரை என சிந்தித்து எடுத்தனர். மிருகம் பற்றி சிந்திக்கத் தலைப்பட்டனர். கரடி, ஓநாய், வேங்கை எனச் சில மிருகங்களே மூன்று எழுத்தில் அவர்கள் சிந்தனைக்கு கிடைத்தது. ஐந்தாம் எழுத்து மனிதன் உடல் உறுப்பு என்னவென யோசித்தனர். முகம், மூக்கு, நெஞ்சு, விரல், பாதம் இவற்றை எடுத்தனர். அடுத்த கோஷ்டி பெண்ணின் பருவம் எது என யோசித்தது. மகள், விதவை, கன்னி, தையல் என எடுத்தன. அவர்களின் சிந்தனை கூர்மையாகி கடைசி எழுத்தை எடுத்தனர். மகளில் வரும் க விதவை எழுத்தில் வரும் த என்னும் எழுத்து இருக்க முடியாது. இவை சொற்களில் இறுதி முடிவில் வராத எழுத்து. எனவே கன்னியில் வரும் 'ன்' கடை எழுத்தாய் இருக்கும்.



எனவே மகளிரின் பெயர் 'ன்'னில்தான் முடிவடையும் எனக் கொண்டார். உடல் உறுப்பை பார்வை இட்டனர். முகத்தில் வரும் கண் என்பது வராது. மூக்கு வரலாம். பாதத்தில் வரும் த வரலாம் என எடுத்தனர். ஓடும் மிருகம் தாம் எடுத்த எழுத்தை போட்டு பார்த்தனர். கரடியில் வரும் ரவை போட்டு பார்த்தனர். கன் ஒரு ரவை மூன்றுக்கு சேர்த்தனர். ரகன் வந்தது. மற்றது ரதன் என்று ஒரு பையன் கூறினான். ஓநாயில் இருக்கும் நாவை எடுத்து தன்னுக்கு முன்னால் போட்டால் நாதன் வருகிறது என்றான். எனவே ரகன் ரதன் நாதன் என மூன்று சொற்களை எடுத்தனர்.

பறக்கும் பறவையை நோட்டம் இட்டனர். அச்சமயம் சில சிறுவர் தாவரம் பார்த்து அதில் ர எழுத்தும் வ வும் பெயரின் முதல் எழுத்தாய் வரலாம் என யோசித்தனர். கடல் வாழ் பிராணியில் எது வரும் எனப் பார்த்தன. ரவைத்து பாத்தால் சங்கு வரும். ரங் என்று வரும் ரங் என்ற சொல், மூக்கு க எழுத்து வேண்டும்.

எனவே பறவை காகம் எனக் கண்டுபிடித்தனர். இரண்டையும் சேர்த்து ஒரு மாணவன் கூவினான். ரங்கநாதன் என்று எல்லோரும் ஒரு புதையலை தாம் கண்டு பிடித்தது போல் மகிழ்ந்தனர். அப்பப்பாவும் மிக மகிழ்வு கொண்டார். குழந்தைகளே மிகவும் சந்தோஷம். இப்படித்தான் பலவற்றை கண்டுபிடித்து எடுக்க வேண்டும். கண்டுபிடித்தல் அறிவு வளர்ச்சிக்கு பிரதானமானது.

RangaRakes tamilnavarasam.com

இதனால் பலவற்றைக் கண்டுபிடித்து மேதைகளாகவும் நீங்கள் வரலாம் என்றார். குழந்தைகள் இதைக் கேட்டு பெருமிதம் கொண்டனர்.

பின் அப்பப்பா சொன்னார். நல்லது, உங்களுக்கு அடுத்த கிழமை பாடசாலை தொடங்குகிறது. நீங்கள் புதிய வகுப்பில் புதிய பாடங்களைப் படிப்பீர்கள். எல்லோரும் நன்கு படித்து நல்ல பிள்ளைகளாய் வளர வேண்டும். இந்த நானிலம் உங்களைப் போற்றவேண்டும். எனக்கு என் விசா முடிவடைகிறது. நானும் கனடா போக வேண்டி இருக்கிறது. அடுத்த வருடம் சில சமயம் உங்களை சந்திக்க கூடும். உங்கள் வாழ்க்கை நல்ல பெறுமதியான நல்வாழ்க்கையாய் இருக்க இறைவன் அருள் பாலிக்கட்டும். சரி, வருகிறேன் குழந்தைகளே என விடை பெற்றுக்கொண்டார். அவர் கண்களில் கண்ணீர் திரையிட்டது. குழந்தைகளில் சிலர் அவர் பிரிவையொட்டி அழுதுவிட்டனர்.

அவரும் அவர்களை முதுகில் தட்டி கவலைப்படாதீர்கள். வாழ்க்கை இதுதான். சிலர் வருவார், சிலர் செல்வார் எல்லாவற்றை நாம் ஏற்று வாழப் பழகவேண்டும் இதுதான் வாழ்க்கை என்றார்.

கற்பனைப் பாத்திரமாகி நின்ற சிறுவர் சிறுமியர் அப்பப்பாவாகிய பெரியவர் எல்லோரும் நமக்கு தகுதி வாய்ந்த விஷயங்களை அள்ளித் தந்து சிறுவர்



சிறுமியராகிய எமது அறிவினைப் பெருக்கி வாழ்க்கையின் சில அறிவான விஷயத்தை எம்மோடு பகிர்ந்து கொண்டு இருக்கின்றனர். அந்தச் சிறுவர் சிறுமியர் போன்று நாமும் அறிவான விஷயங்களை அறிந்து கொள்வோம் என இதைப் படிக்கும் சிறுவர் சிறுமியர் நினைத்து உறுதி பூண்டால், இதை எழுதும் நானும் கூட மட்டில்லா மகிழ்ச்சியினைப் பெறுவேன் என்று கூறி இந்த நூலினை உங்கள் முன் படிப்பதற்கு வைக்கிறேன்.

RangaRakes tamilnavarasam.com